97

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

உங்கள் குடும்பத்தினர் மற்றும்
நிறுவனத்தினர் அனைவரது
மேம்பாட்டிற்குமான
ஆன்மிக - பண்பாட்டு இதழ்

நவம்பர்-2017
கார்த்திகை
விலை ₹12

ISSN 0972-4400 97
9 770972 440005

முக்திநாத் யாத்திரை - 6/10 நாட்கள் (மாதம் ஒரு குழு)

2000ம் ஆண்டு முதல் தொடர்ந்து 19ம் ஆண்டு பயணம்

திருக்கயிலாயம் - மானஸரோவர்

13 நாட்கள் மே முதல் செப்டம்பர் வரை மாதம் ஒரு குழு புறப்படுகிறது

ஒவ்வொரு பிரதோஷத்தன்றும் திருக்கயிலையை வலம் வருகின்றோம்.

ஒவ்வொரு முறையும் மானஸரோவரில் நீராடி வேள்வி செய்து தங்குகின்றோம்

திருக்கயிலாயம்-மானஸரோவர் ஹெலிகாப்டரில் 11 நாட்கள்

திருக்கயிலாயம், மானஸரோவர் யாத்திரைக்கு சம்பள ஆட்களை அனுப்புவதில்லை. 18 ஆண்டுகள் அனுபவமுள்ள நாங்களே உங்களுக்கு சேவை செய்ய வருகின்றோம்.

தமிழக அரசின் மானிய தொகை கைலாஷ் யாத்திரைக்கு ரூ.40,000, முக்திநாத் யாத்திரைக்கு ரூ.10,000. எங்கள் குழுவில் வரும் அடியார்களுக்கு கிடைக்க ஆலோசனை வழங்கப்படும்.



ஆன்மீக இலங்கை 7 நாட்கள் (மாதம் ஒரு குழு)

ஸ்டார் ஹோட்டலில் தங்கும் வசதி. உயர்தர சுவையான உணவு. A/c சொகுசு பஸ். ஒவ்வொரு இடத்திலும் வழிகாட்டியின் விளக்கவுரை

கொழும்பு, சின்னகதிர்காமம், முனீஸ்வரம், மானாவாரி, அனுராதபுரம், தலைமன்னார், திருக்கேதீஸ்வரம், யாழ்ப்பாணம், நாகப்பூசணி அம்மன் கோவில், நகுலேஸ்வரம், நல்லூர் கந்தசாமி கோவில், திருக்கோணீஸ்வரம், மாத்தளை மாரியம்மன், கண்டி, ராம்போதா ஆஞ்சநேயர் கோவில், ராவணன் நீர்வீழ்ச்சி, நுவரேலியா, அசோகவனம், யானைக்காடு, செல்லக்கதிர்காமம், கதிர்காமம், ஹிக்குடுவா பீச், தம்புல்லா தங்கபுத்தர், தலதமாலிகா புத்தர் பல் இருக்கும் இடம், டீ எஸ்டேட் (மூலிகை தோட்டம்).

கட்டணத்தை குறைத்து வசதிகளையும், பயண நாட்களையும் குறைப்பதில்லை. இதுவே எங்கள் வெற்றிக்கு காரணம்

எங்களுடைய அனைத்து பயணத்திற்கும் டிசம்பர் 31-க்குள் முன்பதிவு செய்யும் ஒவ்வொருவருக்கும் ரூ.5000ம் வரை கட்டணச்சலுகை உண்டு.

நவசோதிர்லிங்கம் பண்டரிபுரம், வீரடி, துவாரகை கடல் கோவில் - 16நாட்கள் (மாதம் ஒரு குழு)

மந்த்ராலயம்-நவபிருந்தாவனம் பண்டரிபுரம், வீரடி சனிசிங்கனாப்பூர் - 7நாட்கள்

வீரடி, சனிசிங்கனாப்பூர் விமானத்தில் 1/2 நாட்கள்

அமர்நாத் பனிலிங்கம் தரிசனம்

ஜூலை 2, ஜூலை 15

இரயிலில்-15நாட்கள்/ விமானத்தில் 10 நாட்கள்

ஹெலிகாப்டரில் 5 நாட்கள்

பூரி, கொல்கத்தா, கயா, காசி/ஹரித்துவார் டெல்லி, ஆக்ரா,ஜெய்ப்பூர்-10/15 நாட்கள்

கங்கோத்ரி, யமுனோத்ரி கேதார்நாத், பத்ரிநாத்

இரயில் 17 நாட்கள் புறப்பாடு : மே,

விமானத்தில் 13 நாட்கள் ஜூன்.செப்டம்பர்

விமானத்தில் காசி, கயா, அலகாபாத் 5 நாட்கள் மாதம் ஒரு குழு

ஐரோப்பா 14 நாட்கள்

அந்தமான் தீவுகள் விமானத்தில் 5 நாட்கள்

குறைந்த கட்டணம் அனைத்து செலவுகளுடன் ரூ. 22, 001

சீனா ஹாங்காங் சுற்றுலா 8 நாட்கள்

மலேசியா, சிங்கப்பூர்

செண்தோஸா, ஜென்டிங், பத்துமலை, கோலாலம்பூர் யுனிவர்சல் ஸ்டுடியோ

6 நாட்கள் மாதம் ஒரு குழு

துபாய், அபுதாபி பாலைவன ஷபாரி

4 நாட்கள்

மாதம் ஒரு குழு

ராயல் ராஜஸ்தான்

பிப்ரவரி, அக்டோபர் 12 நாட்கள்

AC பஸ், AC இரயில், AC ரூம்

பேங்காக் பட்டயா 4 நாட்கள்

மாதம் ஒரு குழு

கம்போடியா வியட்நாம் 9 நாட்கள்

மாலத்தீவுகள் 4 நாட்கள்

இந்தோனேஷியா பாலித்தீவுகள் 7 நாட்கள்

பூடான் சிக்கிம் 10 நாட்கள்

மாதம் ஒரு குழு

மொரிசியஸ் 5 நாட்கள்

(மாதம் ஒரு குழு)

கேங்டாங் டார்ஜிலிங் 10 நாட்கள்

சிம்லா குல்லு மணாலி 10 நாட்கள்

தாங்கள் ஒரு குழுவாக இருந்தால் விரும்பும் தேதியில் சுற்றுலாக்கள் நடத்தித் தருகின்றோம்.

ஒரு குழுவிற்கு 32 அன்பர்கள் மட்டும். அனைத்து உள்நாடு, வெளிநாடு சுற்றுலாக்களுக்கு அணுகவும்

மனோகர் டிராவல்ஸ்

குழுவாக இருந்து போன் செய்தால் போதும் நேரில் வருகின்றோம்

www.manohartravels.com

e-mail : manohartravvels@gmail.com

2/176, பெரியண்ண வீதி, ஈரோடு - 638001.

செல் : 94433 80152, 94434 04919

பெரியமேட், சென்னை-600 003.

செல் : 95780 38845, 81220 20021

THE RAMCO CEMENTS LIMITED

RAMCO

THE RAMCO CEMENTS LIMITED

Auras Corporate Centre, V Floor, 98-A, Dr. Radhakrishnan Salai, Mylapore,
Chennai - 600 004, India. Tel: +91 44 2847 8666.
Website: www.ramcocements.in

மதம் என்பது மனிதனிடம் ஏற்கெனவே இருக்கின்ற தெய்விகத்தை வெளிப்படுத்துவது.
- சுவாமி விவேகானந்தர்

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் தமிழ் மாத இதழ்

தொகுதி 97 ❖ இதழ் 11
❖ நவம்பர் 2017 ❖ ஹேவிளம்பி ஹ்ரு கார்த்திகை மீ

கல்வி என்பது மனிதனிடம் ஏற்கெனவே இருக்கின்ற பூரணத்துவத்தை வெளிப்படுத்துவது.
- சுவாமி விவேகானந்தர்

சிறுகதைப் போட்டியில் 2-ஆம் பரிசு பெற்ற கதை

30 **மாற்றம்** - சனுஷினியா

இளைஞர்களுக்கு / மாணவர்களுக்கு

11 **ஒரே முடிவு உயர்வு தரும்** - மெர்வின்

12 **ஏன் ஆங்கிலத்தில் பேசப் பயப்படுகிறோம்?** - சுவிர்

14 **சுவாமிஜியும் சுதந்திர இயக்கமும்** - சங்கரி பிரசாத் பாஸு

18 **வளர்க்காதீர்கள்; வளர விடுங்கள்** -குருதாசன்

25 சிறுவர் சமய ஞானம்: **கோயில் வழிபாடு** - மாதவம்

42 **கல்வியால் முன்னேற்றம் பெறு!** - கலியமூர்த்தி ஐ.பி.எஸ்.

46 படக்கதை: **சகோதரி நிவேதிதை-6** படம்:சுனிதா வசு

50 ஹாஸ்ய யோகம்: **அவன் எழுதிவிட்டான்!**

பக்தர்களுக்கு / அன்பர்களுக்கு

5 **அபயம் அளிக்கும் அமுதமொழிகள்** - சுவாமி அபவர்கானந்தர்

8 **கந்தர் சஷ்டி கவசமும் உளவியலும்**-வைரவன்

20 வியாசர் அருளிய **பாரத சாவித்ரி**

22 **வேதாந்த தேசிகர்** - மும்பை ராமகிருஷ்ணன்

26 **பெண்களின் வாழ்க்கை நிலை மேம்பாடு** - ப்ரவ்ராஜிகா பவானிப்ராணா மாதாஜி

34 **ஜபமும் தியானமும் - 7** - சுவாமி தேசிகானந்தர்

36 **சகோதரி நிவேதிதை காட்டும் இந்திய வரலாறு** - யதீஸ்வரி

41 **வைஷ்ணவம்** - சுவாமி நீலமாதவானந்தர்

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் செயலியை அலைபேசியில் பதிவிறக்கம் செய்ய

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் சந்தா விவரம்

	இந்தியா	இதர நாடுகள்
தனிப்பிரதி	₹ 12/-	
ஓர் ஆண்டுச் சந்தா	₹ 140/-	₹ 1400/-
3 ஆண்டுச் சந்தா	₹ 420/-	₹ 4200/-
5 ஆண்டுச் சந்தா	₹ 700/-	₹ 7000/-
20 ஆண்டுச் சந்தா	₹ 2100/-	

வெளிநாட்டுச் சந்தாத் தொகையில் விமானத் தபால் செலவும் அடக்கம்.

சந்தா, முகவரி மாற்றம், அஞ்சல்வழி புத்தக விவரங்களுக்கு 044 - 24621110 (Ext : 215) என்ற தொலைபேசி அல்லது mail@chennaimath.org என்ற இ-மெயில் மூலம் தொடர்பு கொள்ளவும்.

கட்டுரைகள், விளம்பரங்கள் தொடர்பான தகவல்களுக்கு 044 - 24621110 (Ext : 211) என்ற தொலைபேசி அல்லது srv@chennaimath.org என்ற இ-மெயில் மூலம் தொடர்பு கொள்ளவும்.

சந்தாத் தொகையை செக் / டி.டி.யில் செலுத்த 'Sri Ramakrishna Math' என்ற பெயரில் எடுத்து முழு முகவரி, அஞ்சல் குறியீட்டு எண், தொலைபேசி மற்றும் இ-மெயில் இருந்தால் அதையும் தவறாது குறிப்பிட்டு எங்களுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மணியார்டர் (M.O.) மூலம் அனுப்புபவர்கள் Sri Ramakrishna Vijayam, Sri Ramakrishna Math, No. 31, Ramakrishna Math Road, Mylapore, Chennai - 600004 என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

http://donations.chennaimath.org// என்ற இணைய தள முகவரியில் நன்கொடைகளை நேரடியாகச் செலுத்தலாம்.

மாஸ்டர், விசா கிரெடிட் கார்டுகள் மூலம் மடத்தின் இணைய தளத்தில் சந்தா கட்டலாம்; நூல்கள் வாங்கலாம்.
www.chennaimath.org, e-mail : mail@chennaimath.org

Printed by B. Rajkumar, Chennai - 600014 and Published by Swami Vimurtananda on behalf of Sri Ramakrishna Math Trust, Chennai-600004 and Printed at Rasi Graphics Pvt. Limited, No.40, Peters Road, Royapettah, Chennai-600014 and Published at Sri Ramakrishna Math Trust, No.31, Ramakrishna Math Road, Mylapore, Chennai-600004.
Editor : Swami Apavargananda

ஆசிரியர் : சுவாமி அபவர்கானந்தர்

அபயம் அளிக்கும் அமுதமொழிகள்

மனிதனின் நிஜ இயல்பு ஆத்மானந்தம். ஆனால் அவன் அதிலிருந்து வழுவி, பிறவிப் பிணி எனும் கடலில் சிக்கக் காரணம் அறியாமையாகிய ஆலகால விஷமே.

மனிதன் பிறவிப் பிணியாகிய அந்தக் கடலைக் கடந்து இன்ப துன்ப அனுபவங்களை மீண்டும் மீண்டும் பெறுகிறான். இதிலிருந்து விடுபட, குரு மூலம் இறையருள் தேவை.

குருவின் வழிகாட்டுதலின்படி ஆன்மிக நெறியில் சென்று, தன்னை தெய்வ நிலைக்கு உயர்த்திக் கொள்ளப் போராடும்போது, இறையருளால் இறையனுபூதி என்ற அமுதம் கிடைக்கிறது. அதனால் மட்டுமே ஒருவர் பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடக்க முடியும் என்பர் மகான்கள்.

யார் குரு? சச்சிதானந்தமே குரு என்பார் ஸ்ரீராமகிருஷ்ணர். அந்த சச்சிதானந்தமே குருதேவர் ஸ்ரீராமகிருஷ்ணராய் அவதரித்தது. தன் அவதாரத்தில் சதா சர்வ காலமும் பல்வேறு இறைபாவனைகளில் தோய்ந்ததோடு மட்டுமின்றி, ஆன்மிக அன்பர்கள் முக்தியைப் பெறவும் மனித குலம் மேன்மையுறவும் இக்காலத்திற்குத் தேவையான உபதேசங்களை குருதேவர் அருளியிருக்கிறார்.

அதனை குருதேவரின் சீடரான மகேந்திரநாத் குப்தர் எனும் 'ம', 'ஸ்ரீராம கிருஷ்ணரின் அமுதமொழிகள்' என்ற தலைப்பில் தொகுத்தளித்தது மனித இனம் செய்த புண்ணியம்.

தவ கதாம்ருதம் தப்தஜீவனம்
கவிபிரீடிதம் கல்மஷாபஹம்
ச்ரவணமங்கலம் ஸ்ரீமதாததம்
புவி க்ருணந்தி தே பூரிதா ஜனா:

உமது அமுத மொழிகள்
துன்பத்தைத் துடைப்பவை
ஞானிகள் போற்றுபவை
பாவங்களைப் போக்குபவை
கேட்பதற்கு இனியவை
செல்வத்தை அளிப்பவை
உமது அமுதமொழிகள்
பேசிடும் நல்லோர்
புண்ணியம் செய்தோர்.

மேற்கண்டது ஸ்ரீமத்பாகவதத்தில் கோபியர்கள் துதித்த கோபிகா கீதம். இந்த வரிகள் ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகளுக்கு முற்றிலும் பொருத்தமாக அமைந்துள்ளன.

அமுதமொழிகளைப் படிக்கும் முன் மேற்கண்ட சுலோகத்தை வாசிப்பது வழக்கம்.

துன்பத்தைத் துடைப்பவை

குருதேவரைச் சந்திப்பதற்குமுன் 'ம' குடும்பப் பிரச்னை காரணமாக, ஒரு நாள் இரவில் வீட்டைவிட்டு வெளியேறினார். அப்போது தனது மருமகன் சிதுவின் ஆலோசனையின் பேரில் ஸ்ரீராமகிருஷ்ணரைத் தரிசிக்க தக்ஷிணேஸ்வரம் வந்தார்.

'தற்கொலை செய்து கொள்ளப்போன நான் உண்மையான 'என்னை'க் கண்டுபிடித்தேன். குடும்பப் பிரச்னைகள் என்னை இறைவனிடம் அழைத்துச் சென்றன. குருதேவரைச் சந்தித்தபிறகு நான், என் கடந்த காலத்தை அடியோடு மறந்து விட்டேன். அவரது வசீகரமும் ஆன்மிக ஆற்றலும் என் துன்ப நினைவுகளை முற்றிலுமாக அழித்து விட்டன' என்று பின்னாளில் குறிப்பிட்டார் 'ம'.

'நோயுற்றுப்படுத்த மூன்றாண்டு காலத்தில் அமுதமொழிகளே நான் வாழ்வதற்கு ஊன்றுகோலாக இருந்தன' என்கிறார் குருதேவரின் இல்லறச் சீடர்களுள் ஒருவரான கிரீஷ் சந்திரர்.

இதன்மூலம் அமுதமொழிகள் துன்பத்தைத் துடைப்பவை என்பது புலனாகிறது.

ஞானிகள் போற்றுபவை

'இறைவன் இங்கும் அங்கும் எங்கும் இருக்கிறார் என்ற உணர்வு வருவது ஞானம்' என்கிறார்

நாகரிகங்கள் இயந்திரங்களால் உருவாக்கப்படவில்லை; மாறாக சிறப்பான பண்புகளால் உருவானவை. - டாக்டர் எஸ்.ராதாகிருஷ்ணன்

ஸ்ரீராமகிருஷ்ணர். மக்களுக்கு ஆன்மிக விழிப்புணர்வை உண்டாக்கி, ஞானத்தை அருள்வதே அமுதமொழிகளின் பிரதான நோக்கம்.

ஆகவேதான் அன்னை ஸ்ரீசாரதாதேவி, சுவாமி விவேகானந்தர், சுவாமி ராமகிருஷ்ணானந்தர், சுவாமி பிரேமானந்தர் போன்றோர் 'ம' விற்குக் கடிதம் எழுதி அமுதமொழிகளைப் போற்றினர். அன்று தொட்டு இன்றுவரை ராமகிருஷ்ண மடாலயங்கள் மற்றும் இதர சம்பிரதாய சாதுக்கள் அமுதமொழிகளை ஓர் ஆன்மிகக் கையேடாகக் கொண்டிருக்கின்றனர்; போற்றுகின்றனர்.

ராமகிருஷ்ண இயக்கத்தின் 9-வது தலைவரான சுவாமி மாதவானந்தர் தமது அந்திமக் காலத்தில் அமுதமொழிகளைப் படிக்கச் சொல்லிக் கேட்டபடி திவ்ய ஆனந்தத்தில் திளைப்பதுண்டு.

தினமும் இரவு படுக்கும்முன் அமுத மொழிகளைப் படிப்பதை ஓர் ஆன்மிகச் சாதனையாக பல்வேறு துறவிப் பெருமக்களும் பக்தர்களும் கடைப்பிடித்து வருகிறார்கள்.

பாவங்களைப் போக்குபவை

'விருப்பம் இல்லாவிட்டாலும் பலவந்தமாக ஏவப்பட்டவனைப் போல் எதனால் தூண்டப்பட்டு மனிதன் பாவம் செய்கிறான்?' என்று அர்ஜுனன் கேட்டதற்கு பகவான் பதிலளிக்கிறார்:

'ரஜோ குணத்திலிருந்து பிறந்ததும் எல்லாவற்றையும் விழுங்குவதும் பெரும்பாவம் நிறைந்ததுமான காமமும் குரோதமும் மனிதனின் எதிரிகள் என்று அறிவாய்.'

மனிதன் இனி பாவம் செய்யாதிருக்கவும் செய்தவற்றின் தீய பலனைப் போக்கவும் வழி காட்டுபவை அமுதமொழிகள்.

'பாவி பாவி என்று சொல்லிக் கொண்டே இருந்தால் ஒருவன் பாவியாகவே ஆகிறான். ''நான் இறைவனின் திருநாமத்தை ஓதுகிறேன். என்னிடத்தில் பாவமாவது இருப்பதாவது'' - இத்தகைய நம்பிக்கை வேண்டும். இறைநாமத்தின் சக்தியில் நம்பிக்கை வேண்டும்' என்று அருள்கிறார் குருதேவர்.

இதன் மூலம் இறைநாமத்தை ஓதுவதனால் ஒருவன் பாவ வினைகளிலிருந்து விடுபட்டு, புனிதம் பெறுகிறான் என்பது தெளிவாகிறது.

அமுதமொழிகள் யாவும் பாவத்தைத் தொலைத்துப் புனிதம் பெறுவதற்கான மருந்தாகும்.

சில ஆண்டுகளுக்கு முன்பு தினமலர் வாரமலர் கேள்வி - பதில் பகுதியில், 'மனது சரியில்லை. அதைக் கட்டுப்படுத்தி நல்ல நிலைக்குப் போக என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள்?' என்று ஒருவர் கேட்டிருந்தார்.

அதற்கு, 'ராமகிருஷ்ண மடம், ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுத மொழிகள் என்று மூன்று பெரிய புத்தகங்களை வெளியிட்டிருக்கிறது. விலையும் மலிவு, அதைப் படியுங்கள். உங்களுக்கு வேண்டியது கிடைக்கும்' என்று பதில் அளிக்கப்பட்டிருந்தது.

கேட்பதற்கு இனியவை

பகவான் தமது ராமகிருஷ்ண அவதாரத்தில் கடினமொழியை உபயோகிக்கவில்லை. மிகவும் எளிய கிராம மக்கள் உரையாடுகின்ற மொழியிலேயே பக்தர்களுக்கு அருளியிருக்கிறார்.

இதைவிட எளிமையாகக் கூற இயலாது என்று சொல்லும் அளவிற்கு அவரது மொழிகள் எளிமையானவை. இதைப் படிப்பதும், படிக்கக் கேட்பதும் ஒரு சுகமான அனுபவம். ஸ்ரீராமகிருஷ்ணரின் மொழிகளில் பாண்டித்யம் இல்லை. பாமரத்தனமே உள்ளது. இவை கேட்கக் கேட்கத் தேன் பாய்வது போன்று காதிற்கு இனிமையாக இருக்கின்றன.

சொல்கின்ற விஷயம் கடினமாக இருந்தால் கேட்பதற்கு இனிக்காது. அதுவும் ஆன்மிகமாக இருந்தால் சொல்லவே வேண்டியதில்லை. மிகக் கடினமான ஆன்மிக விஷயங்களை

இந்தியாவின் ஒருமைப்பாடு

'ஸ்ரீராமகிருஷ்ணரின் அமைதியான பெருவாழ்வை முன்பைவிடப் பல மடங்கு இப்போது நான் நினைத்துப் பார்க்கிறேன். இந்தியாவின் எல்லா மூலைமுடுக்குகளிலும் நமது ஆண்கள் நின்று - செயல் வீரர்களாக அல்ல - வெறுமனே நின்று பிரார்த்தனை செய்பவர்களாக, சுவாமிஜி மற்றும் ஸ்ரீராமகிருஷ்ணரின் பெரு வாழ்க்கையை நினைத்துப் பார்ப்பவர்களாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

இந்த இரண்டு பெரும் வாழ்க்கையும்தான் இந்தியாவின் ஒருமைப்பாடு. இந்தியா செய்ய வேண்டியது எல்லாம் இந்த இருவரையும் தன் இதயத்தில் போற்றிப் பாதுகாப்பது மட்டும்தான்.'

- சகோதரி நிவேதிதை

சொற்களை விடச் செயல்கள்தான் உரத்த குரலெழுப்பும். - பழமொழி



மிக எளிமையாகக் கூறுவதற்கு ஸ்ரீராமகிருஷ்ணருக்கு நிகர் வேறு யாரும் இல்லை. இதை அமுதமொழிகளைப் படிப்பதன் மூலம் உணரலாம்.

வந்தே மாதரம் என்ற பாடலை இயற்றிய பங்கிம் சந்திரர் ஸ்ரீராமகிருஷ்ணரைத் தரிசித்தார். அவரிடம் குருதேவர் ''மனிதனின் கடமை என்ன?'' என்று கேட்டபோது, ''உணவு, தூக்கம், பெண் இன்பம்'' என்றார். உடனே குருதேவர் அவரைக் கடிந்து கொண்டு பல விஷயங்களைக் கூறினார். குருதேவர் தம்மைக் கடிந்து பேசினாலும் அதில் இனிமையும் உண்மையும் இருப்பதை பங்கிம் உணர்ந்து கொண்டார்.

செல்வத்தை அளிப்பவை

அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு.

'பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலகத்து வாழ்க்கை இல்லாததுபோல் அருள் இல்லாதவர்க்கு அவ்வுலகத்து வாழ்க்கை இல்லை' (குறள்: 247) என்கிறார் வள்ளுவர்.

எத்தகையவராயினும் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ வேண்டுமென்றால் ஒருவன் ஊக்கம், தன்னம்பிக்கை, நல்ல வழிகாட்டுதல் போன்றவற்றைப் பெற்றிருத்தல் அவசியம்.

'ஒன்றுக்கும் உபயோகமற்றவர்கள் என்று பெயர் வாங்கி யவர்களையும்கூட ஸ்ரீராமகிருஷ்ணர் அன்பாகப் பேசி உற்சாகமளிப்பார். அவர்களை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்வார்' என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

அமுதமொழிகளைப் படிப்பதினால் ஒருவரின் அச்சம், தயக்கம், தாழ்வு மனப்பான்மை போன்றவை அகல்கின்றன. சோம்பலுக்கு இருப்பிடமான தமோ குணத்தை விட்டொழிப்பதற்கான வல்லமையைத் தருகின்றன. பாவத்தைத் தூண்டும் ரஜோ குணத்திலிருந்து ஒருவனை விலக்குகின்றன. சத்துவ குணத்தை வளர்க்கச் செய்து, ஒருவரை நல்ல மனிதராக, புலன்களை வென்ற மாமனிதராக ஆக்குகின்றன அமுதமொழிகள்.

ஒருமுறை அதர்சேன், தன் நண்பர் ஒருவர் குழந்தை இறந்த துக்கத்தில் தவித்தபோது குருதேவரிடம் அவரை அழைத்து வந்தார்.

அப்போது குருதேவர் அவர்களுக்காகப் பேசி, பக்திப் பாடலையும் பாடினார். ஆன்மிகச் செல்வத்தைப் பெறுவதற்கான வழிகளையும் போதித்தார்.

இறுதியில் அதர், 'உங்களிடம் ஆறுதலைப் பெறவே வந்தோம். அது கிடைத்துவிட்டது' என்று குருதேவரைப் போற்றினார்.

அமுதமொழிகள் பேசும் நல்லோர் புண்ணியசாலிகள்

ஸ்ரீராமகிருஷ்ணரைப் பற்றிக் கேள்விப்பட்டு, சுபோத் என்கின்ற சிறுவன் தன் நண்பனோடு அவரைக் காண தக்ஷிணேஸ்வரம் வந்தான்.

அவனைக் கண்டதும் குருதேவர், 'உன்னை நான் அறிவேன். நீ இங்கு வருவாய்' என்று எனக்குத் தெரியும் என்றார்.

உடனே சுபோத், 'அப்படியானால் ஏன் என்னை முன்பே வரும்படிச் செய்யவில்லை' என்று கேட்டதற்கு, 'எதற்கும் உரிய காலம் வரவேண்டும்' என்றார்.

ஒருமுறை ஸ்ரீராமகிருஷ்ணரின் பிறந்தநாள் விழா அன்று பவநாத் என்ற பக்தரின் நண்பர் காளி கிருஷ்ணர் ஏதோ வேலை காரணமாக அங்கிருந்து சென்றார். ஸ்ரீராமகிருஷ்ணர் அதை அறிந்தபோது, 'ம்... அவனது தலையில் எழுதவில்லை. இன்று ஹரிநாமத்தால் இங்கே எவ்வளவு ஆனந்தம் பெருகி ஓடப் போகிறது! அதையெல்லாம் அவன் அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லை' என்றார்.

ஆகவே ஏதோ புண்ணியம் செய்திருந்தால் மட்டுமே ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகளைப் படிக்கவும் கேட்கவும் முடியும். ❖

வெற்றியாளர் என்றும் விலகிப் போவதில்லை; விலகிப் போகிறவர்கள் என்றும் வெற்றி பெற்றதில்லை. - ஓர் அறிஞர்

கந்தர் சஷ்டி கவசமும்

வைரவன்

சில வருடங்களுக்கு முன் ஒரு நிறுவனத்தில் நான் பணிபுரிந்து கொண்டிருந்தேன். அங்கு தொழிலாளர்களை உற்சாகப்படுத்த சில வகுப்புகள் நடத்தப்படுவதுண்டு.

அது ஒரு பங்குச்சந்தை வியாபார நிறுவனம். அதில் மார்க்கெட்டிங் வேலை மிக முக்கியமானது. பங்குச்சந்தை மார்க்கெட்டிங் என்றால் சாதாரணம் இல்லை. உங்களிடம் இருக்கும் பணத்தை நீங்கள் விழித்திருக்கும்போதே உங்கள் சட்டைப்பையிலிருந்து எடுத்து நிறுவனத்திற்குக் கொடுத்துவிட வேண்டும்.

இது குளோபலைசேஷன் (உலகமயமாக்குதல்) மூலமாக வந்த புதிய வியாபார உத்தி. அது ஒரு புறம் இருக்கட்டும்.

தொழிலாளர்களுக்காக நடத்தப்படும் இந்த வகுப்பில் மனதை அமைதியாக வைத்துக் கொள்ளவும், உடலைப் பேணிப் பாதுகாக்கவும் சில விஷயங்களைச் சொல்லிக் கொடுப்பார்கள். அதில் ஒன்று, அதிக டென்ஷனாகவே வாழும் நாம் மனதை எப்படி அமைதிப்படுத்தலாம் என்பதை ஒருவர், ''ஒரு புதிய முறையைக் கற்றுக் கொடுக்கிறேன்'' என்று கூறி, ''இதை அறிமுகப்படுத்தியவர் ஓர் ஆங்கிலேயர்'' என்று அவர் பெயரைக் கூறினார். ''மனோவியல் ரீதியாக இந்தப் பயிற்சி நல்ல பலனைத் தரும்'' என்று கூறி அதை செய்யச் சொன்னார்.

''முதலில் கண்களை மெதுவாக மூடிக் கொள்ளுங்கள். இப்பொழுது மெதுவாகச் சொல்லுங்கள்'' என்று ஆங்கிலத்தில் துவங்கினார்.

மை ஐஸ் ஆர் ரிலாக்ஸ்டு!

மை நோஸ் இஸ் ரிலாக்ஸ்டு!

மை மௌத் இஸ் ரிலாக்ஸ்டு!

மை ஹான்ட்ஸ் ஆர் ரிலாக்ஸ்டு!

என்று ஒவ்வொரு பாகத்தையும் சொல்லி முடித்தார்.

பிறகு, ''இப்பொழுது கண்களை மெதுவாகத் திறக்கவும். இப்பொழுது உங்கள் மனதும் உடலும் அமைதியாக இருக்கின்றனவா?'' என்று எல்லோரிடமும் கேட்டுத் தெரிந்து கொண்டார். அதன்பின் நிகழ்ச்சி பற்றி எல்லோருடைய கருத்தையும் கேட்டார்.

என் முறை வந்ததும், ''சார், இது என்ன பிரமாதம். இதை நான் குழந்தைப் பருவம் முதலே செய்து கொண்டிருக்கிறேனே!'' என்றேன்.

ஆச்சரியத்துடன் பார்த்த அவர், ''அது எப்படி? எனக்குத் தெரிந்தவரை இது புதிய மனோவியல் முறை! இதை எப்படி நீங்கள் குழந்தைப் பருவத்திலிருந்தே செய்ய முடியும்?'' என்று கேட்டார்.

நான் சொன்னேன், ''சார் நீங்க என்னவெல்லாம் சொன்னீர்களோ அவை எல்லாமே நான் சிறு வயது முதலே சொல்லும் கந்தர் சஷ்டி கவசத்தில் வருகிறது. உடலின் ஓர் அவயவம் விடாமல் தியானிக்கும் பயிற்சியை அது ஆன்மிகரீதியாக மிக அருமையாகக் கொடுக்கிறது'' என்றேன்.

மிகவும் ஆர்வமாக இதைக் கேட்ட அவர் கந்தர் சஷ்டி கவசத்தைச் சொல்லுவதால் ஏற்படும் பயனைப் பற்றி விளக்கமாகச் சொல்லச் சொன்னார்.

நானும் கூறினேன்:

கந்தர் சஷ்டி கவசம் சொல்லும்போது நம் உடலில் உள்ள ஒவ்வொரு பாகத்தையும் ஒவ்வொரு வேல் காக்குமாறு பிரார்த்திக்கிறோம்.

உதாரணத்திற்குச் சில வரிகள்...

'கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க!
விதிச்செவி இரண்டும் வேலவர் காக்க!
நாசிகளிரண்டும் நல்வேல் காக்க!
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க!
கன்னமிரண்டும் கருணைவேல் காக்க!
என் இளங்கழுத்தை இனியவேல் காக்க!'

என்று இப்படியே உடலில் ஓர் அங்கம் விடாமல் 'வேல் காக்க' என்று கூறுகிறோம்.

இப்படி தினசரி வாயால் ஒவ்வொரு அவயவத்தையும் பற்றிச் சொல்லும்போது நமது மனது அந்த அங்கத்தில் நிலைகொள்கிறது. மனது தியானிக்கும் அங்கத்தினை, நமது மூளை தானாகவே ஒரு சில வினாடிகள் கூர்ந்து கவனிக்கிறது.

இப்படி மூளையின் தனிக் கவனத்திற்கு வரும் போது அந்தப் பாகத்திற்குரிய மூளையின் செயல் பாடுகள் சிறப்படைகின்றன. இப்படி தினசரி மிகவும் அமைதியான மனநிலையில், ஒரு நாளைக்கு இருமுறை, நம் உடல் பாகங்களை மூளையின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் உடலின் சிறு சிறு குறைபாடுகளை மூளை தானாகவே சரி செய்து

உளவியலும்

இருப்பதால் இதை கந்தர் சஷ்டி கவசம் என்று கூறினார்கள்.

இந்தக் கவசத்தில் வரும் வரிகளில் 'நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்' என்று ஒரு வரி உண்டு. வார்த்தை களால் சொல்லும் மந்திரத்தினால் நவகோள்கள் எப்படி நன்மை செய்யும் என்றும் தோன்றலாம். நவ கிரகங்களின் மாறுதல்களால் பூமியின் மீதே பாதிப்பு ஏற்படும்போது மனித உடலில் பாதிப்பு ஏற்படாதா என்ன?

கிரகங்களின் மாற்றத்தால் நமது உடலில் ரத்த ஓட்டம் மற்றும் வாத, பித்த பாதிப்புகள் ஏற்படு கின்றன. உடலில் ஏற்படும் எந்த ஒரு வியாதிக்கும் இவற்றில் ஏற்படும் மாற்றமே அடிப்படை. ஆனால் கவசம் படிப்பதன் மூலமாகத் தினசரி மூளை, நமது உடலை உற்று நோக்கித் தன்னைத் தானே சரி செய்யும் வேலையைச் செய்து கொண்டே இருப்பதால் நவகோள்களால் ஏற்படும் உடல் மாறுபாடுகூட பாதிப்பை ஏற்படுத்தாது என்பதே இதன் சாரம். அதையே நவகோள்கள்கூட மகிழ்ந்து நன்மை அளிப்பதாகக் கூறினார்கள்.

இப்படி கந்தர் சஷ்டி கவசம் தொடர்ந்து படிப்பதில் மனோவியல் ரீதியான நன்மைகள் உள்ளன.

ஆனால் ஆராயாமலே தற்காலத்தில் எல்லாவற்றையுமே (குறிப்பாக இந்து மதத்தில் உள்ளவற்றை) மூடநம்பிக்கை என்று சொல்பவர்களுக்கு இது புரிவது சாத்தியமில்லை. ஏனென்றால் அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு இவற்றில் அடிப்படை அறிவேகூட இருப்பதில்லை என்பதே உண்மை.

ஆகையால் இந்து தர்மத்தில் சொல்லப் படும் பல அறிவியல் மற்றும் மனோரீதி யான சூட்சுமங்களைப் புரிந்து கொள்ளும் நீங்கள்தான் உண்மையான பகுத்தறிவாளர் கள். ஆகவே இந்து தர்மம் என்பது மனோவியலும் அறிவியலும் ஆகும்.

மேற்கண்டவாறு சொன்னவுடன் பயிற்சியாளர் மிகவும் மகிழ்ந்து என்னைப் பாராட்டினார்.

அவரும் கந்தர் சஷ்டி கவசம் படிப்பதில் உள்ள நன்மைகளை ஏற்றுக் கொண்டார்.

காக்க காக்க கனகவேல் காக்க!

நோக்க நோக்க நொடியில் நோக்க! ❖

கொள்ளத் தூண்டுதலாக அமையும்.

மனோவைத்திய ரீதியாக உடல் நோய்களைப் போக்க முடியும் என்று தற்காலங்களில் நம் ஆராய்ச்சியாளர்கள் சொல்லிக் கேட்பதில்லையா? இன்றைக்கு ஆராய்ச்சி என்று சொல்லி வெள்ளைக்காரன் கண்டுபிடித்ததாகச் சொல்லுவதை நம் முன்னோர்கள் ஏற்கனவே கண்ட றிந்து, செயல்படுத்தியும் வந்திருக்கிறார்கள்.

இந்த மனோவைத்திய முறை நம் வாழ்க்கை முறையாகவும் இருக்கிறது.

கந்த சஷ்டி துதியைத் தினமும் சொல்லும்போது நம் உடல் முழுவதும் மூளையின் செயல்பாடு அதிகரிக்கிறது. இது ஒரு பாதுகாப்பு மற்றும் ஆன்மிகக் கவசமாகவும்

உயர்ந்த அறிவியல்

''எல்லா அறிவியல்களிலும் உயர்ந்தது எது? என்று ஒருவர் டாக்டர் ராதாகிருஷ்ணனிடம் கேள்வி எழுப்பினார். அதற்கு அவர், ''எல்லா அறிவியல்களிலும் உயர்ந்தது தன்னைப் பற்றி அறியும் அறிவியல் ஆகும். ஒருவன் தன்னை அறிந்து கொள்வது, ஆன்மிக வாழ்வின் அத்தியாவசியமான நிபந்தனை'' என்றார்.- நெ.இராமன்

அன்பர்களே, பக்தர்களே! மக்கள் சேவையில் பங்கேற்க வாருங்கள்!

அன்பானவர்களே, சென்னை, ஸ்ரீராமகிருஷ்ண மடம் 120 ஆண்டுகளுக்கும் மேலாக ஏழைகளுக்கான கல்வி, மருத்துவம், ஆன்மிகம் மற்றும் சுய முன்னேற்ற நூல்களை வெளியிடுதல், பண்பாட்டு நிகழ்ச்சிகள், இயற்கைச் சீற்றத்திற்கான நிவாரணப் பணிகள் போன்ற பல துறைகளில் தொண்டாற்றி வருகிறது. மடத்தின் செயல்பாடுகள் தொடர்ந்து நடைபெறுவதற்கும் மேலும் சேவைகளைப் பெருக்குவதற்கும் உங்களைப் போன்ற நல்ல உள்ளங்களின் நிதி உதவி மடத்திற்குத் தேவைப்படுகிறது.

கீழே குறிப்பிட்டுள்ள திட்டங்களுக்கு உங்களின் தாராளமான நன்கொடைகளை வேண்டுகிறோம்.

	மாதாந்திரச் செலவு (ரூ.)
ஏழைப் பெண்களுக்கான கல்விப் பணிகள்	
❊ 900 பெண்களுக்கான விவேகானந்தா நூற்றாண்டு பெண்கள் மே.நி. பள்ளி நடத்த	7,00,000
❊ 350 ஏழைக் குழந்தைகளுக்கான ஸ்ரீராமகிருஷ்ண மடம் தேசியப் பள்ளி நடத்த	1,25,000
❊ 500-க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ - மாணவிகளுக்கான புத்தக வங்கி	60,000
மருத்துவம் மற்றும் சுகாதார மேம்பாடு	
❊ தொழுநோயால் பாதிக்கப்பட்டு, குணமடைந்த 120 பேருக்கான மறுவாழ்வுப் பணி	1,00,000
❊ மடத்தின் மருத்துவமனையில் தினமும் 600 நோயாளிகளுக்கான சேவை	5,00,000
❊ கிராமப்புற மாணவிகளுக்கான உதவி செவிலியர் பயிற்சி - ஒரு பிரிவில் 30 மாணவிகள் (6 பிரிவுகள்)	7,00,000
கிராமப்புறக் கல்வி மேம்பாடு	
❊ மெய்யூர் - பெண்கள் மேம்பாடு, குடியிலிருந்து நிவாரணம், கல்வி, மருத்துவ உதவி	1,00,000
❊ இலவச டியூஷன் மையங்கள் நடத்துவதற்கு	3,00,000
தமிழிலும் ஆங்கிலத்திலும் நூல்கள் வெளியீடு	
❊ மலிவு விலையில் ஆன்மிகம், பண்பாடு மற்றும் சுய முன்னேற்ற நூல்களை வெளியிட	1,00,000
பண்பாட்டுப் பாரம்பரியம்	
❊ சுவாமி விவேகானந்தர் 9 தினங்கள் தங்கிய, வரலாற்றுச் சிறப்பு மிக்க விவேகானந்தர் இல்லத்தின் செயல்பாடுகளுக்காக	6,00,000
❊ ஸ்ரீராமகிருஷ்ணருக்கு நித்திய பூஜை, தினசரி அன்னதானம் மற்றும் சாது சேவை	7,25,000

உங்கள் நன்கொடைகளை 'ஸ்ரீராமகிருஷ்ண மடம்' என்ற பெயரில் செக் / டி.டி.யாக அனுப்பலாம்.
நன்கொடைகள் மிகச் சிறிய தொகையாக இருந்தாலும் மிக்க நன்றியுடன் ஏற்றுக் கொள்ளப்படும்.
மேலும் https://donations.chennaimath.org என்ற இணைய தள முகவரி மூலமும் செலுத்தலாம்.

நன்கொடைகளுக்கு வருமான வரி சட்டப் பிரிவு 80 G -யின் கீழ் வரிவிலக்கு உண்டு.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் தங்களுக்கு அனைத்து நலன்களையும் தந்தருளப் பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீராமகிருஷ்ண மடம், 31, ஸ்ரீராமகிருஷ்ண மடம் சாலை,
மயிலாப்பூர், சென்னை - 4. Ph : 2462 1110.
Email : mail@chennaimath.org website : www.chennaimath.org

இறைவன் தொண்டில்,
சுவாமி கௌதமானந்தர், தலைவர்

ஒவ்வோர் இந்து பக்தனின் வீட்டிலும் இருக்க வேண்டிய நூல்கள்



1. இந்து கலாச்சாரம் - ஓர் அறிமுகம்
2. ஸ்ரீஸுக்தம்
3. சிவபுராணம் - அபிராமி அந்தாதி
4. வேத மந்திரங்கள் - பொருளுடன்
5. பெருமைமிகு பாரதம்
6. இந்துக் கோவில்கள்
7. ஸ்ரீராமகிருஷ்ண உபநிஷதம்
8. இல்லறத்தில் ஆன்மீகம்
9. கந்தர் சஷ்டி கவசம்
10. நமது முனிவர்கள்
11. விவேகானந்தர் பார்வையில் இந்து மதம்
12. திவ்யப் பிரபந்தத் திரட்டு
13. தேவார, திருவாசகத் திரட்டு
14. முழுநலம் பெறுவோம்!
15. எது பூஜை? - சுவாமி பஜனானந்தர்
16. ஸ்ரீமத் பகவத்கீதை
17. விநாயகர் அகவல்
18. சுவாமி விவேகானந்தர் வாழ்க்கையும் செய்தியும்
19. பிரகலாதன்

₹825/- மதிப்புள்ள இந்த 19 நூல்கள் அடங்கிய செட் சலுகை விலையில் ₹625/- மட்டுமே. தனித்தனியாக வாங்கினால் சலுகை இல்லை.

மிகவும் மலிவு விலை நூல்கள்.

ஸ்ரீராமகிருஷ்ண மடம்,
31, ஸ்ரீராமகிருஷ்ண மடம் சாலை, மயிலாப்பூர்,
சென்னை - 600 004. ✆ : 2462 1110.

தபால் செலவு இல்லை.

ஒரே முடிவு உயர்வு தரும்

நாம் என்ன முடிவு எடுக்கின்றோமோ அதற்கு ஏற்றபடி தான் வாழ்க்கை அமையும். ஓர் இளைஞர் தந்தையுடன் கடை வீதிக்குச் சென்றார். அங்கே கண்ட காட்சி அவர் உள்ளத்தை உலுக்கியது.

சிலர் ஆடுமாடுகளைப் போல நீக்ரோக்களை ஆங்கிலேயர் களுக்கு விலை பேசி விற்றுக் கொண்டிருந்தனர்.

மனிதரைச் சந்தைப் பொருளாக்கிய கொடுமையைக் கண்டு மனம் பதைபதைத்தார் அந்த இளைஞர். அப்பொழுது அவருடைய தந்தையிடம், ''எனக்கு மட்டும் ஒரு சந்தர்ப்பம் அமைந்தால் கட்டாயம் இதனை ஒழித்துக் காட்டுவேன்'' என்றார்.

''அப்படியானால் நீ இந்த நாட்டின் ஜனாதிபதியாக வேண்டும். ஜனாதிபதியால் மட்டும்தான் இதனை ஒழிக்க முடியும்'' என்றார் அப்பா.

''சரியப்பா, நான் இந்த நாட்டு ஜனாதிபதியாகி, அடிமை வியாபாரத்தை அடியோடு அழித்து விடுகிறேன். இதுவே என் வாழ்வின் உயிர் மூச்சு'' என்றார் இளைஞர்.

அவர் வாயளவில் சொல்லவில்லை; தீர்க்கமான முடிவுடன்தான் சொன்னார். அதற்காகச் செயல்பட ஆரம்பித்தார்.

தொடர்ந்து தேர்தல்களில் தோல்வியைச் சந்தித்துக் கொண்டே இருந்தார்.

ஆனாலும் தன்னுடைய முடிவை மாற்றிக் கொள்ளவே இல்லை. ஆண்டுகள் பல ஓடின.

இறுதியில் ஆச்சரியப்படத்தக்க வகையில் ஜனாதிபதி ஆனார். அவர் பதவி ஏற்றதும் இளமையில் முடிவு செய்தபடி அடிமை முறையைச் சட்டத்தின் மூலம் அகற்றினார்.

இந்த அருமையான செயலுக்காகவே தன் உயிரையும் கொடுத்தார். அவர்தான் அமெரிக்க நாட்டின் ஜனாதிபதி ஆப்ரகாம்லிங்கன். இவரால் மட்டும் எப்படி வெற்றி பெற முடிந்தது?

ஒரே முடிவில் நிலைத்து நின்றார். தொடர்ந்து செயல்பட்டார். வெற்றி பெற்றார். ஒரே முடிவுடன் செயலைச் செய்தால் நிச்சயமாக வெற்றி பெற முடியும் என்பதற்கு இன்னோர் உதாரணம் உள்ளது.

இனிமையான இளமைப் பருவத்தில் எழுத்தர் வேலையைச் செய்து கொண்டிருந்த ஓர் இளைஞர் திடீரென்று ஒரு முடிவு எடுத்தார்.

'இந்த வேலையை எல்லோரும் செய்ய முடியும். ஆனால் எழுத்தாளராக இருக்க அனைவராலும் முடியாது. நான் ஏன் எழுத்தாளராகக் கூடாது?' என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்டார்.

உடனே தான் செய்து வந்த வேலையை விட்டுவிட்டார். நூலகத்திற்குச் சென்று படிக்க ஆரம்பித்தார். ஓர் ஆண்டு, இரண்டு ஆண்டுகள் அல்ல; பல ஆண்டுகள் படித்தார்.



அதன் பிறகு எழுத ஆரம்பித்தார். ஐந்து ஆண்டுகள் எழுதிக் கொண்டே இருந்தார். எந்தப் பத்திரிகையும் இவருடைய படைப்புகளை வெளியிடவில்லை. எந்தப் பதிப்பகமும் நூலாக வெளியிட முன்வரவில்லை.

ஆனாலும் இவர் தன்னுடைய முடிவை மாற்றிக் கொள்ளவே இல்லை. தொடர்ந்து எழுதிக் கொண்டே இருந்தார்.

பல ஆண்டுகள் சென்றதும் அவருடைய எழுத்துகள் எல்லாம் நூல் வடிவம் பெற்று விற்பனையில் சாதனை படைத்தன.

உலக நாடக ஆசிரியர்களில் முதன்மையானவர் என்ற சிறப்பைப் பெற்றார். செல்வமும் செல்வாக்கும் அவரிடம் அடைக்கலம் ஆகின.

இந்த அளவு உலகப்புகழ் பெற்றவர் யார்? அவர்தான் பெர்னார்ட்ஷா! எடுத்துக் கொண்ட முடிவிலிருந்து கொஞ்சம்கூட அவர் விலகவில்லை.

அதே முடிவில் நிலைத்து நின்று செயல்பட்டு வெற்றி பெற்றார்.

இன்று ஒரு முடிவு, நாளை மற்றொரு முடிவு என்றில்லாமல் ஒரே திடமான முடிவு எடுத்து அதிலேயே நிலைத்து நின்று செயல்படுபவர்களே வெற்றிக் கொடியை நாட்டுகிறார்கள். ❖

நல்ல குறிக்கோளை அடைய, தொடர்ந்து முயற்சிக்கும் மனிதனின் செயல்பாடே பிற்காலத்தில் வரலாறாக மாறுகிறது. - கார்ல் மார்க்ஸ்

சுருக்கமாய்ப் பேசுவோரின் வார்த்தைகளில் ஆழ்ந்த சிந்தனை தேங்கியிருக்கும். - காந்தியடிகள்

ஏன் ஆங்கிலத்தில் பேசப் பயப்படுகிறோம்?

கேள்வி: நமக்குக் கிடைத்துள்ள அனைத்துச் சிறப்பு களும் கடவுள் தந்ததா? அல்லது நாம் செய்த முயற்சியால் விளைந்ததா? - செல்வி. கு.சுருத்திகா

பதில் : உன் முயற்சி என்பதே கடவுள் தந்ததுதானே.

கடவுள் அருள் இருந்தால்தான் நீ முயற்சி செய்வாய். தொடர்ந்து முயன்றால்தான் நீ இறையருளைப் பெறுவாய்.

கேள்வி: நமது நாட்டிற்கு ஆங்கிலேயர் ஏன் வந்தனர்?

- செல்வி. எச்.அபிராமி

பதில் : நம் நாட்டின் வளமான செல்வங்கள் ஆங்கிலேயரை இங்கு வரவழைத்தன. நமது பல அரசர்களின் அறியாமையும் கவனக்குறைவும் ஒற்றுமையின்மையும் ஆங்கிலேயர்களை இங்கேயே தங்க வைத்துவிட்டன.

கேள்வி: மாணவர்களுள் பலரும் ஆங்கிலம் பேசுவது என்றாலே பயப்படுவது ஏன்? - எச்.புருஷோத்தமன், நீலாங்கரை.

பதில்: அன்று நாம் அடிமையாகி ஆங்கிலேயருக்குப் பயந் திருந்தோம். அவர்கள் போன பிறகு இன்று ஆங்கிலத்தனத் திற்கு அதாவது அன்னிய கலாசாரத்துக்கு அடிமையாகி இருக்கிறோம்; அதனால் ஆங்கிலத்திற்குப் பயப்படுகிறோம்.

இது தன்னம்பிக்கையைத் தராத நமது கல்வி முறையையே காட்டுகிறது. ஆங்கிலத்தில் பேசுவது ஒரு திறமை, அதுவே அறிவல்ல. எனவே ஆங்கிலத்திற்கு அளவுக்கு மீறிய முக்கியத்துவம் தருவதால் நம் தம்பிகள் தடுமாறுகிறார்கள்.

ஆகவே நீ தன்னம்பிக்கையுடன் ஆங்கிலத்தில் பேசு; உன் பேச்சை பிறர் கேட்காவிட்டால் என்னைக் கேளு.

கேள்வி : நமது செயல்கள் அனைத்தையும் பெரியவர்களின் ஆலோசனையுடன்தான் செய்ய வேண்டுமா? - செல்வி. உ.ரா.ஓவியபாரதி

பதில்: போன்சாய் மரம் பல காலம் வளர்ந்தா லும் அது ஓர் அடிக்குமேல் வளர்க்கப்படுவ தில்லை. காரணம், அதன் வேர்கள் அவ்வப்போது வெட்டப் பட்டுக் கொண்டே இருக்கும்.

வேர்களில் வளர்ச்சியற்ற போன்சாய் மரம் உயரமாகவும் வளர்வதில்லை. பருமனும் அடைவதில்லை.

பெற்றோரின் நல்ல அறிவுரை களைக் கேட்காதவரின் நிலையும் போன்சாயின் அவல நிலைதான்.

கேள்வி: மேல்படிப்புக்காக வெளி நாட்டுக்குச் செல்வது நன்மையா? அல்லது இங்கேயே படிப்பது நன்மையா?

- செல்வி. பவந்திகாஸ்ரீ, வகுப்பு 9

பதில்: வாழும் வரை படித்துக் கொண்டிருப்பது தான் மிகச் சிறந்தது.

நம் நாட்டில் இல்லாத உயர் படிப்பு என்றால் உலகத்தைச் சுற்று. நீ விரும்பும் உயர் படிப்பு இங்கேயே இருந்தால், அது தொடர்பான உலகத் தரக் கல்வியை உன் விரல் நுனியில் இங்கு கொண்டு வர முடியுமே!

அப்படி அறிவாளிகளை இங்கு கொண்டு வரத் துல்லியமாகத் திட்ட மிடு; படிப்பதில் கடுமையாக உழைத்திடு.

கேள்வி: நம் முன்னோர் பலரும் பல ஆண்டுகள் ஆரோக்கியத்துடன் வாழ்ந்துள்ளனர். ஆனால் இன்றைய மக்கள் நீண்ட காலம் வாழ்ந்தாலும் நிறைவான ஆரோக்கியம் இல்லையே?

- செல்வி. கே.ராதிகா

பதில்: இன்று மக்களிடம் ஆரோக்கி யம் இல்லாததற்கு ஆயிரம் காரணங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றைக் கூறுகிறேன்.

உடலுக்கும் தாவரங்களுக்கும் சக்தியைத் தருவது சூரியக் கதிர்கள். அந்தச் சூரியன் எழும்போதே, சுறுசுறுப் பாக உழைப்பவர்கள் ஆரோக்கியமான ஆயுளை இன்றும் பெறுகிறார்கள்.

கேள்வி: எனக்குப் பள்ளியில் இருப்பதைவிட வீட்டில் இருக்கத்தான் பிடிக்கிறது. நான் இந்த மனநிலையை எப்படி வெற்றி கொள்வது?

- செல்வன் இ.ர.சாய்ஸ்ரீராம், வகுப்பு 10

பதில்: ஆசிரியர் என்பவர் இரண்டா வது பெற்றோர். பெற்றோர் என்பவர் இரண்டாவது ஆசிரியர் என்பது உனக்குப் புரியாததால் நீ வீட்டில்

அடைபட்டு இருப்பதையே ஜாலி என நினைக்கிறாய் போலிருக்கிறது.

சிறகடித்து வானில் பறக்க விரும்பும் பறவை ஓய்விற்கு மட்டுமே கூட்டுக்கு வரும். அதுபோல் நீயும் அறிவு வானில் பறக்க விரும்பினால், வீட்டில் அடைபட்டுக் கிடப்பதை அவமானம் என்று உணர்.

கேள்வி: புத்தகப் படிப்பை நாம் எவ்வாறு அன்றாட வாழ்வில் பயன்படுத்திக் கொள்வது?

- செல்வி. பு.ஸ்ருத்திகா, வகுப்பு 10.

பதில் : நீ படிப்பதே அறிவைப் பெறுவதற்குத் தான். படித்தபடி நடந்துகொள்வது அனுபவத்தைப் பெறுவதற்கு. உணவு உண்பது உழைப்பதற்காக. நான் எப்போதும் உழைத்துக் கொண்டே இருப்பேன் உண்ண மாட்டேன் என்பது போல் நீ கேள்வி கேட்டுள்ளாய். புத்தகப் படிப்பு உண்பது போன்றது. அதன்படி செயல்படுவது உழைப்பது போன்றது.

ஏட்டறிவும் வேண்டும், பட்டறிவும் வேண்டும்.

உண்ணாமல் உழைக்க முடியாது. உழைக்காமல் உண்ண முடியாது. நீ இதைப் புரிந்துகொள்.

கேள்வி: அபிராமிபட்டரின் வாக்கையும் உயிரையும் காப்பாற்றத் தன் காதணியையே நிலவாக ஒளிரச் செய்தாள் அன்னை அபிராமி.

அவ்வளவு பக்தி கொண்டவரா அபிராமிபட்டர்?

- செல்வி. ஸ்ரீசுப்ரியா

பதில்: 'பக்தன் இறைவனை நோக்கி ஓரடி எடுத்து வைத்தால், இறைவன் பக்தனை நோக்கி பத்தடிகள் வருவார்' என்பார் ஸ்ரீராமகிருஷ்ணர்.

அபிராமி பட்டர் அமாவாசை அன்று, அது பௌர்ணமி தினம் என்று கூறிவிட்டார். அதை நிரூபிக்க அன்னை அபிராமி ஓடோடி வந்தாள்.

அபிராமி பட்டர் அவ்வளவு பக்திமான் என்பதை நம்ப முடியாவிட்டால் அன்னை அபிராமி அவ்வளவு சௌலப்யம் அதாவது எளிதில் அடையப்படத் தக்கவள் என்பதை நம்பு, உனக்கும் பக்தி வரும்.

கேள்வி: ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு திறமை உண்டு. ஆனால் எனக்குள் இருக்கும் திறமையை எனக்குக் கண்டுபிடிக்கத் தெரியவில்லையே.

இதற்கு என்ன செய்வது?

- செல்வி. கலைச்செல்வி ம.ரா.

பதில்: தங்கையே! நீ வசிக்கும் அம்பத்தூரில் உள்ள ஒருவரைக் காண்பதற்கு என்ன செய்கிறாய்?

அவரது அட்ரஸை வைத்துக்கொண்டு நம்பிக்கையுடன் தெருத் தெருவாய் தேடுகிறாய் அல்லது தெரிந்தவர்களிடம் கேட்கிறாய், அல்லவா?

ஒரு பொருளை வாங்குவதற்கு நீ கூகுளில் தேடி ஆர்டர் செய்து பெறுகிறாய். அதுபோல் உன் திறமையைக் கண்டுபிடிப்பதற்கு நீ உனக்குள் ஏதோ ஒரு திறமை ஒளிந்து கிடக்கிறது என்பதை முதலில் நம்பு. பிறகு அந்தத் திறமையைத் தேடு.

அவ்வாறு நம்பி, நீ செய்யும் ஒவ்வொரு செயலையும் கூடுதல் கவனத்துடன் செய்து பார். அப்போது உனக்குள் இருக்கும் திறமையை நீயே உணர்வாய். அல்லது உனது அருமை ஆசிரியர்கள் யாராவது அதை உனக்குச் சுட்டிக் காட்டுவார்கள்.

உன் பெற்றோர் கவனமிக்கவர்களாக இருந்தால் அவர்களே உன் திறமையை இனம் காண்பார்கள்.

ஆக, முதலில் உன் திறமையை நம்பு; அதைத் தேடு. திறமை தென்படும். அதைக் கொண்டு சாதித்திடு.

கேள்வி : என்னைப் போல என் தம்பி அதிக மதிப்பெண்கள் வாங்குவதில்லை. அதனால் என் அம்மா எப்போதும் என்னுடன் அவனை ஒப்பிட்டுப் பேசி வெறுப்பேற்றுகிறார். என் அம்மாவின் இந்தக் குறையை எப்படி சரி செய்வது?

- செல்வன் அருண்பிரகாஷ், திருவொற்றியூர், சென்னை.

பதில்: அன்பு அருண், பொதுவாக, ஒருவரை மட்டம் தட்டி, தம்மைப் பாராட்டினால் பலரும் குஷியாகிவிடுவார்கள். ஆனால் நீ இப்படி யோசிக்கிறாய்.

இவ்வளவு பொறுப்புள்ள நீ உண்மையில் உன் குடும்பத்தின் குத்துவிளக்குத்தான்.

உன் அம்மாவிற்கு உன் தம்பியை நல்ல நிலைக்குக் கொண்டு வந்துவிட வேண்டும் என்று கொள்ளை ஆசை. அதனால்தான் கொள்ளை யடிப்பவன் போல் வீணாகப் பரபரப்பு அடைகிறார்.

ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு திறமையோ, சாமர்த்தியமோ இருக்கும். அம்மாவிடம் பேசி தம்பியின் திறமையைக் கண்டுபிடிக்கச் சொல்.

நீ படிப்பில் உன் தம்பிக்கு உதவு; இதன் மூலம் மன திடம் பெறுவதில் அம்மாவுக்கு உதவு. ❖

ஒரு பெண்ணின் இதயம் கருணையின் கோயிலாக மாறும்போது அதற்கு இணையான அன்பு இந்த உலகத்தில் எங்குமே இல்லை. - மார்டின் லூதர் கிங்

சுவாமிஜியும்



ஸ்ரீராமகிருஷ்ணர் மற்றும் விவேகானந்தரால் மகாத்மா காந்தி பெரிதும் கவரப்பட்டார். அவர் களின் செல்வாக்கு அவரது வாழ்க்கையில் நன்கு பிரதிபலித்தது. விவேகானந்தரின் எழுத்துகள் தமது தேச பக்தியை ஆயிரம் மடங்கு திடப் படுத்தியதாக அவர் கூறியுள்ளார்.

காந்திஜியின் கூற்று, அவரது நெருங்கிய சகாக்களின் கருத்துகள், அவருடைய வாழ்க்கை வரலாற்றை எழுதிய இந்திய மற்றும் வெளிநாட்டினரின் எழுத்துகள் ஆகியவற்றின் வாயிலாக, விவேகானந்தரின் சிந்தனைகளும் லட்சியங்களும் அவர் ஹரிஜன இயக்கம் போன்ற தேச சீர்திருத்த இயக்கங் களுக்குத் தலைமை ஏற்றபோது அவர் மூலமாகச் செயல் புரிந்ததைப் பார்க்கிறோம்.

'தனி மனிதத் தூய்மையின் அடிப்படையிலான தேச மறுமலர்ச்சி, அரசியல் இயக்கங்களுக்குச் சற்றும் குறைந்த தல்ல' என்று காந்திஜி நினைத்தார். 'தனிமனிதத் தூய்மையற்ற தேச மறுமலர்ச்சி, ஆன்மா அற்ற இயந்திரமாகத்தான் இருக்கும்' என்று அவர் கருதினார். இதன் மூலம் காந்திஜி ஸ்ரீராமகிருஷ்ணர் மற்றும் சுவாமி விவேகானந்தரை மிகப் பெரிய, பண்புநலன் வாய்ந்த ஆதர்ச புருஷர்களாகக் கொண்டிருந்தார் என்பது புலனாகிறது.

காந்திஜியின் அடியொற்றி நடந்தவர்கள், 'காந்திஜி, விவேகானந்தரின் சமயமான தரித்திர நாராயண சேவையைக் கைக்கொண்டு அதை லட்சக்கணக்கான, பசியால் துடித்த, பாதிக்கப்பட்டவர்களுக்கும், எண்ணிலடங்கா கிராமங்களுக் கும் பரவச் செய்தார்' என்று தயக்கமின்றிக் கூறுகின்றனர்.

காந்திஜியின் வாழ்க்கையில் ஸ்ரீராமகிருஷ்ணரின் செல் வாக்கு விவேகானந்தரைவிட அதிகம் காணப் படுகிறது. அவருக்கு ஸ்ரீராமகிருஷ்ணர் அஹிம்சை மற்றும் சத்தியத்தின் சின்னமா கவே காட்சியளித்தார். 'ஸ்ரீராமகிருஷ்ணர் மதங்களின் இணக்கத்தை அனுபூதியில் உணர்ந்தவர்; போதித்தவர்' என்று தெளிந்தவர் காந்திஜி.

காந்திஜியின் சீடர் பியாரேலால் கூறுகிறார்: 'ஸ்ரீராமகிருஷ்ணரின் உலகியல் ஆசை அற்ற லட்சிய திருமண வாழ்க்கை காந்தியைக் கவர்ந்தது. அது மட்டுமின்றி, அதைத் தன் வாழ்க்கையின் லட்சியமாக ஏற்று, பொதுவாழ்க்கையிலும் செலுத்த முயற்சித்தார். 1920-களில் எழுந்த ஒத்துழையாமை இயக்கத்தில் காந்திஜி இந்திய தேசியவாதத்தில் அறிமுகப்படுத்திய

சுவாமி பிரேமானந்தர்

அவர் பெயரை உச்சரித்தால்...

நல்லது ஒன்றையே நாம் நோக்க வேண்டும். மணலும் சர்க்கரையும் சேர்ந்த குவியல் கிடக்கிறது. அங்கு சென்று எறும்பு சர்க்கரையை மட்டும் எடுத்துக் கொள்கிறது. அதுபோன்றுதான் நாமும் செய்ய வேண்டும்.

ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசங்களின்படி நடப்பதே அவருக்கு நாம் காட்டும் மரியாதையும் பக்தியும் ஆகும். பூக்களால் மட்டுமே அவரை பூஜை செய்பவர்கள் மேன்மை அடைவதில்லை.

ஸ்ரீராமகிருஷ்ணர் சர்வ சமயங்களின் பிரதிநிதி. அவர் பெயரை உச்சரிப்பதால் அறிவிலி, அறிவாளி ஆகிறான். நேர்மையற்றவன் நேர்மை உடையவனாகிறான். தூய்மையற்றவன் தூய்மை உடையவனாக மாறிவிடுவான்.

- ஸ்ரீராமகிருஷ்ணரின் துறவறச் சீடர் சுவாமி பிரேமானந்தர். (ஜயந்தி தினம் - 28.11.2017 -செவ்வாய்)

சுதந்திர இயக்கமும்

இல்லறத்தார்களுக்கான பிரம்மசரியம் ஒரு முக்கிய அம்சமாக இருந்தது.'

ஸ்ரீராமகிருஷ்ணரின் ஆன்மிகச் சாதனைகள் காந்திஜியின் சத்தியசோதனைக்கு ஒரு முன்னோடி. ஸ்ரீராமகிருஷ்ணருடைய 'எல்லா மதங்களும் உண்மையானவை' என்ற கருத்து காந்திஜியின் 'எல்லா மதங்களுக்கும் சமமான மரியாதை' என்பதில் எதிரொலித்தது. படித்தவர்களின் மதக் கருத்துகள் பற்றிய வறட்டு வாத விவாதங்களை எல்லாம் காந்திஜி ஏற்க மறுத்ததோடு அவை தெய்விகத்திற்கு எதிரானவை என்றும் கூறினார்.

'உண்மையைக் காண வேண்டும்; உணர வேண்டும்; பேச வேண்டும்; ஒவ்வொரு கணமும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்' என்பதைப் பின்பற்றினார். அவர் எந்தச் செயலிலும் தன் மனசாட்சியைக் கலந்து கொள்ளாமல் முடிவு எடுத்ததில்லை.

மிகப் பெரிய சர்வோதயத் தலைவரும் காந்திஜியின் சீடருமான வினோபா பாவே விவேகானந்தர் பற்றி குறிப்பிடத்தக்க பல கட்டுரைகளை எழுதியுள்ளார். வேதாந்த இலக்கியத்தில் தேர்ந்த பண்டிதராக இருந்த அவர், சங்கரரின் கருத்துகளையும் வேதாந்தத்தையும் விளக்க பொருத்தமானவர் விவேகானந்தரே எனக் கருதினார். விவேகானந்தரின் தரித்திர நாராயண சேவையே அவரை மிகவும் கவர்ந்த அம்சம். அவர் விவேகானந்தரை ஏசுவோடு ஒப்பிட்டார்.

கீதை - வேதாந்தத்தின் இசைவைக் கண்டுணர்ந்தவர் விவேகானந்தர் என்பது வினோபாவின் கருத்து. இதன் காரணமாகவே அவர், 'அத்வைத ஞானத்தையும் இறைவனின் பல உருவ வழிபாடுகளையும் ஒருங்கே கொண்டதாக இந்திய வாழ்க்கை அமைந்துள்ளது' என்றார்.

ஜவஹர்லால் நேரு இந்திய அரசியலில் பெரும்பங்கு வகித்தவர். காந்திஜியின் தலைமையில் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர். இவற்றுடன் சுபாஷ் சந்திர போஸுடன் இணைந்து இளைஞர் இயக்கத்தையும் ஊக்குவித்தார். சுபாஷுடன் 'இந்தியன் இன்டிபென்டன்ஸ் லீக்' என்ற அமைப்பையும் தோற்றுவித்தார். அதன் மூலம் பூர்ண சுயராஜ்யத்திற்கான செய்திகளைப் பிரச்சாரம் செய்தார். அவர் சோஷலிஸக் கருத்துக்களின் ஆதரவாளரும்கூட.

இந்திய சுதந்திரத்திற்குப் பின் 17 ஆண்டுகள், பிரதம மந்திரியாக இருந்தார் நேரு. தேசிய மற்றும் அகில உலக அளவில் அவர் ஒரு முக்கியமானவராக, மதிப்பிற்குரிய பண்பாளராக விளங்கினார்.



சமயப் பற்று அற்றவராக இருந்தும் நேருவும் அவரது குடும்பத்தினரும் ஸ்ரீராமகிருஷ்ணர் மற்றும் சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கையினால் பெரிதும் கவரப்பட்டு, ராமகிருஷ்ண மிஷனை விரும்பிப் போற்றினார்கள்.

நேருஜி தாய்நாட்டிற்கு ஒரு இக்கட்டான, கடுமையான சிக்கல் நேர்ந்த சூழ்நிலையில் விவேகானந்தரை இவ்வாறு நினைவு கூர்ந்தார்:

'விவேகானந்தர் ஒளிரும் சிந்தனையின் உருவம். அவர் பேசிய, எழுதிய ஒவ்வொரு சொல்லும் ஒரு தீச் சுவாலை. அதைப் படிக்கும்போது அது நமது சோம்பலை உதறித்தள்ளி நம்மை அபரிமிதமான எழுச்சி கொள்ளச் செய்கிறது'.

1962-இல் இந்தியாவை சீனா உக்கிரமாகத் தாக்கியபோது, இந்திய இளைஞர்களுக்கு ஊக்கத்தையும் வலிமையையும் அளிக்கக்கூடிய தனியொரு லட்சிய மனிதராக 'விவேகானந்தர்' பெயரை மட்டுமே நேரு கூறினார்.

சுபாஷ் சந்திர போஸ்

'சுவாமிஜி ஓர் அரசியல்வாதி அல்ல. ஆயினும் அவர் புதிய இந்திய தேசிய இயக்கத்தினை நிர்மாணித்தவர்களில் ஒருவர்' என்று நாடு பகைவர்களால் தாக்கப்பட்ட அந்த நிலையில் நாட்டின் லட்சிய வீரராக சுவாமி விவேகானந்தரை முன் வைத்தார்.

நேரு, தமது 'டிஸ்கவரி ஆஃப் இந்தியா' நூலில் சமூக உரிமைக்கான சமநீதி மற்றும் பாமரர்களை முன்னேற்றுதல், ஒரு குறிப்பிட்ட பிரிவினரை ஒதுக்குவது, தீண்டாமை எனும் சாபம், இவற்றிற்கு எதிரான

தவறுகளை ஒப்புக்கொள்ளும் தைரியமும் அதைத் திருத்திக் கொள்வதற்கான பக்குவமும்தான் வெற்றிக்கான வழி. - லெனின்

புதுமைகள் துவங்கிட
புன்னகை மலர்ந்திட CUB-யின்
தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

காலத்திற்கேற்ற மாற்றங்கள். நவீன தொழிநுட்ப வசதிகள்.
ஒவ்வொருவரின் தேவை அறிந்து சேவை புரியும் **CUB**

Online
Fee Payment

CUB
Mobile Banking

CUB
Credit Card

Utility
Bill Payment

CUB
Net Banking

UPI / BBPS / Bharat QR /
BHIM / *99# / AEPS

Cash Deposit
Machine

Pass Book /
Cheque Deposit Kiosk

வாடிக்கையாளர்கள் தங்களது உபயோகிப்பாளர் ஐ.டி./பாஸ்வோர்டு அல்லது தங்களது கிரடிட் / டெபிட் கார்டு எண் / C.V.V. / O.T.P. ஆகியவற்றை யாரிடமும் தெரிவிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். எந்த ஒரு வங்கியோ அல்லது ரிசர்வ் வங்கியோ உங்களது தனிப்பட்ட தகவல்களைப் பெற வற்புறுத்தாது.

மேலும் விவரங்களுக்கு அருகிலுள்ள கிளையை இன்றே தொடர்பு கொள்வீர்.

Customer Care : 044 - 71225000 / 7299075077 / 7299075078

Customer Care :
044 - 71225000 / 7299075077 /
7299075078

CUB
TRUST AND EXCELLENCE
SINCE 1904

சிட்டி யூனியன் பேங்க்

ராசியான பேங்க், ஈஸியான பேங்க்

கருத்துகள், மாயமந்திரங்களுக்கு எதிரான கடும் விமர்சனம், துறவுக்கும் தொண்டுக்கும் அவர் அளித்த தூண்டுதல், அச்சமின்மையை வலியுறுத்தியது, அவரின் அகில உலகமும் சார்ந்த பார்வை ஆகிய தேசிய அளவிலான சுவாமிஜியின் பங்களிப்பைப் பற்றி விரிவாகக் கூறியுள்ளார்.

விவேகானந்தர் பழைமையில் வேரூன்றி, இந்தியப் பாரம்பரியத்தில் பூரணப் பெருமையோடு இருந்தாலும் வாழ்க்கைப் பிரச்னைகளைத் தீர்ப்பதில் நவீன அணுகுமுறையைக் கொண்டிருந்தார்.

முழுமையான செயலூக்கத்துடன் கூடிய நெருப்பின் ஆற்றலுடன் இந்தியாவை முன்னேற்ற வேண்டும் என்னும் தீவிர உணர்ச்சியுடன் விரக்தியடைந்த, பண்பாட்டை இழந்த இந்திய மனத்திற்கு ஒரு அருமருந்தாய் வந்து, இந்தியர்களைத் தன்னைத் தானே அறிந்து கொள்ளச் செய்தார். நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ அவருடைய செல்வாக்கு இன்றைய இந்திய வாழ்க்கையில் உள்ளது.


நேருஜி

வினோபா பாவே

விவேகானந்தரின் செல்வாக்கு இந்திய சுதந்திர இயக்கத்தில் ஆன்மிக மற்றும் சிந்தனை அளவில் மட்டுமல்ல, போராட்டத்தின் ஆயுதம் தாங்கிய மற்றும் அகிம்சை வழியிலான இரண்டு வழிகளையும் அது ஊக்குவித்தது. இது எந்தத் தனி மனிதனாலும் ஆற்ற முடியாத ஒன்று. அவருடைய காலத்திற்குப் பின் தோன்றிய பல்வேறு விதமான படைப்புகளுக்கும் அவற்றின் கிளைகளுக்கும் அவர் ஓர் ஊற்றுக் கண்ணாக விளங்கி, புத்துயிர் கொடுத்து எழுச்சி பெறச் செய்தார். இது மிகவும் அழகாக டாக்டர் ராதா கிருஷ்ணன் அவர்களால் கூறப்பட்டுள்ளது:

'விவேகானந்தர் இந்த நாட்டின் ஆன்மாவே வடிவானவர். அவளுடைய (பாரதத்தின்) ஆன்மிக உணர்வுகளுக்கும் அவற்றின் நிறைவுகளுக்குமான சின்னம் அவர். நமது பக்தர்களின் கீதங்களிலும் நமது ரிஷிகளின் தத்துவங்களிலும் நமது சாமான்ய மக்களின் பிரார்த்தனையிலும் வெளிப்படும் பேருணர்வு அது. இந்தியாவின் நித்தியத்துவம் பெற்ற ஆன்மாவுக்குத் தெளிவும் குரலும் கொடுத்தவர் சுவாமி விவேகானந்தர்.' ❖



ஸ்ரீ குருராகவேந்திராய நம:

ஸ்ரீ விஜயா டிராவல் சர்வீஸ்

எண். 18, ஆரிமுத்து ஆசாரி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

email : srivijayatravels@yahoo.com

போன் : 28442850
28444538
செல்: 9444019151

ஸ்தாபகர்: வி. சுப்பாராவ் உரிமையாளர்: சு.பத்ரி

19.01.18 / 14.03.18 4 நாட்கள் கொண்ட மந்திராலய யாத்திரை: நெல்லூர், ஸ்ரீசைலம், மந்தராலயம், மகாநந்தி, அஹோபிலம் (2x2) புஸ்பேக் பஸ் கட்டணம். ரூ. 6,000/-

23.01.18 5 நாட்கள் கொண்ட (சோழநாட்டு - 40) வைஷ்ணவ திவ்ய தேசங்கள் கட்டணம். ரூ. 6,500/-

27.01.18 14 நாட்கள் கொண்ட 7 ஜோதிர்லிங்கம் - 8 அஷ்டகணபதி: மும்பை, பீமாசங்கரம், பண்டபூரிபுர், பரளி வைத்தியநாதம், ஔரங்கபாத், ஔண்டா நாகநாதம், குருஷ்னேஸ்வரம், எல்லோரா, சீரடி, சனி சிங்கனாப்பூர், நாசிக், பஞ்சவடி, திரியம்பகேஸ்வரர், உஜ்ஜயின், மகாகாளம், ஓங்காரேஸ்வரர் ஆகியவை. கட்டணம் ரூ.16,800/-

11.2.18 14 நாட்கள் பஞ்சதுவாரகா யாத்திரை: அகமதாபாத், வீர்பூர் பாலதிக், டாக்கூர் துவாரகா, பேட் துவாரகா, ஸ்ரீநாத் துவாரகா, காங்குரொலி துவாரகா, கோமதி துவாரகா, நாகேஸ்வர், சோமநாத், ஹரிசித்திமாதா, போர்பந்தர், புஸ்கர், சித்பூர் மாத்ருகயா, அம்பாஜி, மவுண்ட் அபு ஆகியன. கட்டணம் ரூ.16,800/-

17.02.18 10 நாட்கள் கொண்ட ஆந்திர யாத்திரை: விஜயவாடா, மங்கலகிரி, துவாரகா, திருமலை, பத்ராஜலம், ஸ்ரீகூர்மம் - சிம்மாசலம், அன்னாவரம், மட்டப்பள்ளி, வாடப்பள்ளி, வேதாத்திரி, மந்த்ராலயம், ஸ்ரீசைலம், மஹாநந்தி, அஹோபிலம், 9 நரசிம்மர் ஆகியன. (2x2) புஸ்பேக் பஸ் கட்டணம் ரூ.12,000/-

19.03.18 10 நாட்கள் கொண்ட 5 ஜோதிர்லிங்கம் யாத்திரை: மும்பை, பீமாசங்கரம், பண்டபூரிபுர், பரளி வைத்தியநாதம், ஔரங்கபாத், ஔண்டா நாகநாதம், குருஷ்னேஸ்வரம், எல்லோரா, சீரடி, சனி சிங்கனாப்பூர், நாசிக், பஞ்சவடி, திரியம்பகேஸ்வரர் ஆகியவை. கட்டணம் ரூ.12,000/-

26.03.18 12 நாட்கள் கொண்ட காசி யாத்திரை: புரி, புவனேஸ்வர், கோனாராக், காசி, கயா, அலகாபாத், பிரயாகை, திருவேணிசங்கமம், அயோத்தி, நைமி சாரண்யம் ஆகியன. கட்டணம் ரூ.14,400/-

4.4.18 13 நாட்கள் கொண்ட முக்திநாத் யாத்திரை: கோரக்பூர், சனோலி, காட்மாண்டு, போக்ரா, முக்திநாத், மனகாமனா அம்மன் மலைகோவில், அயோத்தியா, நைமிசாரண்யம், நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ.15,600/- (ஹெலிகாப்டர் கட்டணம் தனி)

18.4.18 13 நாட்கள் கொண்ட வைஸ்ணவதேவி யாத்திரை: ஆக்ரா, மதுரா, பிருந்தாவன், நியூ டெல்லி, குளு மணாலி, வைஸ்ணவதேவி, சாமுண்டாதேவி, ஜ்வாலாமுகி, காங்கிடாதேவி, அமிர்தசரஸ், வாகாபார்டர், குருக்ஷேத்ரம் ஆகியன. கட்டணம் ரூ.16,000/-

குறிப்பு : பெயர், வயது, இத்துடன் அட்வான்ஸ் செலுத்தி முன் பதிவு செய்து கொள்ளவும். காலை காபி, 1 வேளை டிபன், 2 வேளை சாப்பாடு, தங்கும் இடவசதி, ஊர் சுற்றிப் பார்க்கும் செலவு அனைத்தும் கம்பெனிக்கு உட்பட்டது.

வளர்க்காதீர்கள்; வளரவிடுங்கள்!

காலை வேளை. ஒரு பையனின் கையிலிருக்கும் ருபிக் க்யூபைப் பிடுங்குகிறார் அவனது அம்மா.

மற்றொரு வீட்டில் தன் மகளின் தலையை அவசர அவசரமாக வாரி அலங்கரிக்கிறார்கள்.

வேறொரு வீட்டில் பையன் அவசரமாகப் புத்தகங்களைப் பையில் திணிக்கிறான்.

இன்னொரு வீட்டில் தன் மகனுக்கு அவசர அவசரமாக உணவை ஊட்டி விடுகிறாள் அம்மா.

எதற்காக இந்தப் பரபரப்பு?

ஆம். ஓர் ஓட்டப்பந்தயம் நடக்கப் போகிறது. அதில் ஆயிரக்கணக்கான பெற்றோர்களும் மற்றவர்களும் பார்வையாளர்களாகவும் உற்சாகப்படுத்துபவர்களாகவும் இருக்கிறார்கள்.

வெவ்வேறு பள்ளி நிர்வாகிகள் ஓரிடத்தில் போட்டியிட்டுக் கொண்டு நெருங்கி அமர்ந்திருக்கிறார்கள். நடுவர் குழுவினர் ஓரிடத்தில் அமர்ந்திருக்கிறார்கள். பத்திரிகையாளர்கள் பரபரப்புடன் புகைப்படம் எடுக்கத் தயாராக இருக்கிறார்கள்.

பந்தயத்திற்குத் தயாராகும் மாணவர்கள் பதற்றத்துடன் சுற்றிலும் பார்க்கிறார்கள்.

இதில் வினோதம் என்னவென்றால், ஓட்டத்தில் கலந்துகொள்ளும் மாணவ - மாணவியரைத் தவிர்த்து, மற்ற அனைவரும் கருப்புத் துணியால் கண்களைக் கட்டியிருக்கிறார்கள்.

அப்போது துப்பாக்கியால் விண்ணை நோக்கிச் சுட்டு, போட்டி ஆரம்பிக்கப்படுகிறது.

மாணவர்கள் ஓட ஆரம்பிக்கிறார்கள். கண்கட்டப்பட்ட பார்வையாளர்களும் மற்றவர்களும் 'ஓடு, ஓடு' என்று கத்துகிறார்கள். மாணவர்கள் ஓடி வருகிறார்கள் எங்கே ஓடுகிறோம் என்று தெரியாமலேயே, இறுதி இலக்கு ... ஓ! அது ஒரு பாதாள பள்ளம்.

அதில் முதலாவதாக வரும் மாணவி விழுகிறாளே....

இத்துடன் அந்தக் குறும்படக் காட்சி முடிந்து ஒரு செய்தி வருகிறது: 'கடந்த ஐந்து வருடங்களில் கல்வித் திட்டம் மற்றும் சமூகத்தின் அழுத்தம் காரணமாக 39775 மாணவ - மாணவிகள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள்.'

சில பள்ளிகள் தங்களது முதல் இடத்தைத் தக்க வைக்க ஆசிரியர்களுக்கு அதிக அழுத்தம் கொடுத்து, சிந்திக்காத மாணவர்களை மனப்பாடம் செய்ய வைத்து, நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் வாங்கும் எந்திரங்களாக ஆக்குகின்றனர்.

பெற்றோர்களும் இதே மனமயக்கத்தில்தான் குழந்தைகளை வலியுறுத்தி ஓட வைக்கின்றனர்.

சமூக ஊடகங்கள் போன்ற மற்றவர்களும் இந்தப் போக்கினையே ஆதரிக்கிறார்கள். மாணவர்களுக்கும் சமூகத்திற்கும் எது நன்மை தருமோ அதை வலியுறுத்துவதில் படித்தவர்கள் கண்ணைக் கட்டிக் கொண்டு அமைதியாக இருக்கிறார்கள்.

விளைவு? மனஅழுத்தம் காரணமாக மாணவர் தற்கொலை வருடந்தோறும் அதிகரித்து வருகிறது.

சில வருடங்களுக்கு முன் ஐ.ஐ.டி-களில் தற்கொலை செய்து கொள்ளும் மாணவர்கள் அதிகரிப்பதால் அவர்களின் மன இறுக்கத்தைப் போக்க கரக்பூர் ஐ.ஐ.டி. தினமும் மாலை ஒரு மணிநேரம் தன் விடுதியில் விளக்குகளை அணைத்துவிட்டது. இதனால் மாணவர்கள் அந்த நேரத்தில் மற்ற மாணவர்களிடம் மனம் விட்டுப் பேசலாம். அதனால் மனஇறுக்கம் தளரும் என நிர்வாகம் எதிர்பார்த்தது.

மாணவர்களின் தற்கொலைப் போக்கைக் குறைக்க தமிழக அரசு கடந்த ஆண்டில் 10 மற்றும் 12 -ஆம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகளை வெளியிடும்போது தர வரிசை முறையை ரத்து செய்தது.

கலை மற்றும் பொறியியல் கல்லூரி மாணவர்களும் மிகுந்த இறுக்க நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். மனதளவில் விருப்பமின்றிப் படிப்பைத் தொடர்கின்றனர்.

தேசிய அளவில் தமிழகத்தில்தான் தற்கொலைகள் அதிகம். இவர்களில் பெரும்பாலோர் கல்லூரி மாணவர்கள்.

குருதாசன்

சராசரி மாணவரை நூற்றுக்கு நூறு மதிப்பெண் எடுக்கச் சொல்லி நிர்வாகம் கொடுக்கும் அழுத்தம், தோல்வியுறும் மாணவர்களிடம் அபராதம் வசூலிப்பது, ஆங்கிலம் பேசத் தெரியாதவர்களை இழிவாக நடத்துவது, காதல் தோல்வி, தாழ்வு மனப்பான்மை என்று பல்வேறு காரணங்களால் மாணவர்களின் தற்கொலைகள் அதிகரித்து வருகின்றன.

இதை எப்படித் தடுக்கலாம்?

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு அளிக்க வேண்டிய மிகப் பெரிய செல்வம் நமது பண்பாடு, கலாச்சாரம் மற்றும் தன்னம்பிக்கைதான்.

பண்பாடு மற்றும் கலாச்சாரத்தில் பெருமிதமும் தன்னிடத்தில் நம்பிக்கையும் கொண்ட எந்த மாணவ - மாணவியும் சூழ்நிலைகளின் எதிர்மறை நெருக்குதலுக்கு இரையாவதில்லை.

பொதுவாக, தோல்வி நேருகையில் ஒருவர் இரண்டு விதமான நிலைகளை எதிர்கொள்கிறார். 1. ஆக்கப்பூர்வமானது 2. எதிர்மறையானது.

ஆக்கப்பூர்வமான அணுகுமுறை என்பது தோற்று விட்ட சமயத்தில் மனம் விட்டுப் பேசுதல், இறைபக்தி, இசை, பாட்டு, நடனம், ஓவியம் என்று புதிதாக ஏதேனும் கற்றுக்கொள்வது, மகான்கள் மற்றும் சாதனையாளர்களின் வாழ்க்கையைப் படிப்பது, தோல்விகளால் துவளாது வாழ்வில் முன்னேறி வெற்றி பெற்றவர்களின் வரலாற்றை அறிவது போன்ற வழிமுறைகளால் ஒருவர் தன்னை மேம்படுத்திக்கொள்ள முயற்சிக்கலாம்.

எதிர்மறையான அணுகுமுறையில் தற்கொலை எண்ணம், போதைப் பொருள் பழக்கம், தன்னையும் மற்றவர்களையும் துன்புறுத்துவது போன்றவற்றைத் தோல்வியாளர்கள் மேற்கொள்கிறார்கள்.

உண்மையில் வெற்றியும் தோல்வியும் ஒருவரின் கண்ணோட்டத்தைப் பொருத்தே அமைகிறது.

'மனிதர்களோ, பணமோ, சொத்துக்களோ இருந்தாலும் இல்லாவிட்டாலும் தன்னிடத்தில் இருக்கும் நம்பிக்கை மூலம் எல்லாவற்றையும் சாதிக்கலாம்' என்கின்ற புரிதலைக் குழந்தைகளுக்கு அளிப்பவர்கள் சிறந்த பெற்றோர்கள்.

குழந்தைகளின் உடலையும் மனதையும் பலவீனப்படுத்துகின்ற விஷயங்கள் எது? வலிமைப்படுத்துவது எது? என்பதைப் புரிய வைத்து அவர்களது இயல்பிற்கு ஏற்ற வகையில் அவர்கள் வளர வழி வகை செய்யும் பெற்றோர்களும் உண்டு.

தங்களது விருப்பத்திற்கேற்ப பிள்ளைகள் வளர வேண்டும், படிக்க வேண்டும், மதிப்பெண்கள் வாங்க வேண்டும், வேலைக்குச் செல்ல வேண்டும் என்று அழுத்தம் கொடுத்து வளர்ப்பது நன்மைக்குப் பதில் தீமையே அளிக்கிறது அல்லவா! ❖

எல்லாமே தொலைந்துபோன பின் மீதமிருப்பது எதிர்காலம் மட்டுமே. - சான்றோர் வாக்கு

அதுதான் வேண்டும்!



ஸ்ரீராமகிருஷ்ணரிடம் உபதேசம் பெற்ற பிறகு சுபோத் (பிற்காலத்தில் சுபோதானந்தர்) தியானம் செய்யும்போது அடிக்கடி புருவங்களுக்கு மத்தியில் ஓர் ஒளியைக் கண்டார். இதைப் பற்றித் தன் தாயிடம் கூறியதும் அவர், ''நீ அதிர்ஷ்டசாலி. அதனால்தான் உனக்கு இதுபோன்று தோன்றுகிறது. இதை யாரிடமும் சொல்லாதே. சொன்னால் இதை இழந்துவிடலாம்'' என்றார்.

''இதனால் எனக்கு ஏதாவது தீங்கு ஏற்படுமா?'' என்று தன் தாயிடம் கேட்ட சுபோத், ''இந்த ஒளி எனக்குத் தேவையில்லை. இது எங்கிருந்து வருகிறதோ அதுதான் எனக்கு வேண்டும்'' என்று கூறினார்.

(சுவாமி சுபோதானந்தரின் ஜயந்தி தினம் - 1.11.2017 - புதன்கிழமை)

வியாசர் அருளிய

பாரத சாவித்ரி

மஹாபாரதம் ஸ்வர்காரோஹண பர்வத்தில் வியாசரால் இயற்றப்பட்ட இந்த பாரத சாவித்திரியில் மகாபாரதத்தின் நீதி சுருக்கமாக கூறப்பட்டுள்ளது.

மாதா பித்ரு ஸஹஸ்ராணி
புத்ரா தாரா சதானி ச |
ஸம்ஸாரேஷு அனுபூதானி
யாந்தி யாஸ்யந்தி சாபரே || 1

ஆயிரக்கணக்கான தாய் தந்தையர்கள், மனைவி மக்களோ நூற்றுக்கணக்கில், ஏராளமான பிறவிகளின் அனுபவத்தில் வந்து எதிர்காலத்திலும் தொடர்ந்து வருகின்றனர்.

ஹர்ஷ ஸ்தான ஸஹஸ்ராணி
பய ஸ்தான சதானி ச |
திவஸே திவஸே மூடம்
ஆவிசந்தி ந பண்டிதம் || 2

ஆயிரக்கணக்கில் இன்ப அனுபவங்கள், நூற்றுக்கணக்கில் பய அனுபவங்கள், இவை அறிவிலிகளைத்தான் பாதிக்கும்; அறிஞர்களுக்கு இவற்றால் பாதிப்பு இல்லை.

ஊர்த்வ பாஹுர் விரௌம்யேஷ
ந ச கச்சித் ச்ருணோதி மே |
தர்மாத் அர்த்தச்ச காமச்ச
தர்ம கிம் ந ஸேவ்யதே || 3

என் கைகளை உயரத் தூக்கி நான் உரக்கக் கூவுகிறேன். யாரும் கேட்க வில்லையே.

''தர்மம்தான் பொருளுக்கும் இன்பத்திற்கும் மூலம். எவருமே இந்த தர்மத்தைப் பற்றிக் கவலைப் படவில்லையே.''

ந ஜாது காமான் ந பயான் ந லோபாத்
தர்மம் த்யஜேத் ஜீவிதஸ்யாபி ஹேதோ |
நித்யோ தர்ம: ஸுகதுக்கே து அநித்யே
ஜீவோ நித்யோ ஹேது அன்யஸ்து அநித்யே || 4

ஆசைக்காகவோ பயம் காரணமாகவோ பேராசைக்காகவோ உயிர்வாழ்வதற்காக தர்மத்தை ஒரு போதும் கைவிடாதீர். தர்மம் நிலையானது, இன்ப துன்பமோ நிலையற்றவை. ஆன்மா நிலையானது, உடலோ நிலையற்றது.

இமாம் பாரத ஸாவித்ரீம் ப்ராதருத்தாய ய: படேத் |
ஸப்த ஜன்மக்ருதை: பாபை: ஸ முக்த: ஸுகம் ஏததே || 5

காலையில் துயிலெழுந்ததும் எவர் இந்த பாரத சாவித்ரியைப் படிக்கிறாரோ (அவர்) ஏழு ஜன்ம பாவங்களிலிருந்து விடுபட்டு உண்மையான சுகம் அடைவார்.

திவா வா யதி வா ராத்ரௌ வனேஷு விஷயேஷு ச |
ந பயம் வித்யதே கிஞ்சித் கார்ய ஸித்திர் பவிஷ்யதி || 6

இரவிலோ பகலிலோ வனத்திலோ விவாதத்தின் போதோ இதைப் படிப்பவர்க்கு எவ்வித பயமும் ஏற்படாது. அவரது காரியம் நிறைவேறும்.

யத் பலம் கோ ஸஹஸ்ரஸ்ய ஸ்வர்ணேன அலங்க்ருதஸ்ய ச |
தத்தஸ்ய வித்தினா பாத்ரே தத் பலம் லபதே நர: || 7

முறைப்படி தகுந்த நபருக்கு, தங்கத்தால் அலங்கரிக்கப்பட்ட ஆயிரம் பசுக்களைத் தானம் செய்வதால் உண்டாகும் பயனை அவன் அடைவான்.

அஹோ ராத்ர க்ருதம் பாபம் ச்ரவணாத் த்யேவ நச்யதி |
ஸம்வத்ஸர க்ருதம் பாபம் படனாத் த்யேவ நச்யதி || 8

ஒரு முழுநாளில் செய்த பாவம் இதைக் கேட்டாலே நசிந்துவிடும். ஓர் ஆண்டில் செய்த பாவம் இதைப் படித்தால் நசிந்து விடும்.

தொகுப்பு : க.ஜெயராமன்

சந்தாதாரர்கள் கவனத்திற்கு!

✶ அன்பு சந்தாதாரர்களான நீங்கள் உரிய காலத்தில் உங்களின் சந்தாவைப் புதுப்பித்து, விஜயம் தொடர்ந்து உங்களுக்குச் சேவையாற்றிட உதவுங்கள்.

✶ முகவரியின் முதல் வரியில் உள்ள எண்ணானது (RV என்று தொடங்குவது) உங்களின் விஜயம் இதழின் சந்தா எண். அந்த எண்ணைத் தங்களது எல்லாக் கடிதங்களிலும் குறிப்பிடவும்.

✶ இரு வாரங்களுக்குப் பிறகும் இதழ் கிடைக்காவிடில், எங்களிடமிருந்து மாற்று இதழ் பெறலாம். இதழ் கிடைக்காதது குறித்து ஒரு மாதம் அல்லது அதற்கு மேல் வரும் புகார்கள் (வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் 2 மாதத்திற்கு மேல் தெரிவிக்கும் புகார்கள்) ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

தொடர்புக்கு ✆:044- 24621110. Extn : 215

உங்களைக் குறித்து நீங்களே சிந்தியுங்கள்; மற்றவர்கள் மூலமாக உங்களைப் பற்றிச் சிந்திக்காதீர்கள். - ஸ்ரீராமகிருஷ்ணர்

சகோதரி நிவேதிதை

விரிவான வாழ்க்கை வரலாறு

பாரததேசம் அடிமைத்தனம் என்ற கொடிய இருளில் தவித்தபோது, அந்த பாரதத்தின் மகிமை எனும் தீபத்தை ஏந்தியபடி மக்களுக்கு விழிப்புணர்வை ஊட்டியவர்; பாரதம் சுதந்திரம் பெறுவதற்கும் அது பல துறைகளில் சிறந்தோங்கி விளங்குவதற்கும் வேண்டிய பல அரும் தொண்டுகளைக் காலத்தின் தேவையைப் பூர்த்தி செய்யும் விதமாகச் செய்து முடித்தவர் சுவாமி விவேகானந்தரின் ஆன்மிகப் புதல்வி சகோதரி நிவேதிதை ஆவார்.

ஸ்ரீராமகிருஷ்ண-விவேகானந்தரின் சன்னிதியில் நின்றபடி, அவர்களின் செய்தியை உலகிற்குத் தருகின்ற தேவதூதுப் பெண்ணாகத் தம்மைக் கண்டு பணியாற்றியவர் சகோதரி. அவரது வரலாற்றைப் படிப்பது, பாரதத் திருநாட்டின் அரசியல் வரலாற்றையும் ஆன்மிக வரலாற்றையும் ஒரு சேரப் படிப்பதாகும்.

தமிழில் இதுவரை வெளிவராத பல அரிய தகவல்களுடன் சகோதரியின் 150-வது பிறந்த தினமான அக்டோபர் 28-அன்று 'சகோதரி நிவேதிதை - விரிவான வாழ்க்கை வரலாறு' எனும் நூல் 650 பக்கங்களுடன் வெளியாகிறது.

ஆசிரியர் : **சுவாமி ஆசுதோஷானந்தர்**



விலை ~~ரூ.400/-~~

சலுகை விலை

ரூ.300/-

தபால் செலவு ரூ.45/-

ஸ்ரீராமகிருஷ்ண மடம், 31, ஸ்ரீராமகிருஷ்ண மடம் சாலை, மயிலாப்பூர், சென்னை - 4. ✆ : 2462 1110.

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் நிரந்தர வைப்பு நிதி

ஸ்ரீராமகிருஷ்ண விஜயத்தின் வாசகர்களே! அன்பர்களே! உங்களின் தொடர்ந்த அன்பாலும் ஆதரவாலும் விஜயம் நூற்றாண்டை நோக்கி வெற்றி நடை போட்டவாறு தனது 97-ஆம் ஆண்டில் பயணம் செய்து வருகிறது. விஜயம் தமிழகத்திலேயே மூத்த ஆன்மிகப் பத்திரிகை. தெய்வ பக்தியையும், தேச பக்தியையும் வளர்ப்பது – இது உங்கள் அனுபவங்கள்.

தற்போது செலவுகள் மிகவும் அதிகரித்த போதிலும் விஜயம் லாப நோக்கமற்று, சேவையையே குறிக்கோளாகக் கொண்டு வெளியிடப்பட்டு வருகிறது. தற்போது விஜயத்தின் நிதிநிலையை அதிகரிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். விஜயத்தின் நிரந்தர வைப்பு நிதிக்கு நல்ல உள்ளம் படைத்த அன்பர்களும் பக்தர்களும் நன்கொடைகள் அளித்துள்ளார்கள். நீங்களும் உங்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்களையும் வைப்பு நிதிக்கு நன்கொடை அளிக்க ஊக்கப்படுத்துங்கள்.

நன்கொடைகளை Sri Ramakrishna Math என்ற பெயரில் DD/செக் எடுத்து 'ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் நிரந்தர வைப்பு நிதி' என்று குறிப்பிட்டு அனுப்பவும். http://donations.chennaimath.org// என்ற இணைய தள முகவரியில் நன்கொடைகளை நேரடியாகச் செலுத்தலாம். ரூ. 1000-க்கு மேல் நிதியளிப்பவர்களின் பெயர்கள் விஜயத்தில் வெளியிடப்படும்.

நன்கொடைகளுக்கு வருமான வரி சட்டப் பிரிவு 80 G-யின் கீழ் வரிவிலக்கு உண்டு.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் தங்களுக்கு அனைத்து நலன்களையும் தந்தருளப் பிரார்த்திக்கிறோம். -சுவாமி கௌதமானந்தர், தலைவர்.

ஸ்ரீராமகிருஷ்ண மடம், 31, ஸ்ரீராமகிருஷ்ண மடம் சாலை, மயிலாப்பூர், சென்னை - 4. ✆ : 2462 1110.
e-mail : mail@chennaimath.org website : www.chennaimath.org

1.9.2017 முதல் 30.9.2017 வரை நன்கொடை அளித்தவர்கள்

(பெயர்களுக்கு முன்பு திரு/திருமதி என்று சேர்த்துப் படிக்கவும்.)

	நன்கொடை ரூபாய்
ஆர்.புவனேஸ்வரி, பம்மல், சென்னை.	10001/-
ஓ.பூபதி வெங்கடேஷ், பெருமாகவுண்டன்வலசு, கோபி.	10000/-
சி.ஜி. தண்டபாணி, சித்தூர், ஆந்திரா.	5000/-
ஸ்ரீநிதி ராமச்சந்திரா, பெங்களூரு.	5000/-
ஆர்.கோவிந்தன், பெங்களூரு.	5000/-
கே. விஜயராகவன் & வி.காயத்ரி, சென்னை.	5000/-
எஸ்.பிரேமலதா, கொரட்டூர், சென்னை.	5000/-
வி.விஸ்வநாதன், அசோக் நகர், சென்னை.	5000/-
எஸ்.வாஞ்சிநாதன், ஆதம்பாக்கம், சென்னை.	5000/-
எஸ்.கமலகுமார், நபோ நகர், பெங்களூர்.	3000/-
டாக்டர் ஆர்.கே.நாகு, அய்யாவு காலனி, சென்னை.	2000/-
ஓ.என்.ஜெயலட்சுமி, வில்லிவாக்கம், சென்னை.	2000/-
ஆர்.சசிரேகா, மேற்கு மாம்பலம், சென்னை.	2000/-
காயத்ரி பாலாஜி, வெற்றி நகர், சென்னை.	2000/-
பாக்கிய ரத்தினம், திருவொற்றியூர், சென்னை.	1500/-
வி.எஸ்.குருநாதன், கூடுவாஞ்சேரி, சென்னை.	1500/-
ராமகிருஷ்ணா கலர் கம்பெனி, திருப்பூர்.	1012/-
எஸ்.வி.சுந்தரம், மும்பை.	1005/-
பி.ராம்ராஜ், பாரதியார் பல்கலைக் கழகம், கோவை.	1001/-
சங்கரன் சீனிவாசன், பல்லாவரம், சென்னை	1001/-
ஜி.கே.பவதாரிணி, D/o.ஜி.கவிதா, ஓசூர்.	1000/-
கே.ஏ.தேவராஜன், நுங்கம்பாக்கம், சென்னை.	1000/-
வி.சிந்துஜா, அண்ணா நகர் கிழக்கு, சென்னை.	1000/-
பேபி பைரவி, விருகம்பாக்கம், சென்னை.	1000/-
ஜெ.சுப்ரமணியன், பைபாஸ் ரோடு, மதுரை.	1000/-
பி.தியாகராஜன், சாலிகிராமம், சென்னை.	1000/-
எஸ்.ஸ்ரீவித்யா, கே.கே.நகர், சென்னை.	1000/-
எஸ்.சுப்புராஜ், கைக்கான்குப்பம், சென்னை.	1000/-
எஸ்.ஸ்ரீதரன், வளசரவாக்கம், சென்னை.	1000/-

வேதாந்த தேசிகர்

பிறரின் குறைகளைக் காண்பது எளிது; நமது குறைகளை உணர்வது அரிது. - அன்னை ஸ்ரீசாரதாதேவி

ஸ்ரீராமானுஜர் வழிகாட்டிய வைணவத்தையும் திராவிட வேதமான திவ்ய பிரபந்தங்களையும் மேலும் பிரகாசிக்கச் செய்தவர் வெங்கடநாதன் என்கிற ஸ்ரீவேதாந்த தேசிகர். இவ்வருடம் அவரது (1.10.2017) 750-வது வருடம் ஆகிறது.

ஜனனம்

அனந்த ஸூரி - தொத்தாரம்ம என்கிற ஆன்மிக தம்பதி காஞ்சி அருகே துப்புல் என்ற தலத்தில் வசித்து வந்தனர். அவர்களுக்கு சந்தான பாக்கியம் இல்லை. அதற்காகப் பிரார்த்திக்க காஞ்சியிலிருந்து திருப்பதிக்கு நடந்தே சென்றனர். இரவு ஒரு மண்டபத்தில் தங்கினர். அப்போது தொத்தாரம்ம ஒரு சிறுவன் தந்த மணியைத் தான் உண்டதாகக் கனவு கண்டாள். காலையில் அவளுக்கு கர்ப்பமானதாக உணர்வு தோன்றியது!

கோயிலில் கர்ப்பகிரகத்தில் மணியைக் காணாது அர்ச்சகர்கள் திகைத்தபோது பகவான் அசரீரியாக, 'நானே அதை தொத்தாரம்மவுக்கு அளித்தேன். அவளுக்குச் சிறந்த சத்புத்திரன் பிறப்பான்' என்றார். இன்றும் திருப்பதி கர்ப்பகிரகத்தில் மணி கிடையாது. நிவேதனத்தின்போது வெளியில் உள்ள பெரிய மணியே அடிக்கப்படும்.

1268-ஆம் வருடம் (ராமானுஜர் மறைந்து 130 வருடங்களுக்குப் பிறகு), விபவ ஆண்டு, ஸ்ராவண மாதம், திருவோண நக்ஷத்திரத்தில் வேதாந்த தேசிகர் பிறந்தார். குழந்தைக்குப் பெற்றோர் வெங்கடநாதன் என்ற பெயர் வைத்தனர். குழந்தை மிகவும் சூடிகை. ஒருமுறை கேட்டதும் கிரகித்துக்கொள்ளும் ஏகசந்தக்ராஹி.

வெங்கடநாதன் தன் உறவினர் ஆத்ரேய ராமானுஜரிடம் (கிடாம்பி அப்புள்ளார்) வேதம், புராணங்கள், இதிகாசங்கள், திவ்யபிரபந்தங்கள் போன்றவற்றை 20 வயதுக்குள்ளேயே கற்றுக் கொண்டார். இவரைக் கண்டவர்கள், 'இவர் என்ன நாதமுனி, ஆளவந்தார், ராமானுஜர் மூவரின் ஞானத்தையும் ஒருங்கே பெற்றுள்ளாரா!' என்று வியந்தனர். 21 வயதில் கனகவல்லி எனும் மங்கையை மணந்தார்.

பகவத் அனுக்ரஹம்

திருவஹீந்திரபுரம் கோயிலில் அப்புள்ளார் தனக்கு உபதேசித்த கருட வேதரூப மந்திரத்தை உபாஸனை செய்தார் வெங்கடநாதன். கருட பஞ்சாசத் துதிகளை அவர் இயற்றினார். கருடன் மகிழ்ந்து, ஹயக்ரீவர் மந்திரம் ஈந்து அவரை ஆசீர்வதித்தார்.

மந்திரத்தை ஆழ்ந்து உபாசித்த வெங்கடநாதருக்கு ஹயக்ரீவர் தரிசனம் தந்து, தமது வாயிலிருந்து அவரது வாயில் அமுதத்தை ஊற்றி, ஹயக்ரீவ விக்ரகமும் ஈந்தார். அது தற்போது திருவஹீந்திரபுர தேவநாத கோயிலில் உள்ளது.

ஹயக்ரீவர் மீது 33 துதிகள் செய்துள்ளார் தேசிகர். ஒரு சில :

1. ஞானானந்தமயம் தேவம் நிர்மல ஸ்படிகாக்ருதிம் ஆதாரம் ஸர்வ வித்யானாம் ஹயக்ரீவம் உபாஸ்மஹே.

2. திஸந்து மே தேவ ஸதா த்வதீயா:
தயாதரங்க அனுரா: கடாக்ஷா:

3. ஸ்ரோத்ரேஷு பும்ஸாம் அம்ருதம் க்ஷரந்தீம்
ஸரஸ்வதீம் ஸம்ஸ்ரித காமதேனும்.

பகவான் ஆக்ஞையால் தேவநாயக பஞ்சாசத் இயற்றினார். இது திருமுடி முதல் திருவடி வரை அழகாக வர்ணித்து, நாயகி பாவத்தில், மனம் நெகிழ்ந்து துதித்தது. அச்யுதசதகம் என்று 100 துதிகள் மற்றும் மும்மணிக் கோவை, நவமணி மாலை எனத் தமிழிலும் இந்த தேவநாதர் மீது துதித்துள்ளார். 15 வருடங்கள் திருவஹீந்திரபுரத்தில் தங்கியபின் காஞ்சி வந்தார். காஞ்சி வரதர் மீது வரதராஜ பஞ்சாசத் என 50 துதிகள் செய்தார். இதில் 'வைகாசி பிரம்மோத்சவத்திலும், உமது ரூபத்திலும்தான் ஈடுபாடு, வைகுண்டவாச ஆசையுமில்லை' என்கிறார் தேசிகர்.

1317-ஆம் வருடம் ஆவணி ரோஹிணியில் வரதராஜன் என்ற சந்தானம் பெற்றார். தகப்பனாரிடமே கல்வி யாவும் கற்றான் பிள்ளை. புலிக்குப் பிறந்தது பூனையாகுமா என்பதற்கு ஒப்ப, கல்வி,

ஞானத்தில் சிறந்து விளங்கினான்.

தேசிகர் திருப்பதிக்குச் சென்று வெங்கடாஜலபதியைத் தரிசித்தார். அங்கிருந்து வைணவர்களுக்கு முக்கிய க்ஷேத்திரமான ஸ்ரீரங்கம் வந்தார். வழியே ராமானுஜர் அவதரித்த ஸ்ரீபெரும்புதூர் க்ஷேத்திரத்தின் பெருமாளையும் தரிசித்தார். ராமானுஜர் மீது யதிராஜ ஸப்ததி என்று 74 துதிகள் செய்தார். அதில் வரும் ஒரு துதி:

ரங்கேச பக்தஜா மானஸ ராஜஹம்ஸோ
ராமானுஜ சரணம் அஸ்து முனி:
ஸ்வயம் நா

ஸ்ரீரங்கநாதர், வெங்கடநாதரின் ஞான கவித் திறமையில் மகிழ்ந்து 'வேதாந்தா சார்ய' என்று அழைத்தாராம்.

1327-இல் ஸ்ரீரங்கம் கோயில் முகம்மதி யரால் தாக்கப்பட்டது. ஆகவே மேல்கோட்டைக்கு வந்தார். ரங்கநாதர் மேல் 'அபீதிஸ்தவம்' என்ற துதிகளால் பாடி ஸ்ரீரங்கம் மேன்மை அடைய வேண்டினார். இதனைத் துதிக்க பயம் அகலும் என்பர். மேல்கோட்டையில் 12 வருட காலம் தங்கினார். சுவாமி தேசிகரின் நின்ற திருக்கோல விக்ரஹத்தை இங்கு காணலாம்.

ஸ்ரீரங்கம் திரும்பி வந்து திவ்ய பிரபந்தம், பகல் பத்து, ராப்பத்து உற்சவங் களை மீண்டும் துவக்கினார். சில வைணவர்கள், 'திவ்யபிரபந்தம் பிராம்மணர் அல்லாதவர்களாலும் பாடப் பட்டது. ஆக, அவற்றைக் கோயிலில் பாடக் கூடாது; ஆழ்வார்கள் விக்கிரஹமும் இருக்கக் கூடாது' என்றனர். வடமொழியில்தான் துதிக்க வேண்டும் என்பது அவர்கள் வாதம். பக்திக்கு இனம், மொழி வித்தியாசம் கிடையாது. நாயன்மார் களிலும் பிராம்மணர் அல்லாதார் உண்டே!

ஆழ்வார்களின் திவ்யபிரபந்தம் வேதாந்த சாரம் என்று அவர்களுக்குப் புரிய வைத்து, வருட உத்ஸவங்களையும் ஆரம்பித்தார் தேசிகர். ரங்கநாதரைப் பாதம் முதல் கேசம் வரை திருப்பாணாழ் வாரையொற்றி 8 துதிகளால் துதித்தார்.

சில வித்வான்கள் அவரிடம், '1000 துதிகளை ஒரே நாளில் செய்ய முடியுமா?' என்று குதர்க்கமாகக் கேட்டனர். விடியல் 4 மணியிலிருந்து 7 மணிக்குள் பாதுகா ஸஹஸ்ரம் முடித்தார் தேசிகர்.

ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆண்டாளை கோதா ஸ்துதி என்று 29 துதிகளால் துதித்துள்ளார் தேசிகர்.

தேசிகரின் குண / லீலைகள்

தேசிகர் உஞ்சவ்ருத்தி செய்து வாழ்க்கை நடத்தினார். சில குணசீலர்கள், அரிசியு டன் தங்க நாணயங்கள் இட்டனர். தர்ப்பை யால் அவற்றை நீக்கி வெளியே எறிந்தாராம். எத்தகைய ஆழ்ந்த விவேகம்!

ஒரு பிரம்மசாரி தன் கல்யாணத்திற்குப் பணம் அளிக்கும்படி தேசிகரிடம் வேண்டினான். அவர் அவனுடன் வரதராஜர் கோயில் வந்து, பெருந்தேவி சந்நிதியில் ஸ்ரீஸ்துதி என்று 25 துதிகளில் துதித்தார். உடனே தங்கமழை பெய்தது.

ஒரு மந்திரவாதி கொடுத்த நீரைக் குடித்ததும் தேசிகரின் வயிறு மிகப் பெரியதாக வீங்கியது. அவர் அருகிலிருந்த தூணில் குத்த, நீர் அதனிலிருந்து வெளியேறியதாம். தேசிகர் வயிறு சாதாரணமாகியது. மந்திரவாதி மன்னிக்க வேண்டினான்.

ஒரு சிற்பி, தேசிகரிடம் தான் செய்த பீடத்தில் அவரே வடித்த அவரது சிலையை வைக்க வேண்டினான். தேசிகர் செய்த சிலையை பீடத்தில் வைக்க முடியாததால், சிற்பி அதைச் சிறிது சேதித்தான். தேசிகர் உடலில் அதே இடத்தில் ரத்தம் கசிந்ததாம்! சிற்பி, மன்னிப்பு கேட்டு, தனது பீடத்தைச் சரி செய்தானாம். அந்தச் சிலை இன்றும் திருவஹீந்திரபுரத்தில் உள்ளது.

மறைவு

தேசிகர் தமது 101-வது வருடத்தில் ஸ்ரீரங்கநாதர் அனுமதியுடன் தமது குமாரன் வரதராஜன் மடியில் தலைவைத்து 1369-இல் உடலை நீத்தார்.

ஸ்ரீரங்கநாயகித் தாயார் தேசிகரின் அருமையை உணர்த்த, தன் எதிரே தேசிகருக்கு சந்நிதி அமைக்க உத்தரவிட்டா ளாம். இன்றும் ஸ்ரீரங்கத்தில் தேசிகர் சந்நிதியைக் காணலாம்.

ஸ்ரீராமானுஜர் ஆரம்பித்த விசிஷ்டாத்வைதம் தேசிகரின் அற்புதத் திறமையால் மேம்பட்டது. அவரது துதிகள் அர்த்த புஷ்டியுடன், பலன் அளிக்கக்கூடியவையாகவும் உள்ளன.

கவிதார்க்கிகஸிம்ஹாய கல்யாணகுணசாலினே
ஸ்ரீமதே வேங்கடேசாய வேதாந்தகுரவே நம: ❖

நேரம் ஒதுக்குங்கள்!

சிரிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள். அது இதயத்தின் இசை

சிந்திப்பதற்கு நேரம் ஒதுக் குங்கள். அது சக்தியின் சிறப்பிடம்

விளையாட நேரம் ஒதுக்குங்கள். அது இளமையின் ரகசியம்

படிக்க நேரம் ஒதுக்குங்கள். அது அறிவின் ஊற்று

நட்புக்கு நேரம் ஒதுக்குங்கள். அது மகிழ்ச்சிக்கு வழி

உழைக்க நேரம் ஒதுக்குங்கள். அது வெற்றியின் விலை

தகவல்: நல்ல சிந்தனைகள் கையேடு

இரண்டு முயல்களைத் துரத்துபவனால் ஒன்றையும் பிடிக்க முடியாது. - பழமொழி

ஸ்ரீ ராமஜெயம்

வடமாநில புனித யாத்திரை

47 ஆண்டுகளுக்கு மேலான அனுபவம்

18.01.2018 **இது 8 நாட்கள் 64 திவ்ய தேசங்கள்.** சோழநாடு, தொண்டநாடு, நடுநாடு - நபர்கட்டணம் ரூ. **10,500/-**

19.01.2018 **இது 10 நாட்கள் கொண்ட ஆந்திர பிரதேஷ் யாத்திரை.** - கட்டணம் ரூ. **12,700/-**

28.01.2018 **இது 8 நாட்கள் கொண்ட கேரள திவ்ய தேசங்கள் 13 பாண்டிய நாட்டு திவ்ய தேசங்கள் 18** மற்றும் பல இடங்கள் - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. **10,750/-**

01.02.2018 **இது 10 நாட்கள் கொண்ட கர்நாடக யாத்திரை.** ஒருவருக்கு கட்டணம் ரூ. **12,500/-**

11.02.2018 **இது 8 நாட்கள் கொண்ட 5 ஜோதிர்லிங்கம்** மற்றும் பல இடங்கள் - கட்டணம் ரூ. **10,400/-**

11.02.2018 **இது 11 நாட்கள் கொண்ட 7 ஜோதிர்லிங்கம்** மற்றும் பல இடங்கள் - கட்டணம் ரூ. **13,500/-**

18.02.2018 **இது 15 நாட்கள் கொண்ட பஞ்ச துவாரகை யாத்திரை.** இத்துடன் புஸ்கர தீர்த்தம் கடல் உள்வாங்கும் பாண்டவர்கள் வழிபட்ட சிவஸ்தலம் - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. **17,600/-**

28.02.2018 **இது 8 நாட்கள் கொண்ட மலேசியா – சிங்கப்பூர் சுற்றுலா.** - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. **64,000/-**

07.03.2018
11.04.2018 **இது 13 நாட்கள் கொண்டது.** பூரி ஜெகன்னாத், கோனாரக், புவனேஸ்வர், கொல்கத்தா, கௌஹாத்தி, மேகாலயா, சில்லாங், சிரபுஞ்சி, சிக்கிம், டார்ஜிலிங் - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. **17,200/-**

19.03.2018 **இது 19 நாட்கள் கொண்ட உபன்யாச யாத்திரை** ஆக்ரா, மதுரா, கோகுலம், நியூடெல்லி, ஹரித்துவார், ரிஷிகேஷம், நைமிசாரண்யம், அயோத்தியா, அலகாபாத், சித்ரகூடம், கயா, புத்தகயா, காசி, சாரநாத் - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. **16,500/-**

19.03.2018 **இது 12 நாட்கள் கொண்ட உபன்யாச யாத்திரை** ஆக்ரா, மதுரா, கோகுலம், நியூடெல்லி, ஹரித்துவார், ரிஷிகேஷம், - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. **10,500/-**

30.03.2018 **இது 9 நாட்கள் கொண்டது.** பிரயாகை, சித்ரகூடம், கயா, புத்தகயா, காசி, சாரநாத் - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. **10,000/-**

02.04.2018 **இது 15 நாட்கள் கொண்ட யாத்திரை.** காசி, சாரநாத், கோரக்பூர், சனோலி, காட்மாண்டு, போக்ரா, முக்திநாத், மனகாமனா அம்மன் கோவில், ஜனக்பூர், தனுஷாதாம், லும்பினி - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. **17,700/-**

25.04.2018 **இது 7 நாட்கள் கொண்ட தாய்லாந்து, கம்போடியா சுற்றுலா.** - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. **65,000/-**

03.05.2018 **இது 17 நாட்கள் கொண்ட யாத்திரை.** அலகாபாத், கயா, புத்தகயா, காசி, சாரநாத், ஹரித்துவார், ரிஷிகேஷம், நியூடெல்லி, கேதார்நாத், பத்ரிநாத், தேவபிரயாகை, ஜோஷிமடம், ஆக்ரா, மதுராபிருந்தாவன், கோகுலம் - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. **19,750/-**

17.05.2018 **இது 17 நாட்கள் கொண்ட சார்தாம் யாத்திரை.** ஹரித்துவார், ரிஷிகேஷம், கேதார்நாத், பத்ரிநாத், ஆதிபத்ரி, விசால்பத்ரி, யோகபத்ரி, த்யான பத்ரி, த்ரியுகி நாராயண், கங்கோத்ரி, யமுனோத்ரி, தேவப்ரயாகை, ஜோஷிமடம், நியூடெல்லி, ஆக்ரா, மதுராபிருந்தாவன், கோகுலம் - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. **20,500/-**

17.05.2018 **இது 12 நாட்கள் கொண்டது.** ஹரித்துவார், ரிஷிகேஷம், கேதார்நாத், பத்ரிநாத், தேவப்ரயாகை, ஜோஷிமடம், ஆக்ரா, மதுரா, கோகுலம், நியூடெல்லி - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. **16,000/-**

2018ஆம் ஆண்டு யாத்திரை விபரங்களை
தொலைபேசியில் தெரியப்படுத்தினால் அனுப்பி வைப்போம்.

ஒரே குழுவாக வருபவர்களுக்கு நீங்கள் விரும்பும் இடங்கள் ஏற்பாடு செய்து தருகின்றோம்.

ஆங்காங்கு தங்கும் வசதிகள், ஊர்சுற்றிப் பார்க்க பஸ் கட்டணம், தூங்கும் வசதி கொண்ட இரண்டாம் வகுப்பு ரயில் கட்டணம், கைதேர்ந்த தென்னிந்திய பிராம்மணர்களைக் கொண்டு காலை - காபி, டிபன்; மதியம், இரவு உணவளிப்பதுடன் இங்கு குறிப்பிட்ட அனைத்துச் செலவுகளும் எங்களைச் சேர்ந்தவை. எந்த யாத்திரைகளில் கலந்து கொள்வதானாலும் குறைந்தபட்சம் 125 நாட்களுக்கு முன் முன்பதிவு செய்து கொள்வது நலம்.

மேலும் விவரங்களுக்கு:-

ஸ்ரீ விஜயலட்சுமி டிராவல் சர்வீஸ்

பழைய எண். 55/3, புதிய எண். 12, சிங்கராச்சாரி தெரு, (நல்ல தம்பி தெரு கார்னர்)
திருவல்லிக்கேணி, சென்னை - 5. ✆ : **28440144** உரிமையாளர் : **S. ஜெயராமன்**
E-mail:sreevijayalakshmitravels@gmail.com ⌖ www.sreevijayalakshmitravels.com

கோயில் வழிபாடு

கோயிலில் கூட்டம் அதிகமாக இருந்தது. வசந்தன் அப்பாவிடம் கேட்டான்: ''அப்பா! கோவிலில் நாம் வழிபட வேண்டிய வழிமுறை என்ன?''

அவனது அப்பா சற்று ஓரமாக, நின்று வசந்தனுக்குப் பதில் சொல்லத் தொடங்கினார்: ''முதலில் கோபுர தரிசனமும் பின் பலிபீடத் தருகே வணங்கியும் விநாயகரைத் தொழ வேண்டும்.

''கருவறையின் வெளியில் இருக்கும் துவார பாலகர் களாகிய இறை அடியார்களை வணங்கி, பின் கோவிலுக் குள் செல்ல வேண்டும். இறைவனின் திருமுன் கைகூப்பி பணிவோடு பிரார்த்தனை செய்ய வேண்டும். ஓதுவார் சுவாமிகள் பாடும் தேவாரம், திருவாசகம் போன்றவற்றைக் காதாரக் கேட்டு, இறைவனுக்குச் செய்யப்படும் ஆரதியைத் தரிசிக்க வேண்டும்.

''சிவாச்சாரியார் தரும் விபூதி பிரசாதத்தைப் பெற்று, தரையில் சிந்தாமல் பூசிக்கொள்ள வேண்டும் பின் அம்பிகையின் சந்நிதிக்குச் செல்ல வேண்டும்.''

பிறகு வசந்தன் அபிராமிப் பாட்டியிடம், ''பாட்டி இத்தனை சுவாமிகள் இருக்கிறார்களே, இவர்களை எவ்வாறு வணங்க வேண்டும்?''

பாட்டி தொடங்கினார்: ''கோயில் அமைப்பு முறைக்கு ஏற்றவாறு துர்க்கா தேவி, லிங்கோத்பவர், தட்சிணாமூர்த்தி சந்நிதி என்றவாறு வணங்க வேண்டும். உற்சவர் சந்நிதிகள், பைரவர், மகாவிஷ்ணு, முருகப் பெருமான், நாயன்மார்கள், ஆழ்வார்கள் என்றவாறும் வணங்க வேண்டும். கோயிலில் தேவையற்றதைப் பேசக் கூடாது. படாடோபமின்றி அமைதி யாக தியான மண்டபத்தில் இறைநாமத்தை ஜபிக்க வேண்டும்.

''ஒருவேளை சொற்பொழிவுகள் நடந்தால் அவற்றை நிதானமாகக் கேட்க வேண்டும். இறைவனுக்குப் பூ, பழம் என்று நிவேதனப் பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டும் என்று பெரியோர் கூறுவர். கோயில் திருப் பணிக்காக உண்டியலில் பணம் இட வேண்டும்.''

வழிபாடு முடிந்ததும் வசந்தன் இன்னொரு கேள்வியையும் கேட்டான். ''பாட்டி, இறைவன் திருமுன்பு இன்று விதவிதமாக உபசார பொருட் களைக் காட்டினார்களே, அவை என்னென்ன?''

''முதலில் தீபங்கள் - தீபங்களில் ஒற்றைத் தீபம், நாகதீபம், ரிஷப தீபம், அடுக்கு தீபம், பஞ்ச தீபம், கும்ப தீபம், கற்பூர தீபம் என்றெல்லாம் வகைகள் உண்டு. பின் கொடி, குடை, ஆலவட்டம், சாமரம் என்னும் பொருட்களை இறைவன் திருமுன் மரியாதை நிமித்தமாகக் காண்பிப்பர். மலர்கள், வில்வம், துளசி, தாமரை போன்றவற்றை யும் சமர்ப்பிப்பார்கள். முடிவில் இறைவனுக்கு உணவுப் பொருள்கள் நிவேதனம் செய்வார் கள். நாதஸ்வரம், திருமுறை ஓதுதல், நாட்டியம் போன்றவற்றையும் இறைவன் திருமுன்பு சமர்ப்பிப்பது மரபு.''

''கடவுளுக்குச் செய்யப்படும் அபிஷேகத்தைப் பற்றி சொல்லுங் களேன் பாட்டி?'' என்று கூறி ஆர்வமாகப் பார்த்தான் வசந்தன்.

''பொதுவாக மூலவருக்கும், உற்சவ மூர்த்திக்கும் அபிஷேகம் அல்லது திருமஞ்சனம் நடைபெறும்.

''எண்ணெய், வாசனைத் திரவியங்கள், பால், தேன், தயிர், கரும்பு, எலுமிச்சை பழம், இளநீர், பழங்கள் சேர்ந்த பஞ்சாமிர்தம், பன்னீர், திருநீறு ஆகியவை இறைவன் திரு மேனியில் அபிஷேகம் செய் யப்படுவது உண்டு. விசேஷ மந்திரத்துடன் உருவேற்றப் பட்ட நிறைகுடத்து நீரையும் (கலசம்) அபிஷேகம் செய்வர்.''

''பாட்டி, கோயிலின் நிறைவில் சண்டேஸ்வர சுவாமியை தரிசனம் செய்யும்போது சிலர் கைதட்டு கிறார்களே?'' என்றான் வசந்தன்.

''சண்டேஸ்வரர் இறைவனின் திருக்குமாரராகக் கருதப்படுபவர். எப்போதும் இறைதியானத்தில் இருப்பவரைச் சுற்றி வலம் வரக்கூடாது. அவர் திருமுன்பு அமைதியாக இறைவனிடம் கூறிய பிரார்த்தனை நிறைவேற வேண்டும் எனக் கேட்க வேண்டும். கை தட்டி ஆரவாரம் செய்வது மரபல்ல.

''கோயிலை ஒன்று அல்லது மூன்று முறை வலம் வருதல் மிகுந்த நன்மை தரும்'' என்று முடித்தார் அபிராமி பாட்டி.

'பாட்டி, கோயிலில் சுவாமி ஊர்வலம், தேர் திருவிழா பற்றி சொல்லுங்களேன்'' என்று ஆரம்பித்தான் வசந்தன்....

❖

சிறுவர் சமய ஞானம்

உண்மையைக் கூறி என்னைத் தாங்கு. ஆனால் பொய்யைக் கூறி என்னைத் தாங்காதே! - பெரியோர் வாக்கு

பெண்களின்



பொறுப்புடன் கூடிய சுதந்திரம் மட்டுமே தனிப்பட்ட மகிழ்ச்சியின் அடித்தளம். - அப்துல்கலாம்

சுவாமி விவேகானந்தர், இந்தியப் பெண்களின் மேம்பாட்டைப் பற்றி சிந்திப்பதற்கே, தம் குறுகிய வாழ்நாட்களின் பெரும்பகுதியை அர்ப்பணித்தார். அவர் வெளிநாட்டிற்குச் சென்றிருந்த போது, அங்கே மேற்கத்தியப் பெண்களுக்கிருந்த சுதந்திரம், கல்வி, முன்னேற்றம் இவற்றைக் கண்டபோது, நமது நாட்டுப் பெண்கள் குறித்த அவரது வேதனை பன்மடங்கானது.

இதனாலேயே அவர், 'பெண்குலம் சிறக்காமல், உலகத்திற்கு நல்ல காலம் இல்லை. ஒரே இறக்கையுடன் பறவை, பறக்க இயலாது' என்றார். இந்தியப் பெண்களின் பிரச்னைக்கு மூலகாரணமே கல்வியின்மைதான் என்பதைக் கண்டறிந்தார். ஆகையால், அவர், 'கல்வி ஒன்றுதான் அனைத்துத் துன்பங்களுக்கும் ஒரே மருந்து' என்று கூறினார்.

ஆகவே, 'முதலில் பெண்களுக்குக் கல்வியைக் கொடுக்க வேண்டும். அதன் மூலம் அவர்கள் தங்கள் பிரச்னைகளைத் தாங்களே தீர்த்துக் கொள்வார்கள்' என்று அவர் கருதினார்.

பெண்கள் சுதந்திரமாகவும், சவால்களை எதிர்கொள்ளும் வகையில் சொந்தக்காலில் நிற்பது எப்போது நடக்கும்?

ஒரு பெண், வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவங்களைப் புரிந்து கொள்வதன் மூலமும் தன் திறமைகளுக்குக் கொடுக்கப்படும் பயிற்சியின் மூலமும் இச்சக்தியைப் பெற முடியும்.

மாறிவரும் காட்சி: சுவாமிஜியின் காலத்தில் வாழ்ந்ததைப் போன்று தற்கால இந்தியப் பெண்கள் நான்கு சுவர்களுக்குள் தங்களை முடக்கிக் கொள்வதில்லை. தங்கள் குடும்ப நலனுக்காக, ஆண்களுக்குச் சமமாக வேலை செய்கிறார்கள். அவர்கள், வெறும் அடிமைகளாக வாழ்ந்த காலம் முடிவடைந்துவிட்டது. தற்போது கணவனும், மனைவியும் தங்கள் குடும்பக் கடமைகளைப் பகிர்ந்து கொண்டு செயல்படுவதைப் பல அடித்தட்டு, நடுத்தர, மேல்தட்டுக் குடும்பங்களிலும் பார்க்கிறோம். பணம் ஈட்டுவதற்காக அவர்கள் வேலை தேடிச் செல்வது தவிர்க்க முடியாததாகி விட்டது.

இன்றைய சமூகச் சூழ்நிலையில் வீட்டிற்குள்ளும், வெளியிலும் தன்னை நிலைப்படுத்தி, ஒருமைப்படுத்துவது என்பது ஒவ்வோர் இந்தியப் பெண்ணிற்கும் சவாலாகவே உள்ளது. ஆனாலும் குடும்பத்திலும், சமுதாயத்திலும் ஒரு பெண் தனது கடமையைச் சிறப்பாகச் செய்துவருகிறாள். இந்நிலையில் அவள் பொருளாதார நிறைவும், சமுதாயத்தில் மதிப்பும், மனஉணர்வுகளில் நடுநிலைமையும் பெற என்ன செய்ய வேண்டுமென்பது நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டிய கேள்வி.

பொருளாதாரத்தில் தன்னிறைவு: மியான்மரின் சுதந்திரத் தலைவரும், நோபல் பரிசு பெற்றவருமான ஆன்வ்சான் சூகி இந்தியாவிற்கு வந்திருந்தபோது, ஆந்திர கிராமங்களில் பல பெண்கள் சுய உதவித் திட்டத்தில் பங்கேற்றிருப்பதைக் கண்டு, 'இன்னும் அதிக அளவிலான பெண்கள் அதிகாரம் பெற்று முன்னணியில் இருப்பதைக் காண விரும்புகிறேன். பொருளாதார வலிமையால் மட்டுமே ஆண், பெண் என்ற பாகுபாட்டினை ஒழித்துவிட முடியாது. ஆனால் அது சரியான பாதையில் செல்ல வழிவகுக்கும்' என்று கூறினார்.

இன்று பெண்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளை, அவர்களைப் பொருளாதாரத்தில் தன்னிறைவடையச் செய்வதால் மட்டுமே தீர்த்து வைக்க முடியாது. எனினும்,

விதியை வெல்வதற்கான வழிகள்

விதியை வெல்லவும் அதன் பிடியில் இருந்து விலகி நிற்கவும் இரு வழிகளே உண்டு.

ஆன்மா விதியால் கட்டுப்படுவதில்லை என அறிதல் ஒரு வழி. இறைவனிடம் முழுமையாகச் சரணாகதி அடைந்து நிற்பது மற்றொரு வழி.
- ஸ்ரீ ரமண மகரிஷி

- தகவல்: டி.பூபதிராவ்

பிரவ்ராஜிகா பவானிப்ராணா மாதாஜி

வாழ்க்கை நிலை மேம்பாடு

வாழ்க்கையில் இக்கட்டான சூழ்நிலையை எதிர்கொள்ளவும் சில ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபடவும் தேவையான தைரியத்தையும், பாதுகாப்பு உணர்வையும் அது பெண்களுக்குக் கொடுக்கும்.

ஒவ்வொரு பெற்றோரும் தங்களின் மகளை, திருமணம் செய்து கொடுப்பதற்கு முன்பு படிக்க வைக்க வேண்டும் அல்லது தொழில்சார்ந்த கல்வியில் பயிற்சியாவது கொடுக்க வேண்டும். தேவைப்படும்போது அதை வைத்துத் தன் வாழ்வை அவள் வளப்படுத்திக் கொள்ளலாம். ஒவ்வொரு பெண் குழந்தையும் பொருளாதாரத் தன்னிறைவு பெற வேண்டும். இதுவே பல சமூகப் பிரச்னைகளைக் களைவதற்கு முதற்படி.

மரியாதையான தோற்றமும் நடத்தையுமே அதிகப் பாதுகாப்பு

ஒரு பெண்ணை மதிக்க, ஒரு தனி மனிதனோ சமுதாயமோ உயரிய பண்பைப் பெற்றிருக்க வேண்டும். இது இல்லாவிடில் ஒருவன் அப்பெண்ணுடைய விருப்பங்களுக்கு மதிப்பளிக்க மாட்டான்.

அதுபோலவே, சமூகத்தில் மரியாதையைப் பெற, வாழ்க்கையை எவ்வாறு அமைத்துக் கொள்ள வேண்டும், தன் நடத்தையை எவ்வாறு சீரமைத்துக் கொள்ள வேண்டும், எவ்வளவு மதிப்புள்ளவராக இருக்க வேண்டும் என்பன வற்றைப் பெண்ணானவள் கற்றுக் கொள்ள வேண்டும்.

இதையே அன்னை ஸ்ரீசாரதாதேவி, 'ஒரு பெண்ணிற்குத் தன்னடக்கமே பொன் நகை' என்று கூறுவதுண்டு. உண்மையாக, அழகு என்பது தூய்மையில்தான் உள்ளது. 'நினைவிலும், வார்த்தையிலும், செயலிலும் தூய்மை' என்பதை ஒவ்வொரு பெண்ணும் உணர வேண்டும்.

ஒரு பெண், கல்வியின் மூலம் அறிவைப் பெற்று, பொருளாதார ரீதியாக சுதந்திரமாக இருக்க வேண்டும். இவை இரண்டும் அவளுக்கு ஒரு சக்தியைக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால், வாழ்வின் குறிக்கோள்களை அவள் போற்றி நடந்து, மற்றவர்களிடமும் அதைப் பதியச் செய்ய வேண்டும். அதுதான், அவளுக்கு உண்மையான முழுச் சுதந்திரத்தையும் கொடுக்கும். வாழ்வின் நோக்கங் களை வீட்டில் மற்றவர்களும் பின்பற்றச் செய்ய வேண்டிய சமூகக் கடமை ஒவ்வொரு பெண்ணிற்கும் உள்ளது.

தன் தூய நடத்தையின் மூலம் ஒரு தாயாகத் தன் சொந்த இழப்புகளையும் பொருட்படுத்தாமல், உயரிய நோக்கங் களை நோக்கித் தம் கணவரையும், குழந்தைகளையும் ஊக்குவித்த பல வீராங்கனைகள் நமது வரலாற்றில் உதாரணமாக உள்ளனர். ராஜபுத்திரப் பெண்கள் போருக்குச் செல்லும் வீரர்களை, "போரில் வெற்றி பெற்று வீடு திரும்புங்கள், இல்லாவிட்டால் தோல்வியை ஒத்துக் கொண்டு வீடு திரும்புவதைவிடச் செத்து மடியுங்கள்" என்று வாழ்த்தி அனுப்புவார்களாம்.

ஒரு பெண்ணின் பங்கு போட்டியிடுவதல்ல, நிறைவை உண்டாக்குவதே!

பெண்கள் பொதுவாகத் தங்களைப் பலவீனமானவர்களாக நினைக்கிறார்கள். ஆனால், பல்வேறு துறைகளிலும் மிக உயர்ந்த நிலையைப் பெண்கள் அடைய முடியும் என்பதைத் தற்கால மற்றும் கடந்தகால வரலாறு நிரூபித்துள்ளது.

பெண் என்பவள், பிறருக்கு உதாரணமாகத் திகழ வேண்டும். அதற்குத் தாழ்வு மனப்பான்மை, மற்றவரைச் சார்ந்து வாழ்தல், உணர்ச்சிகளைக் கொட்டுதல் ஆகியவற்றை விடுத்து, வீரம், சுதந்திரம், உணர்ச்சிகளை வெல்லுதல் போன்ற குணங்களை மேம்படுத்த வேண்டும்.

ஆனால் தற்காலத்தில் நடப்பது என்ன? ஆண்களுக்குச் சமமாக மாற வேண்டும் என்பதற்காக உடையிலும், நடத்தையிலும் மட்டுமே ஆண்களைப் பின்பற்றுகிறார்கள். இதன் மூலம், பெண்களாகிய தாங்களும் அவர்களுக்குச் சரிநிகர் சமானமாகிவிட்டோம் என்று எண்ணுகிறார்கள். அதோடு தங்களுக் குள்ளே மனநிறைவடைவதுடன்,

எப்போதும் அச்சத்தில் இருப்பதைவிட ஆபத்தை ஒருமுறை சந்திப்பதே மேல். - டெஸ்கார்ட்ஸ்

AN ISO 9001 : 2015 CERTIFIED INSTITUTION

தபால் மூலம்
சிறுவர் சித்திரப் பயிற்சி

Successful 32nd Year

CHILDREN'S ART COURSE

அன்பிற்குரிய பெற்றோர்களே!

உங்கள் குழந்தைகளின் எதிர்காலம் பற்றி
உங்கள் கனவு எதுவானாலும் இருக்கட்டும்.
ஆனால் ஓவியம் கற்றுக்கொடுங்கள்.
அது அவர்களை நேர்த்தியானவர்களாக மாற்றும்.
இது ஒரு தவம். இது ஒரு தியானம்.
சிந்தனையும், செயலும் சீர்படும்.
நேரம் பயனுற விளங்கும்.

www.ajanthaschoolofarts.com
இணைய தளத்திலும் விவரபுத்தகத்தைப் பார்க்கலாம், படிக்கலாம், பதிவிறக்கம் (Download) செய்யலாம்

விவரப்புத்தகம் இலவசம்!

உங்கள் முகவரியை போனில் சொல்லுங்கள். அல்லது SMS அனுப்புங்கள்

இலவச விவரப் புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும்

AJANTHA SCHOOL OF ARTS

(GOVT. REGD NO: 1075/89/MS/RD)
No.6, Muthu Nagar, Poonamallee, Chennai - 56.
Ph : 044 - 26490363, Cell : 93810 50477, 99403 90708
email : ajanthaschoolofarts@yahoo.com

இதுதான் தங்களது சுதந்திரம் என்றும் மகிழ்ச்சியும் அடைகிறார்கள்.

இத்தகைய தேவையற்ற போட்டியும், தவறான பின்பற்றுதலும் ஒருவரை வாழ்க்கையின் அழிவிற்குத்தான் கொண்டுவிடும். இவை போன்றவை, சமத்துவத்தை உருவாக்காது. இனபேதம் என்பதை உடல்ரீதியாக அகற்றிவிட முடியாது. ஆன்மிக நிலையில் (Spiritual) மட்டுந்தான் முழுமையாக அகற்ற முடியும். ஆன்மிக நிலையில் பெண், ஆணுக்குச் சமமாக இருக்கலாம். அவர்களை விஞ்சியும் இருக்கலாம். அனைவரிடமிருந்தும் மரியாதையையும் பெறலாம்.

பொறுமை, மன்னித்தல், இரக்கங் கொள்ளுதல், சேவை செய்தல் போன்ற வாழ்க்கையின் அடிப்படைக் குணங்களை வளர்த்துக் கொள்வதில்தான், ஒரு பெண்ணின் உண்மையான அதிகாரம் அடங்கியுள்ளது. ஆன்மிக வளர்ச்சியின் மூலமே, ஒருவர் இந்தக் குணங்களை யெல்லாம் பெற முடியும்.

ஆன்மிகத் தன்மைதான் உண்மையான சக்தி

சுவாமி விவேகானந்தர், சீதாதேவி யைப் போன்ற சிறந்த முன்மாதிரியை இந்தியப் பெண்கள் பின்பற்ற வேண்டும் என்று விரும்பினார். சீதாதேவி, சாவித்திரி போன்ற உதாரணப் பெண்மணிகளை எப்போதும் இந்தியப் பெண்களின் கண்ணெதிரே வைக்க வேண்டும். அதனால், அந்த வழியிலேயே தம்மை மாற்றிக்கொள்ள மனம் பக்குவமடையும்.

இந்தியப் பெண்கள், பழங்காலக் குறிக்கோள் களோடு புதுத் தோற்றப்பொலிவு பெற்று விளங்க வேண்டும் என்பது சுவாமிஜியின் கனவு. புனிதமும், மேன்மையும், தாய்மைக் குணமும் பொருந்திய பெண்கள் நிறைந்த ஆன்மிக சமுதாயத்தின் மூலமே அறிவும், குறைவற்ற நிறைவும் திக்கெட்டும் பரவும். புனிதத் தாயான சாரதாதேவி இக்கால மனித வரலாற்றி லேயே காணமுடியாத தனி உதாரணமாக விளங்குகிறார்.

சாரதாதேவியின் தூய்மையிலும், தன்னலமற்ற நிலையிலும், பொறுமையிலும், மன்னிக்கும் மனப் பாங்கிலும், சிறந்த அறிவாற்றலிலும், அன்பு, சேவை ஆகியவற்றிலும் மகத்தான சக்தி அடங்கியுள்ளது. படிப்பற்ற, உலகறிவு பெறாத ஒரு கிராமப்பெண், இத்தகைய உயர்ந்த நிலைக்கு வந்தார். அவருடைய ஒவ்வொரு வார்த்தையும், சுவாமி விவேகானந்தர் போன்ற அறிவுத்திறன் பெற்ற ஆன்மிகக் கட்டுறுதி வாய்ந்தவர்கட்கு, ஒரு கட்டளையாக இருந்தது.

சகோதரி நிவேதிதா போன் றோருக்கு அவர் அதிசயத்திற்கும் அதிசயமாகத் தோன்றினார். மேலும், பலருக்குப் புரிந்து கொள்ள முடியாத புதிராகவும் விளங்கினார்.

இத்தகைய மகோன்னதம் வாய்ந்த நமது அன்னை ஸ்ரீசாரதாதேவியின் வாழ்க்கையானது, மற்ற எல்லாப் பெண்களிடமும் முழுநிறைவோடு தம் வாழ்க்கையைத் தாமே அமைத் துக் கொள்ளும் நம்பிக்கையை வளர்க்கும் வழிகாட்டியாக உள்ளது.

❖

ஸ்ரீ பேசும் வார்த்தைகளின் மீது உனக்குள் கட்டுப்பாடு இருக்க வேண்டும். - அரவிந்தர்

என் பாக்கியம்

ஸ்ரீராமகிருஷ்ண இயக்கத்தின் நான்காவது தலைவரான சுவாமி விஞ்ஞானானந்தருக்குச் சேவை செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

அவரது வாழ்க்கை ஒழுங்குமுறை நிறைந்தது. அவர் மிகக் கடினமாக உழைப்ப வராகவும் இருந்தார். தாம் செய்த ஒவ்வொரு செயலையும் அவர் நிறைவாகச் செய்தார்.

கடுமையாக வேலை செய்தாலும் அதற்கிடையில் ஆழ்ந்த தியான மனநிலையில் அவர் மணிக்கணக்காக இருப்பார். சிறந்த நகைச்சுவை உணர்வும் அவரிடம் இருந்தது.

எங்களுக்கு அவர் தீக்ஷை மந்திரத்தை அளித்து, இறைநாமத்தை ஓதியபோது அவர் தெய்விகப் பேரின்பத்தில் திளைத்திருந்தவராகக் காணப்பட்டார். அந்தச் சூழ்நிலை வர்ணனைக்கு அப்பாற்பட்டதாக இருந்தது.



சுவாமி விஞ்ஞானானந்தர்

- சுவாமி ஆத்மஸ்தானந்தர் (ராமகிருஷ்ண இயக்கத்தின் 15-வது தலைவர்)

(சுவாமி விஞ்ஞானானந்தரின் ஜயந்தி தினம் - 3.11.2017 - வெள்ளிக்கிழமை)

4-ஆம் ஆண்டு சிறுகதைப் போட்டி

மாற்றம்

மன உறுதியுடன் செயல்படு. உன்னை எதுவும் அசைக்க முடியாது. - ரிக்வேதம்

சென்னை சென்ட்ரலில் ராஜதானி எக்ஸ்பிரசுக்காகக் காத்திருக்கையில், அந்த முதியவர் என்னிடம் வந்து கேட்டார், ''தம்பி, பி-ஒன் கோச் எங்கு நிற்கும்?''

''பி-ட்டூவுக்கு முன்னாலதான்'' அவரின் முகம் இறுகியதும் சிரித்தேன். ஆதுரத்துடன் அவர் தோளைத் தொட்டு, ''நானும் பி-ஒன் தான் டெல்லி போறேன். நீங்க எதுவரை?''

கோபமோ? - திரும்பிப் பார்க்காமல், தளர் நடையுடன் அங்கிருந்த இருக்கையில் ஒன்றினார். 'இவரின் வயதைக் கருதியாவது நான் அப்படிப் பேசியிருக்கக் கூடாது' எனத் தோன்றியது.

சமனப்படுத்த வாய்ப்பை உருவாக்கினேன். ''அய்யா, வண்டி வந்திருச்சு.... உடன் யார் வந்திருக் காங்க?'' சுற்றிப் பார்த்து, ''லக்கேஜ்?'' என்றேன்.

விரக்தி புன்னகையுடன், ''இந்தக் கட்டை மட்டும்தான்'' என்றார்.

எனக்கு நேரெதிர் இருக்கையைத் தேடிப் பிடித்து, ஜன்னலைப் பார்த்து ஒடுங்கினார். மழை நேரம். நான் இரண்டு சக்கர வாகனம் ஓட்டுகையில் மூக்குக் கண்ணாடிக்கு வைப்பர் கண்டுபிடிக்கத் தோன்றும். அந்த க்ரேஸி மைண்ட், மிக்ஸிக்கும் ரயிலின் 'தடக், தடக்' சத்தத்திற்கும் சைலன்ஸர் தேவையென நினைத்தாலும், மெட்ரோ ரயிலின் சலனமில்லாப் பயணத்தைவிட இந்த சத்தத்திலும், தாலாட்டிலும் தனி சுகம் இருப்பதை உணரமுடிந்தது.

உறக்கமும் தெளிவும் இல்லாத நிழல் மயக்கத்திலிருந்த நான், ரயில் பாலத்தைக் கடக்கும் தடதட சத்தத்திலிருந்து விஜய வாடாவை நெருங்கியதை உணர்ந்தேன்.

முதியவர் வண்டியின் அசைவால் ஆடுகிறாரா அல்லது வயோதிகத்தின் தள்ளாட்டமா எனத் தெளிவாய்ப் புரிபட வில்லை. பாலத்தில் நிறங்களை மாறி, மாறி உமிழ்ந்து கொண்டிருந்த சரவிளக்கின் வர்ணஜாலம் என்னை வசீகரித்தது. 'ஹங்... ஹக்' அவரின் செருமல் அசாதாரணமாய்ப்பட நெருங்கி ''அய்யா என்னாச்சு?'' என்றேன்.

''ஹூம், என் பிராயத்துல பார்த்த, பிரவகிச்சு ஓடுன கிருஷ்ணா நதி இப்ப என்னைப் போலவே நைஞ்சு போய் கோவணம் மாதிரி ஓடுறது. இந்த லக்ஷணத்துல தமிழ்நாட்டு அரசாங்கம் சென்னையின் தாகத் தைத் தீர்க்க கிருஷ்ணா தண்ணிய கேக்குது. இவன் என்னடான்னா நீர்வரத்து குறைஞ்சதைச் சமன்படுத்த நியான் விளக்கை எரியவிட்டு பம்மாத்து பண்றான்'' சலித்துக் கொண்டார்.

வழக்கமான முதுமையின் அனத்தல். அவரை அதன்பின் என் நினைவுத் தொடரினின்று கத்தரித்துவிட்டேன்.

மறுதினம் குவாலியர் கடந்தபின், யமுனை ஆற்றைக் கடக்கையில் அவரின் பனித்தக் கண் களைக் கவனித்தேன். இந்திய வரைபடத்தில் ஓடும் நதிகளைப்போல் முதுமை அவரின் முகத்தில் ஆழமாய் காலதேவனின் எழுத்தாணியால் கிறுக்கி வைத்திருந்தது, பரிதாபப்பட வைப்பினும், சக பயணி எனும் வரையறையை மீறி அவரது சுயத்தைச் சீண்ட விரும்பாது அவரை அதன்பின் என் பார்வையினின்று வலிய தவிர்த்தேன்.

டெல்லியின் சலசலப்பில் இவரை முற்றும் தொலைத்த நான், அதற்கடுத்த வாரம் ஹரித்வார் கங்கைக் கரையில் அவரை மீண்டும் பார்த்ததும், ஓடி அணைத்து, ரயில் சிநேகிதத்தைப் புதுப்பித்ததன் தலையாய காரணம் அவரின் கண்ணீர் நிறைந்த கண்கள்.

''அய்யா துவக்கத்தில் உங்களைப் பார்த்தப்ப கேஷத்ராடனம்னு தோணுச்சு. இப்ப ஏதோ அசாதாரணமா தோணறது. வாங்க ரோப் கார்ல போய் மானஸா தேவியைத் தரிசிச்சிட்டு அப்படியே சண்டிதேவியோட மலைக்கும்'' - இடைமறித்தார். ''இல்லை தம்பி, நான் நதியைத் தரிசிக்கத்தான் வந்தேன். ஒரு 25 கி.மீ. தானே, ரிஷிகேசம் போய், போயிடறேன்.''

''எங்க சென்னைக்கா?'' என்றதும் சிரித்தார்.

''அய்யா ஏதோ பிரச்னைன்னு தோணறது, பேசலாமே'' எனது நைச்சிய குரல் அவர் இதயத்தைத் தொட்டிருக்க வேண்டும். ஆனால் கங்கைப் பிரவாகத் தில் காலை அமிழ்த்தியபடி, அவர் சொன்ன பதில் ஆச்சரியப்படுத்தியது - ''தண்ணி பிரச்னை''தான் என்றார்.

''ஆயிரம் பிறை கண்டவன் நான். எங்க ஊர் தெப்பக்குளத்தில் வருஷா வருஷம் தெப்போத்சவம் மகா பிரசித்தம். வைகையிலேயே இப்ப டிராக்டர்ல தண்ணி ஓட்டித்தான் கள்ளழகரே ஆத்து மணல்ல எறங்கறார். டிரம்ல தண்ணி வச்சு தெளிச்சு விடறாங்க. தண்ணியே

2-வது பரிசு
ரூ. 8,000
பெறுபவர் :
சனுஷினியா

வராத பாலாறு, முல்லைப் பெரியாறு, காவிரி எல்லாம் கையேந்தி தவம் கிடக்குதுங்க. நீர்வரத்து கால்வாயைப் பட்டா போட்டு தந்துட்டு அரசாங்கம் நிலத்தடி நீர் மட்டம் உயர்த்தறோம்னு ஒன்றரை அடி குழி வெட்டி மழை நீர் சேமிப்புன்னு காலட்சேபம் செய்யுது.''

''என்னப்பா புரியலியா? உங்க அரசாங்கம் தானே நுங்கம்பாக்கம், முகப்பேர் ஏரிகளை எல்லாம் ஸ்வாஹா செஞ்சிருக்கு. மயிலாப்பூர் ஏரிதானே இப்பத்தைய தியாகராய நகர், பெங்களூரோட கெம்பேகௌடா பஸ் ஸ்டாண்ட் கூட ஏரியை ஆக்ரமிச்சு கட்டினதுதானே! இதை யெல்லாம் கூசாம செஞ்சுட்டு குடிதண்ணி பிரச்னைன்னு கூப்பாடு போட்டு என்ன பயன்? முட்டாள் பசங்க அப்புறம் மழை வேண்டி யாகம் நடத்துவானுங்க.

''இப்ப சந்தியா வேளையில இங்க 'கங்கா

ஆரத்தி' நடக்கும். இயற்கைக்கான வழிபாடு. பொங்கலன்னைக்கு வருஷத்துக்கு ஒரு தரம் நாம் சூரியனுக்கு நன்றி சொல்வோம்ல அது போல. ஏன் தெரியுமா? அன்ன ஆகாரம் இல்லாம ஒரு மாசம் உயிர் வாழலாம். ஆனால் தண்ணி இல்லாம ஒரு வாரம் கூட உயிர் தாங்காது.''

''இது என் பிரச்னை உன் பிரச்னை இல்லைப்பா... சர்வ ஜனப் பிரச்னை. அபரிமிதமான இந்த இயற்கையோட பிரவாகம் இப்ப வணிகப் பொருளாயிடுச்சு. பிளாஸ்டிக் குப்பியில் அடைச்சு ஒரு லிட்டர் இருபது ரூபாய்ங்கறது எவ்வளவு பெரிய அயோக்கியத் தனம். அரசும் தண்ணீர்க் கொள்ளைக்காரங்களை ஆதரிக்குது.

''மனிதனால் உருவாக்கப்படும் வறட்சியும், அளவுக்கதிகமான நீரை ஒருசிலர் பயன்படுத்த றதும்தான் தண்ணீர்ப் பஞ்சத்துக்கான காரணம்.''

''அய்யா, நீங்க வாட்டர் மேனேஜ்மெண்ட் - நீர் மேலாண்மைப் பற்றி பேசறீங்களா?''

''இந்த டிரடிஷனல் கிளாஸ் ரூம் டீச்சிங் எல்லாம் கவைக்கு உதவாது தம்பி. இயற்கையைப் பாதுகாக்க நீ எதுவும் செய்ய வேண்டாம். நீ எதுவும் செய்யாமல் இருந்தாலே இயற்கை பிழைச்சுக்கும். நதிக்கரையில் நாகரிகம் செழிச்சது நிஜம். ஆனால் உங்க நாகரிகம் நதியை அழிச்சுடறதே. கூவம் நதி நல்ல உதாரணம். ரிஷிகேசத்துல ஸ்படிகமா வந்து, ஹரித்வார்ல பிரவகிக்கிற இந்த கங்கை வாராணசியில் சுத்தப்படுத்த றத அளவுக்கு அசுத்தப்படுத்தப்படறது, பொல்யூஷன் எவ்ளோ ஜரூரா நடக்கறதுங்கறதுக்கான உதாரணம்.

''சிங்கம், புலி காட்டுல இயல்பா இருக்கறச்சே ஹெல்த்தியா இருக்கும். கூண்டுல அடைச்சு வெட்டியா வெட்னரி டாக்டரை வச்சு பார்க்கற மாதிரிதான் இந்த நீர் மேலாண்மைத் திட்டங்கள்.

''இயற்கை மனிதனுக்குத் தேவையான நீராதாரத்தை எப்பவுமே தர மறுத்த தில்லை. இறைத்தால் ஊறும். அதுதான் இயற்கை. நகர்ப்புற நாகரிகம்னு ஜனத் தொகையை ஒரு இடத்துல குவிச்சிட்டு தண்ணீர்ப் பஞ்சம்னு அலர்றதுல ஒரு அர்த்தமும் இல்லை. கரும்பைப் பிழிஞ்சா சாறு வரும். சக்கையாப் பிழிஞ்சு எடுத்துட்டு சாறு இல்லைன்னு அலறுவதில் எந்த அர்த்தமும் இல்லை.

''மரம் நடுவோம், மழை பெறுவோம்ங் கறதுகூட சுத்த ஹம்பக்னு சொல்வேன். ஒரு சம்பவம் சொல்றேன், கேள். நீலாம்பூர் தேக்கு மஹா பிரசித்தம். மைசூர் அரண்மனை முழுக்க அந்த தேக்கால்தான் கட்டப்பட்டிருக்கு. அப்ப மஹாராஜா கொடுத்தான். இப்ப கேரள வனத்துறை மந்திரி வெட்டி வியாபாரம் செய்தான். மரத்தை வெட்டுனா மழை வராதுன்னு சட்ட சபையில எதிர்கட்சிங்க வாதிட் டாங்க. அதற்கு அந்த மந்திரி, 'அரபிக்கடல்ல மழை பெய்யுதே. அங்க யாரு மரம் நட்டிருக்கான்னு?' கேட்டான். நீங்க நடவும் வேணாம், வெட்டவும் வேணாம்னுதான் சொல்றேன்.''

''கன்சர்வேடிவ் தத்துவம். அய்யா ஒத்துக்கறேன். ஆனால் உங்களோட பிரச்னை என்னன்னுதான் புரியலை''என்றதும், கையமர்த்தினார் பெரியவர்.

''தம்பி, இது சர்வஜனப் பிரச்னை. ஆனால் தலை வலியும் திருகுவலியும் தனக்கு வந்தால்தான் புரியும். கன்ஃபூசியஸ் சொன்னது நினைவுக்கு வர்றது. 'நீங்கள் சொன்னதை மறந்துவிடுவேன். காட்டுங்கள், நான் நினைவுபடுத்திக் கொள்ள ஏதுவாக இருக்கும். என்னை அதனுடன்

தனக்குத் தெரியும் என்று சொல்லும் மனிதனிடத்தில் கவனமாக இருங்கள். - ஜே.கிருஷ்ணமூர்த்தி

ஸ்ரீராமகிருஷ்ண குடில்,

திருப்பராய்த்துறை-639115, திருச்சி மாவட்டம்.

அன்புடையீர்! வணக்கம்.

திருப்பராய்த்துறையில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண குடில் 1949ம் ஆண்டு துவங்கி கடந்த 65 ஆண்டுகளுக்கு மேல் ஆதரவற்ற சிறார்களின் கல்வி மேம்பாட்டிற்காக அரிய சேவை செய்து வருகிறது. இங்கு மாணவர்கள் தாயோ, தந்தையோ அல்லது யாராவது ஒருவர் இல்லாத குழந்தைகள் ஆண்டு முழவதும் சேர்த்துக் கொள்ளபடுகிறார்கள். இந்த ஆஸ்ரமத்தில் ஓர் துவக்கப்பள்ளியும், உயர்நிலைப்பள்ளியும் உள்ளன. இங்கு சேர்க்கப்படும் மாணவர்கள் அனைவருக்கும் உணவு, உடை, மருத்துவம் மற்றும் இருப்பிடம் அனைத்தும் இலவசமாக வழங்கப்படுகிறது. இங்கு கல்வி பயிலும் சிறார்களுக்கு காந்திய வழி கல்வி மூலம் அவரவர் பணிகளை அவர்களே செய்து கொள்ள பயிற்சி அளிக்கப்படுகிறது.

தாய் தந்தையற்ற பிள்ளைகளை தெய்வாம்சமாகக் கருதி 1ம்வகுப்பு முதல் 8-ஆம் வகுப்பு வரை சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். குழந்தையாக சேரும் மாணவர்கள் திறன்மிக்க குடிமக்களாக வெளியேறுகின்றனர். இவை அனைத்தும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

நிறுவனர் தவத்திரு.பிரம்மச்சாரி இராமசாமி அடிகளார் மேற்கண்ட குடிலில் 1975ம் ஆண்டு முதல் தென்னை வருமானத்தின் மூலம் தன்னிறைவுடன் குழந்தைகளுக்கு கல்வி, தொழிற்கல்வி அளித்து வாழ்வளித்து வந்தார்கள். சுவாமிகள் 4.3.1999ம் ஆண்டு பகவான் பரமஹம்ஸர் பாதத்தில் முக்தி அடைந்துவிட்டார்கள். அவர்களுக்கு பிறகு ஆஸ்ரமவாசிகள் குடில் நிர்வாகத்தை நடத்தி வருகிறார்கள். இங்கு சுமார் 350 மாணவர்களுக்கு மேல் கல்வி பயின்று வருகிறார்கள்.

1975ம் ஆண்டு முதல் 2015ம் ஆண்டு வரை 41 ஆண்டுகளாய் நன்கொடை பெறாமல் குடில் சேவை செய்து வருகிறது. தற்பொழுதுள்ள கால சுழல்களின் காரணமாக விலைவாசி கடுமையாக உள்ளதாலும் இப்பொழுதுள்ள நிதிநெருக்கடியால் குடில் தர்மகாரியம் நடைபெற மிக சிரமமாக உள்ளது. தற்பொழுதுள்ள நிதிநெருக்கடியால் ஸ்ரீ ராமகிருஷ்ண குடிலின் சேவை தொடர நன்கொடைகள் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

1 நாள் செலவு	ரூ.15,000
1 மாத செலவு	ரூ.4,50,000
1 வருட செலவு	ரூ.54,00,000
நிர்வாக பராமரிப்புச் செலவு (வருடத்திற்கு)	ரூ.1,50,000
கட்டட மராமத்து செலவு (மாதத்திற்கு)	ரூ.40,000
மருத்துவ செலவு 350 மாணவர்களுக்கு (வருடத்திற்கு)	ரூ.1,75,000
விவசாயத்திற்கு மாதத்திற்கு செலவு	ரூ.50,000
விவசாயத்திற்காக பவர்டில்லர், டிராக்டர் தேவையாக உள்ளது.	
புதிய கட்டடம் கட்டுவதற்கு (மருந்தகம் மேல்கூரை சரிசெய்ய, உயர்நிலைப்பள்ளி மேல் மாடி செலவு)	ரூ.20,00,000

(நன்கொடையை தங்களின் மேலான பங்களிப்பை அன்பளிப்பாக அளித்தால் எல்லாம்வல்ல பகவான் பரமஹம்ஸரின் பரிபூர்ண அருளும் ஆசியும் கிட்டும். தாங்கள் கொடுக்கும் எவ்வித நன்கொடைகளுக்கும் 80ஜி வருமான வரிச்சலுகை உண்டு)

திருவருள் துணை,
அன்புள்ள, குடில் நிர்வாகம்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
ஸ்ரீராமகிருஷ்ண குடில், திருப்பராய்த்துறை, திருச்சி மாவட்டம் - 639115. தமிழ்நாடு. Email ID:brkkudil2015@gmail.com
தொலைபேசி எண். 0431-2614548, 2614235 அலைபேசி: 9443577235, 9442352770

செக் மற்றும் டி.டி எடுக்க வேண்டியது: Sri Ramakrishna Kudil, Thirupparaithurai

கனரா வங்கி சேமிப்பு கணக்கு எண். 8434101006556; IFSC Code No.CNRB0008434; MICR No.620015023

ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா - சேமிப்பு கணக்கு எண். 37224747273; IFSC :SBIN0018664; MICR : 620002055

தொடர்பு படுத்துங்கள், நான் புரிந்து கொள்வேன்' என்றார். இந்தத் தகவல்களை எல்லாம் கோர்க்கிற சங்கிலி உன் கேள்விக்கான விடை எல்லாம் நாளை உச்சிப்பொழுதில் ரிஷிகேசத்தில் லக்ஷ்மண் ஜூலா படித்துறையில் கிடைக்கும் - வா'' படியேறி தள்ளாட்டத் துடன் ஜனத்திரளில் கரைந்து போனார்.

லக்ஷ்மண் ஜூலாவின் தொங்கு பாலத் துவக்கத்திலி ருந்தே தேடத் துவங்கினேன். அவரைப் படித்துறையில் கண்டதும் சுவாரசியமான நாவலின் இறுதிப் பக்கத்தைப் புரட்டிய உணர்வு வந்தது.

'தம்பி, நிச்சயம் உங்களை எதிர்பார்த்தேன். எந்தப் பிரதிபலனும் நோக்காத, வாத்ஸல்யம் மட்டுமேயான நம் உறவு உங்களை இங்கே அழைத்துவரும்னு எதிர்பார்த்தேன். அபரிதமா ஓடறதே இந்த கங்கை. இது உனக்கானதோ எனக்கானதோன்னு தோணித்துன்னா அது தப்பு. அது எல்லோருக்கும் என்ற பரோபகார சிந்தனை வந்தாலே போதும் விடிஞ்சுரும்.

''ஒண்ணு செய். இந்த கங்கைக் கரையில பிரமாணத்தை ஏத்துக்கோ. நீ தினமும் யூஸ்பண்ற வெஸ்டர்ன் கம்மோட்ல தினசரி இரண்டரை லிட்டர் தண்ணீர் ஒவ்வொரு நபருக்கும் வீணாறது. குறைந்த பட்சம் அந்த ப்ளஷ் டாங்க்ல ஒரு லிட்டர் வாட்டர் பாட்டிலை தண்ணீர் நிரப்பி வை. ஒவ்வொரு பிளஷ் அவுட்டிலும் வெளியேறும் இரண்டரை லிட்டர் தண்ணீரில் உன்னாலும் ஒரு லிட்டர் தண்ணீரை மிச்சப் படுத்த முடியும். பாத்டப், நீச்சல் குளம், இதையெல்லாம் தீர்மானிக்கிற பொறுப்பை உனக்கே விட்டுடறேன்.

''மூன்றாம் உலகப்போர் தண்ணீருக்காக வரும்னு சொன்னப்ப நான் நம்பலை. அண்டை மாநிலங்கள் வஞ்சித்த சமயம்கூட நம்பத் தோணலை. அதிர்ந்து பேசாத, அன்பான என் மகன்கள் தனிக்குடித்தனம் போனதுமே இப்பத்தைய தண்ணிப் பஞ்சத்துல ஒரு வாளித் தண்ணீருக்காக அடித்துக்கொள்ள, என் வளர்ப்பு சரியில்லையா அல்லது சமுதாய வார்ப்பு சரியில்லையாங் . . . '' குரல் கம்மியது.

அந்த முதுமையின் ஆற்றாமை புரிந்தது. எதுவும் கூறத்தோன்றாது அவரின் முதுகை வருடித் தந்தவன், ராம் ஜூலாவை நோக்கி நடக்கத் துவங்கினேன். மாலைக் கருக்கலில் எதிர்க்கரை ராம் ஜூலாவிலிருந்து அவரைப் பார்த்தேன். லக்ஷ்மண் ஜூலா கரையில் அமர்ந்திருந்த அந்த முதியவர் தெளிவாய்த் தெரிந்தார். நதியையும், மலையையும், மனித சஞ்சாரத்தையும் மறந்து அவரையே பார்வையால் விழுங்கத் துவங்கி னேன். அவர் விதைத்த விதை முளைத்து மனதில் பிரம்மாண்ட விருட்சமாய் கிளை பரப்பத் துவங்கியது.

எதிர்க்கரையில் மாலை படர்ந்த பனியில், அங்குலம் அங்குலமாய் விழுங்கப்பட, மசமசப்பாய் பார்வையில் தென்பட்ட அந்த முதியவர் பின்னர் பனிப் போர்வைக்குள் புதைந்து போனார். ❖

நூல் அறிமுகம்

❑ ஆன்மிக, சமய, இலக்கியக் கட்டுரைகள்

ஆழ்ந்த கருத்துகள் அடங்கிய 16 கட்டுரைகள். பக்கம் 200 - விலை ரூ.100/-.

ஆசிரியர்: எஸ். சாய்ராமன்

பூங்கொடி பதிப்பகம், 14, சித்திரைக்குளம் மேற்கு வீதி, மயிலாப்பூர், சென்னை - 4, ✆ :2464 3074.

❑ மாணிக்கவாசகரின் திருவாசகமும் ரமண மகரிஷியின் சந்நிதிமுறையும் ஓர் ஒப்பாய்வு

திருவாசகத்தை ஆராயும் அன்பர்களுக்கு உதவும் நூல். ஞானம், பக்தி பற்றி எழும் கேள்விகளுக்கு விடையளிக்கும் நூல். பக்கம் 260 - விலை ரூ.150/-.

ஆசிரியர்: ராமலிங்கம் ஸ்ரீனிவாசன்

திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்., 522, டி.டி.கே.சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை-18. ✆: 98846 84666.

❑ கருணை மிகுந்தவள் ஸ்ரீ காளி மாதா

வழிபாடு, மந்திர, யந்திர விளக்கங்களுடனும் பல்வேறு காளி தலங்களையும் பற்றி இந்நூலில் கூறப்பட்டுள்ளது. பக்கம் 256 விலை ரூ.225/-.

ஆசிரியர்: வேணுசீனிவாசன்

அழகு பதிப்பகம், 15/21, டீச்சர்ஸ் கில்டு காலனி, 2-வது தெரு, ராஜாஜி நகர் விரிவு, வில்லிவாக்கம், சென்னை - 600 049, ✆ : 2650 2086.

❑ ஸ்ரீ இராமானுஜர் (நாடகம்)

ஸ்ரீராமானுஜரின் பெருவாழ்வை 258 காட்சிக ளில் நாடகமாகக் கூறும் நூல். பக்கம் 482 விலை ரூ.360/-.

ஆசிரியர்: என். ரிஷிகேசன்

நவமணி பதிப்பகம், 2-5-24/2, புதுக்கோட்டை ரோடு, ஜீவா நகர், திருப்பத்தூர் - 630 211, ✆: 97516 66202.

❑ ஆறுமுகனின் அறுபடை வீடுகள்

அறுபடை வீடுகளின் கோயிலமைப்பு, சிறப்பு, முருகப்பெருமானின் மகிமை ஆகியவற்றைக் கூறும் நூல். பக்கம் 112 - விலை ரூ.80/-. ஆசிரியர்: மா. கார்த்திகேயன்

வாசகன் பதிப்பகம், 167, ஏ.வி.ஆர். காம்ப்ளக்ஸ், செரி ரோடு, சேலம் - 636 007, ✆ : 98429 74697.

❑ மெய்கண்ட தேவர் அருளிய சிவஞானபோதம் (வாரியார் உரையுடன்)

பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண் மையை உணர்த்தும் நூல். பக்கம் 256 - விலை ரூ.110/-.

ஆசிரியர்: திருமுருக கிருபானந்தவாரியார்

குகஸ்ரீ வாரியார் பதிப்பகம், 132/107, சிங்கண்ண தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002, ✆ :044- 2845 7666. ❖

தடுமாறி வீழ்வதில் தவறில்லை. எழுந்திருக்க எண்ணமில்லாமல் இருப்பதுதான் தவறு. - ஓர் அறிஞர்

செயல்புரியாத மனிதனுக்கு தெய்வம் ஒருபோதும் உதவி செய்யாது. - சுவாமி விவேகானந்தர்

ஜபமும் தியானமும் 7

பரிசுத்தமும் நிம்மதியும் அடக்கமும் கொண்ட மனம்தான் இறைவனை பாவிக்க முடியும். 'தூய்மையும் அமைதியும் நிரம்பிய மனமும் இதயமும் படைத்தவர்கள் உண்மையிலேயே பாக்கியவான்கள். அவர்களுக்கு ஈசுவர தரிசனம் நிச்சயமாகக் கிட்டும்.'

கடவுளுக்கு எவரிடமும் பாரபட்சம் இல்லை. பொருள்களின் வழவழப்பான மேற்பகுதியில் கதிரவனது ஒளி பிரதிபலிப்பதுபோல், எவருடைய மனம் மாசு அற்று, பக்தி நிறைந்து, சாந்தம் குடிகொண்டு உள்ளதோ அந்த உள்ளத்தில் ஈசுவரன் பிரதிபலிக்கிறான்.

உலகம், பணம், குடும்பம் இவற்றின் மீது கொள்ளும் பற்றுக் காரணமாக எழுகின்ற கெட்ட, தீய ஆசைகள் யாவற்றையும் சாதகன் உதறித் தள்ளிவிடும்பொழுது அவனுடைய மனம் திடப்படுகிறது. நிம்மதியடைகிறது. அமைதியுறுகின்றது. பிறகு அதை அடக்குவது வெகு எளிதான காரியம்.

ஆத்ம சாக்ஷாத்காரம் என்பதில் பகவத் சாக்ஷாத்காரம் பொருந்தியுள்ளது. பகவத் சாக்ஷாத்காரம் என்பதில் ஆத்ம சாக்ஷாத்காரம் உட்படுகின்றது. மனப்பூர்வமாகவும் சிரத்தையுடனும் சாதனை செய்யச் செய்ய, உலகத்தின் மீதும் உலகப் பொருள்களின் மீதும் கொண்டுள்ள பற்று கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து இறுதியில் சாதகனை விட்டு அடியோடு ஒழிகின்றது.

மனதை வசப்படுத்துவது எப்படி?

மன அடக்கம் என்பது மிகக் கடினமான விஷயம். இதன் கடினத்தன்மை அர்ஜுனனைப் போன்ற வீரனையும் திகைக்க வைத்தது. ஏன், அர்ஜுனனுக்கு முன்னதாக, மனிதகுலம் பிரபஞ்சத்தில் தோன்றிய காலம் முதற்கொண்டே, எல்லா சாதகர்களுக்கும் இந்த மன அடக்கம் கடத்தற்கரிய தொரு பெரும் தடையாக இருந்து வந்துள்ளது.

கிருஷ்ணரிடம் அர்ஜுனன் இதைப் பற்றிப் பரிதாபமாகக் குறையிட்டுக் கொண்டான். 'பலமான புயலையும் சூறாவளியையும்கூட அடக்கிவிடலாம். ஆனால் சஞ்சலமுடைய அடங்காப் பிடாரியான மனதை அடக்க முடியவில்லையே' என்று அர்ஜுனன் தெரிவித்தான். அது சரிதான் என்று ஏற்றுக் கொண்ட கிருஷ்ணர், 'மனம் உண்மையிலேயே அமைதியற்றது, எளிதில் கட்டுப்படாததுதான். ஆனால் வைராக்கியம், விவேகம் இவற்றுடன் கூடிய நீண்ட அப்பியாசத்தின் மூலம் மனத்தை ஒடுக்கிவிடுவது சாத்தியமே' என்று விளக்கிச் சொன்னார்.

நித்தியம், அநித்தியம்; சத், அசத்; தர்மம், அதர்மம்; சாச்வதமானது, நிலையற்றது - இவற்றைப் பாகுபடுத்தி வருவதால் மனம் உறுதி பெறுகின்றது. இவ்வாறு விசாரம் செய்வதோடு பிறப்பு, இறப்பு, மூப்பு, நோய், துக்கம் இவற்றிலுள்ள கேடுகளை இடைவிடாது சிந்தித்து மனக் கண்ணால் காண வேண்டும்.

மனப்பூர்வமாக, ஒழுங்காக, மீண்டும் மீண்டும் சாதனை செய்யாதவனுக்கும், இந்த உலகிலும், ஏன் தனது உடலிலும் பொருள்களிலும்கூட அடங்கியுள்ள கேட்டையும் அநித்தியத் தன்மையையும் காணாதவனுக்கும் மன அடக்கம் என்பது எளிதில் அடைய முடியாது.

தீய ஒழுக்கத்தில் சிக்கியவனும், மன ஒழுக்கமும் புலனடக்கமும் அற்றவனும் பகவத் தரிசனம் அல்லது சாக்ஷாத்காரத்தை அடைய முடியாது. 'எவன் தீய பழக்கத்திலிருந்து ஒதுங்கி நிற்கவில்லையோ, எவனிடம் அமைதியும் அடக்கமும் இல்லையோ, எவனுடைய மனம் சாந்தி நிறைந்ததாக இல்லையோ அவன் ஆத்மாவை அடைய மாட்டான்' என்பது உபநிஷத்தின் கூற்று.

மனதை அடக்குவதற்கான உபாயங்கள்

கீதாசாரியனான பகவான் இதன் காரணமாகவே பல நல்லியல்புகளை வளர்க்குமாறு சாதகனைப் பணிக்கின்றார். இவ்வாறு செய்தால் மனதை அதனுடைய ஓயாத அலைச்சல்

களினின்று ஒடுக்கி அடக்குவதற்கு வழி ஏற்படும்.

அந்த நல்லியல்புகளாவன: 'தற்பெருமையின்மை, ஆணவ மின்மை, அஹிம்சை, பொறுமை, நேர்மை, குருசேவை, தூய்மை, விடாமுயற்சி, தன்னடக்கம், விஷயங்களில் விருப்பின்மை, அஹங்காரமின்மை, பிறப்பு - இறப்பு, மூப்பு - பிணி, துயரம் ஆகியவைகளில் கேடு காணுதல்,

'பற்றின்மை, மகன் - மனைவி - வீட்டைத் தனதென்று அபிமானம் கொள்ளாதிருத்தல், வேண்டுவன வேண்டாதவை விளையுமிடத்து மனம் எப்போதும் நடுநிலையில் இருப்பது, வேறு எதையும் எண்ணாத யோகத்தால் இறைவனிடம் பிறழாத பக்தி பண்ணுதல், தனியிடத்தை நாடுதல், ஜனக் கூட்டத்தில் விருப்பமின்மை' - இவை யாவும் ஞானத்தைத் தரவல்ல முறைகள்.

மனதையும் பொறிகளையும் எளிதில் அடக்குவதற்கு இவை உதவுகின்றன.

ஆபாசமான உலகப் பொருள்களின் மீதும், அவற்றை அனுபவிப்பதற்குக் கொண்டுள்ள ஆசைகள் யாவையும் சாதகன் அறவே ஒழித்துத் தள்ளிவிட வேண்டும். ஏனெனில் எவனது மனமானது பொறிகளின் வழிசென்று இந்திரிய போகங்களை நாடுகின்றதோ அந்த மனம் வாழ்வின் லட்சியத்தை அடையாது இறுதியில் பெரு நஷ்டத்தை யடைந்து அழிகின்றது.

இதுமட்டுமல்ல; இன்னமும்கூட அதிகமான கேடும் சம்பவிக்கலாம். இவ்வாறு இந்திரிய நுகர்ச்சிகளில் ஈடுபடும் மனம், சாதகனை அவன் அறியாமலேயே பொதுநலத்துக்கு மாறான அல்லது எதிரான செயல்களைச் செய்யுமாறு ஊக்குவிக்கின்றது. ஆசைகளை உள்ளத்தில் வளர்த்த பிறகு அவை திருப்தி செய்யப்படாமல் பங்கமடைவது இவ்வாறு விபரீத சேஷ்டைகளுக்கு ஏதுவாகின்றது.

வசப்படாத மனமும் இந்திரியங்களும் பரம விரோதிகள். துயரத்தையும் துன்பத்தையும் பெறவே அவை வழி தேடிக் கொடுக்கின்றன. விவேகத்தைக் கொண்டு சாதகன் மன ஒடுக்கத்தை அப்பியசிக்க வேண்டும். மன நிக்கிரகம் மட்டும் ஏற்பட்டுவிட்டால் அவனுக்குள்ளேயே இருக்கின்ற அடங்கா மனம், பொறிகளாகிய விரோதியை அவன் வெற்றிகரமாக வசப்படுத்தியவனாவான்.

மனதை வசப்படுத்துவதன் நோக்கம்

சாதனையின் நோக்கமும் குறியும் இந்த மன நிக்கிரகமெனும் பேறு பெறுவதுதான். மனம் ஒய்ந்து நிம்மதி பெற்றதும், பகவத் தரிசனம் அல்லது ஆத்ம சாக்ஷாத்காரம் எனும் நாட்டத்தில் சாதகனுக்கு அந்த மனமே சரியான முறையில் உறுதியான ஒரு வழிகாட்டியாக உழைக்க ஆரம்பிக்கின்றது. தீய ஆசைகள் அறவே துடைக்கப் பெற்ற மனம் உண்மையிலேயே ஆத்ம சொரூபமாகி விடுகின்றது.

குருமார்களும் சத்போதகர்களும் எவ்வளவுதான் செய்தாலும், வழி இன்னது என்று காட்டி, சாதகனை இப்படிச் செய் அப்படிச் செய் என்று சொல்லுதற்கு மேலாக யாதும் செய்ய முடியாது. குரு, ஆசாரியன் இவர்களுடைய ஆசியைவிடத் தன் மனதினுடைய ஆசியே அதிக இன்றியமையாததும் பயனுடைத் ததுமாகும். மாசுடைய மனம் உள்ளதே, அது பாப புருஷனுடைய களம் போன்றது.

எவ்வளவு கஷ்டப்பட்டேனும் மனத்தை மாசு நீக்கிச் சஞ்சலம் அகன்றதாக ஆக்க வேண்டும். அதற்கான வழியாவது அசுத்தமான ஆசைகளையெல்லாம் அகற்றித் தள்ளுவதுதான். இதைச் செய்து முடித்தால் மனமானது சாதகனு டைய பெருநெறி முயற்சியில் கூடிநின்று உதவி செய்யும்.

கடவுளை அடைய அவாவுற்று வேட்கையுறுவதாலும், பொறி களின் ஆசைகளை ஒழிப்பதாலும், அகங்கார மமகாரங்களை நீக்குவதா லும் சாந்தியும் நிம்மதியும் பெறக் கூடும். சாந்தி வந்துற்ற இடத்து சோகம் என்பது இல்லாது போகின் றது. அந்த நிலையில் மனமும் புத்தியும் உறுதியாக நிலைத்து நிற்க, இறைவன்பால் உள்ளத்தைக் குவித்தல் எளிதாகின்றது. இதைச் சாதித்த மனிதனையே கீதை ஸ்திதப்ரக்ஞன் (நிலைத்த ஞானமடைந்தவன்) எனப் போற்றுகின்றது. ❖

எவர் ஒருவர் பிறர் மீது அக்கறை செலுத்துகிறாரோ, அவர் மீது தான் இறைவன் அன்பு செலுத்துகிறார். - குருநானக்

சென்ற இதழின் தொடர்ச்சி...

சகோதரி நிவேதிதை காட்டும்

உங்கள் சொந்தக் காலில் நில்லுங்கள்; அது தானாக உங்களை வழி நடத்திச் செல்லும். - சுவாமி சிவானந்தர்

இந்திய வரலாற்றை அறிய முற்படும் ஒவ்வோர் இந்தியனுக்கும் தன் முன்னோர் களின் சாதனைகள் குறித்த பெருமிதம் ஏற்படும். அதற்கு நம் முன்னோர்களின் சாதனைகள் மட்டுமல்ல; பல்லாயிரம் ஆண்டுகளைப் பார்த்துவிட்ட பாரதம் வந்த வழியாகிய - வரல் ஆறு ஆகிய - வரலாற்றின் அறுபடாத தொடர்ச்சியும் முக்கிய காரணம்.

பாரதத்தின் தனிச்சிறப்பான இது எதிர்காலத்தை உருவாக்க, உறுதியான அடிப்படையை அளிக்கிறது.

பாரதத்தின் ஆன்மஞானப் பரம்பரையில் ஞானத்தை அளிப்பதில் குருவிடமிருந்து சிஷ்யருக்கு, அவரிடமிருந்து அவருடைய சிஷ்யருக்கு என்று அறுபடாத தொடர்ச்சி உள்ளது. இதனை 'வாழையடி வாழையென வந்த திருக்கூட்டம்' என்று போற்றுவர் பெரியோர். இவ்விதம் ஆன்மஞானத்தை நம் தேசிய வாழ்வின் அடிப்படையாக, அஸ்தி வாரமாக ஆக்கியது நம் முன்னோர்களின் நல்லறிவே.

அதன் விளைவாக, புண்ணிய பூமியிலே மன்னர்களும் மக்களும் வாழ்ந்து மண் ணொடு மண்ணாயினர் எனினும், அவர்களை வாழ்வித்த மதிப்பீடுகளும் அவற்றை அளித்த சனாதன தர்மமும் இன்றும் தொடர்கின்றன. அவற்றின் வரலாறும் தொடர்கிறது. அந்த வரலாற்றைப் படைத்த முன்னோர்களும் அதில் வாழ்கின்றனர்.

பாரதத் தாயின் இளமையின் சூட்சுமம் என்ன? இக் கேள்விகளுக்குச் சரியான விடையைச் சகோதரி நிவேதிதையின் வார்த்தைகளிலேயே காணமுடியும்.

பாரதத்தின் புத்திளமை உலக நாடுகள் எதிலும் காணப்படுவது அல்ல. அமெரிக்கா போன்று சமீபத்தில் தோன்றிய நாடுகளிடம் பழைமையின் அனுபவம் இல்லை. பாரதத்திற்கு இணையான பழைமை கொண்ட பல தேசங்கள் இப்போது மறைந்தேவிட்டன. இரண்டும் இருப்பது பாரதத்திடம் மட்டுமே.

'உள்ளுறை ஆற்றல்களும், அந்த ஆற்றல்களைச் சாதனைகளாக வெளிப்படுத்தத் துடிக்கும் ஆர்வமும், ஆற்றல்களைச் சாதனைகள் ஆக்கும் பொருட்டு உலகில் என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்று பார்க்கும் பார்வையின் பரந்த வீச்சுமே இளமைத் துடிப்பின் உண்மை லட்சணங்கள்' என்று சுட்டிக் காட்டும் சகோதரி, 'அத்தகைய இளமைத் துடிப்பே பாரதத்தாயிடம் உள்ளது' என்று உணர்த்துகிறார்.

பாரதத்தின் தற்கால சந்ததியினரான நமக்கு நம் கடமைகளையும் அவற்றை ஆற்றுவதற்கான வலிமை களையும் நினைவுறுத்தும் சகோதரியின் மந்திரச் சொற்கள் இதோ: 'தேசியத்தில் நம்பிக்கை கொள்ளும் ஒருவன் இந்தியா இளமையோடு இருப்பதைக் காண்கிறான். எத்தகைய இளமை? ஐயாயிரம் ஆண்டுப் பாரம்பரியத்தின் நினைவுகளைச் சுமந்து கொண்டிருக்கும் இளமை! உண்மையில், உலக நாடுகளுக்கிடையே பாரதம் ஒரு பிரம்மசாரிணி. புற உலகினால் உணரப்படாத சக்தி நிரம்பியவளாய், போராட்டத்திற்குத் தயாராய் இருப்பவளாய், ஆர்வம் மிக்கவளாய், உடல் முழுவதும் அஞ்சாமையும் வீரமும் பாய்ந்து கொண்டிருப்பவளாய், தன்னுள்ளே உறையும் ஆற்றல்களை உணர்ந்தவளாய் வலிமையோடு விளங்கும் இளமை அது!'

'பழைமைச் சிறப்புமிக்க தேசங்களான எகிப்து, நினவே, பாபிலோன் எல்லாம் மறைந்துபோய்விட, இந்தியா மட்டும் இன்னும் வாழ்கிறாள், வளர்கிறாள். தன்னைச் சூழ்ந்திருக்கும் உலகின் உயிர்ச்சக்திகளின் தாக்கத்திற்கு உரிய பதிலளிக்கிறாள். தான் வளர்வதற்கும் நிறைநிலை அடைவதற்கும் தன் முன்னே

இந்திய வரலாறு

விரிந்திருக்கும் நீண்டநெடும் வாய்ப்புக்களைக் காண்கிறாள்' என்று பாரதத்தின் தனிப்பெருமை மிக்க சொத்தான பழைமையின் அடிப்படையில் நிற்கும் இளமையின் ரகசியத்தைப் பெருமையோடு போற்றுகிறார், இந்தியர்களோடு இந்தியர்களாய் ஒன்றிவிட்ட சகோதரி.

இதுமட்டுமல்லாமல் இடம், காலம் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியாவின் ஒற்றுமை குறித்தும் சகோதரி நிவேதிதை பல அரிய உண்மைகளை உரைத்துள்ளார்.

இந்திய வரலாறு யாரால் எழுதப்பட வேண்டும்?

பாரத தேசிய வரலாறு குறித்து இத்துணை பெரு மிதம் கொண்டபோதும் அதற்கிடையே ஒரு குறையும் சகோதரியின் நெஞ்சை வாட்டியது. பாரதத்தின் பெருமைமிகு இவ்வரலாற்றினை சகோதரியின் காலத்தில் எழுத்தில் வடித்தவர்கள் வின்சென்ட் ஸ்மித் போன்ற ஆங்கிலேய, ஐரோப்பிய அறிஞர்களே.

பாரதத்திற்குப் பண்டைய பெருமையை அளிக்கும் முறையான ஆவணப்படுத்துதல் இல்லை என்று மேற்கத்திய வரலாற்று ஆராய்ச்சி அளவுகோல்களை வைத்து நம்மைக் குறை கூறினர். எனவே நம் முன்னோர்களின் பெருமைக்குரிய சாதனைகளை அவர்கள் குறைவாக மதிப்பிட்டனர்.

நம்மை அடிமைப்படுத்தி ஆதிக்கம் செலுத்திய, அதைத் தொடர விரும்பிய அன்னியர்கள், வேறு என்ன சொல்வார்கள்? இதனைக் கண்டு நொந்துதான் சுவாமி விவேகானந்தர், 'நம்முடைய தேசத்தின் வரலாற்றை எழுதியதற்கிடையே, அந்த அன்னியர்கள் நம்முடைய தந்தையரும் தாத்தாமாரும் பாட்டன்மாரும் பூட்டன்மாரும் முட்டாள்கள் என்று சொல்லி, நம்முடைய தன்னம்பிக்கையைச் சிதைக்க முற்பட்டனர். அந்த நம்பிக்கையை நாம் மீண்டும் பெறும் பொருட்டு, நம்முடைய வரலாற்றை நாமே எழுதவேண்டும்' என்று முழங்கினார்.

சகோதரி நிவேதிதை எழுதுகிறார்:

'இந்திய வரலாறு பல பிரச்னைகளைத் தன்னுள் அடக்கியிருக்கிறது; ஏராளமான பல புதிய பணிகளை நம் கவனத்திற்குக் கொண்டு வருகிறது. ஆனால் (இந்திய வரலாற்றை எழுத முயலும் ஐரோப்பிய அறிஞர்கள்) இவற்றைக் காணவும் கேட்கவும் சக்தியற்றவர்களாய் இருக்கிறார்கள். அன்னிய தேசத்து அறிஞர் மரபில் உருவான அறிஞர் ஒருவர் இந்த வரலாற்றை எழுத முற்பட்டால் உயர் ஆராய்ச்சியின் முதல் நிபந்தனையையே அறியாதவராய் இருக்கிறார்.

'அந்த முதல் நிபந்தனை - அத்தகைய உயர் ஆராய்ச்சியின் முதலாவதும் மிக உயர்ந்ததுமான தேவை - ஆராயும் அறிவல்ல; உற்றுணரும் இதயம், தீவிரமான பேரன்பு, ஒரு குழந்தையின் உள்ளுணர்வு. இந்த முதல் தேவையைத் தான் நிறைவேற்றுவதாக எந்த அந்நிய தேச அறிஞரும் பெருமைப்பட்டுக் கொள்ள முடியாது. அதுமட்டுமல்ல. அந்த அறிஞர் எந்த அன்னிய நாட்டின் வரலாற்றை எழுத முற்படுகிறாரோ அந்த நாட்டில் வாழ்வதில்லை.

'அந்த நாட்டு மக்களுடைய வாழ்வின் அம்சங்களை அன்போடு இதயத்தில் வைத்து, மீண்டும் மீண்டும் தொடர்ந்து நினைத்துப் பார்க்க அவருக்குச் சக்தியிருப்பதில்லை. அதனால் தன்னைச் சுற்றியுள்ள பொதுமக்க ளின் வாழ்க்கை என்னும் காற்றுக்களால் வீசியடிக்கப்படும் வரலாற்றின் தொங்கும் தனி இழைகளைச் சேர்த்துப் பிடிக்க அவருக்கு இயலுவதில்லை.

'இந்தியாவைப் பொருத்தவரையிலோ அதன் வரலாற்றின் சரிபாதி, அதன் சமய சம்பிரதாயங்களிலும் குடும்பப் பாரம்பரியங் களிலும் எழுதப்பட்டிருக்கிறது, அந்நிய ருக்கு இவையெல்லாம் எப்படித் தெரியும்? இந்த இனத்தின் ஐதீகங்கள், பழமொழிகள், நற்பழக்கவழக்கங்கள் அல்லது அதன் சமயக் கொள்கைகள் பற்றியெல்லாம் என்ன தெரியும்? அல்லது, இவையெல்லாம் தெரிய வருகின்றன என்றே கொண்டாலும், கடந்த காலத்தின் உள்ளுறை முக்கியத்து வத்தை அறிந்து, எதிர்காலத்தை நோக்கிப் பயணிக்கச் சரியான

சாஞ்சி ஸ்தூபி

மாயையும் அகங்காரமும் ஒன்றே. அகங்காரம் போனால், மாயையும் மறைந்துவிடும். -சான்றோர் வாக்கு

தமிழ்நாடு, ஸ்ரீராமகிருஷ்ணர்-ஸ்ரீசாரதாதேவி-சுவாமி விவேகானந்தர் பக்தர்களின் 25-ஆவது மாநாடு-2017, கோணம்பட்டி. (வெள்ளி விழா மாநாடு)

இடம் : ஸ்ரீராமகிருஷ்ண சாரதா ஆஸ்ரமம், கோணம்பட்டி-626 189. (வழி) சிவகாசி

நாள் : 2017, டிசம்பர் 23, 24, 25, 26 - சனி, ஞாயிறு, திங்கள், செவ்வாய்

அன்பர்களே! பக்தர்களே!

நமது கோணம்பட்டி ஆஸ்ரமத்தில் நடைபெற உள்ள பக்தர்களின் மாநாட்டில் **தவத்திரு. ஸ்ரீமத் சுவாமி கௌதமானந்த மகராஜ்** அவர்கள். **ஸ்ரீமத் சுவாமி அபிராமானந்த மகராஜ்** அவர்கள் மற்றும் ஸ்ரீராமகிருஷ்ண மடம் மற்றும் மிஷனைச் சேர்ந்த எண்ணற்ற சாதுக்களும், சாரதா மடத்து மாதாஜிகளும் கலந்து கொண்டு சிறப்பிக்க இருக்கிறார்கள். இந்த மாநாட்டில் மகராஜ், மாதாஜிகள் ஆகியோரின் அருளுரை, மற்றும் பல ஆன்மிக நிகழ்ச்சிகள் இடம்பெற உள்ளன. அனைவரும் வந்து கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கிறோம்.

இதில் கலந்து கொள்ள விரும்பும் பக்தர்கள் உணவு, தங்குமிடம் ஆகியவற்றிற்கு நபர் ஒருவருக்கு ரூ.300/- மட்டும் பதிவு கட்டணம் செலுத்தி பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம். ஒரு நாளுக்கு பதிவு கட்டணம் ரூ. 100/- (காலை 5.30 முதல் இரவு 9 மணி வரை)

பக்தர்கள் பதிவுகட்டணம், சிறப்புமலர் விளம்பரக்கட்டணம், நன்கொடைகளை கீழே குறிப்பிட்டுள்ள வங்கிக் கணக்கில் செலுத்தி, தங்களுடைய முழுமுகவரியுடன் கீழ்க்கண்ட மெயிலுக்கு அல்லது செல் எண்: 94433 84312 க்கு தெரிவிக்க வேண்டுகிறோம்.

A/c. Name: Tamilnadu Sri Ramakrishnar Sri Sarada Devi Swami Vivekanandar Devotees 25th Conference-2017

A/c No: 0921101031913 Canara Bank, Sivakasi. IFSC CODE : CNRB0000921.

E-mail: srkashramkonampatti@gmail.com
www.ramakrishnakonampatti.com

இறைபணியில்
மாநாட்டு குழுவினர், செல்: 94431 24707

ஜெயலக்ஷ்மி யாத்ரா சர்வீஸ் (Regd.)

நெ.16/54, கிழக்குமாட வீதி, திருவான்மியூர், சென்னை -41.
ஆபீஸ் போன்: 044 - 24451270, செல் : 94449 80270, 81229 96045
E.mail:jayalakshmi.yatra@gmail.com, www.jayalakshmiyatraservice.com

ஸ்ரீதிருப்பதி வெங்கடேஸ்வர ஸ்வாமி திருவருளால் 25 வருடங்கள் அனுபவத்துடன் வழிநடத்தும் வடஇந்திய மற்றும் தென்இந்திய யாத்திரை

1	16.11.2017	19- நாட்கள்- நவஜோதிர்லிங்க யாத்திரை - த்ரியம்பகேஷ்வர், பீமாசங்கர், க்ருஷ்ணேஷ்வர், நாகேஸ்வரர், சோமேஸ்வர், ஓம்காரீஸ்வரர், உஜ்ஜயினி மகாகாளேஸ்வரர், காசி விஸ்வநாதர், ஜெசிடி வைத்தியநாதர், பண்டரீபுரம், ஷீரடி, பஞ்சதுவாரகை, கோலியாக்- யாத்திரை நபர் ஒன்றுக்கு ரூ. 22,500/-
2	09.12.2017	10 நாட்கள்- 21 பாடல் பெற்ற சிவஸ்தலங்கள்-274 (189 முதல் 210 வரை பாண்டியநாடு - 14, கொங்குநாடு -7, குன்றக்குடி, நவகையிலாயம், நகரக்கோவில்கள்- பிள்ளையார்பட்டி, வைரவன் கோவில், இளையாத்தகுடி, மாத்தூர், இரணியூர், சூரக்குடி, இருப்பைக்குடி, நேமம், வேலன்குடி - யாத்திரை நபர் ஒன்றுக்கு ரூ.11500/-
3	20.12.2017	10 நாட்கள்- மேல்கோட்டை, ஸ்ரீரங்கபட்டிணம், மைசூர், தலகாவேரி, பேலூர், ஹலபேடு, சிருங்கேரி, ஹொரநாடு தங்க அன்னபூரணி, நஞ்சன்கூடு, குக்கி சுப்ரமணியா, தர்மஸ்தலா, கட்டில், உடுப்பி, கொல்லூர் முகாம்பிகை, கோகர்ணம், முருடேஸ்வரர், மங்களூர் வீரநாயகர்- கர்நாடகா யாத்திரை நபர் ஒன்றுக்கு ரூ.11500/-
4	03.01.2018	8 நாட்கள்- 51 பாடல் பெற்ற சிவஸ்தலங்கள்-274 (1 முதல் 51 வரை) யாத்திரை நபர் ஒன்றுக்கு ரூ.9,500/-
5	20.01.2018	8 நாட்கள்-திருவனந்தபுரம் பத்மநாபசாமி கோயில், திருக்காட்காரை, திருமுழிக்களம், திருப்புலியூர்,திருச்செங்குன்னூர், திருநாவாய், திருவல்லவாழ், திருவித்துவக்கோடு, திருக்கடித்தானம், திருவாறன்விளை, குருவாயூர், திருச்சூர், அஞ்சயக்களம் (பாடல் பெற்ற சிவாலயம்), சோட்டாணிக்கரை, கொடுங்கோளூர்- மலைநாட்டு திவ்ய தேசம் யாத்திரை நபர் ஒன்றுக்கு ரூ.9,500/-
6	07.02.2018	12 நாட்கள் - அலஹாபாத், நைமிசாரண்யம், அயோத்தியா, காசி, கயா - மஹா சிவராத்திரி காசி யாத்திரை நபர் ஒன்றுக்கு ரூ.13,500/-
7	26.02.2018	11 நாட்கள் -விசாகப்பட்டினம், சிம்மாச்சலம், ஸ்ரீகூர்மம், அரசவல்லி, அன்னவரம், பிட்டாபுரம், சாமல்ல கோட்டா, தாக்ஷாராம், பெனுகுண்டா, அந்தர்வேதி (கோதாவரிசாகர் சங்கமம்), பாலகொள்ளு, பீமாவரம், துவராகா திருமலா, கனக துர்கா, மங்களகிரி, அமராவதி, ஸ்ரீசைலம், மகாநந்தி, அகோபிலம் நவநரசிம்மர், மந்திராலயம்- ஆந்திரா யாத்திரை நபர் ஒன்றுக்கு ரூ.12,500/-
8	17.03.2018	14 நாட்கள் -ஸ்ரீவைஷ்ணோ தேவி யாத்திரை- மதுரா, பிருந்தாவனம், கோகுலம், கோவர்த்தன், குருஷேத்திரம், ஜலந்தர் தேவிதலாப், அமிர்தசரஸ், ஜம்மு, கட்ரா, சிங்கோனி, சாமுண்டா, காங்கடா, ஜ்வாலாமுகி, சிந்தபூரணி, நைனாதேவி, டெல்லி, அக்ஷர்தாம் சக்தி பீட யாத்திரை நபர் ஒன்றுக்கு ரூ.16,000/-
9	05.04.2018	6 நாட்கள் - சோழ நாடு திவ்விய தேசம் - 40 யாத்திரை நபர் ஒன்றுக்கு ரூ.8,000/-
10	15.04.2018	15 நாட்கள்- நேபாள் யாத்திரை - காசி, அயோத்தியா, லும்பினி, போக்ரா, முக்திநாத், மனோகாமனா, காத்மாண்டு, பசுபதிநாதர், குஜ்ஜேஸ்வரி சக்தி பீடம், அமர்கண்டக், நர்மதா உற்பத்திஸ்தான் - யாத்திரை நபர் ஒன்றுக்கு ரூ.18,000/- (AC பஸ்)

மேலும் விவரங்களுக்கு நிர்வாகி: K.ரகு 'ஜெயலக்ஷ்மி' யாத்ரா சர்வீஸ் போன்- 99628 22782

சாலையில் அவரைப் பிழைபோகாது வழிநடத்திச் செல்லும் வழிகாட்டுதலைப் போதிக்கும் சுடர்விட்டு எரியும் நம்பிக்கை எங்கிருக்கும்?'

இத்தகைய தகுதிகள் இல்லாமை மட்டுமல்ல, ஏற்கனவே உள்ளத்தில் வேரூன்றியிருந்த காழ்ப்புணர்ச்சி களோடு, இந்தியாவின் நிறைகளைக் குறைகளாகப் பார்க் கும் காமாலைக் கண்ணோடு அணுகினர் நிவேதிதையின் காலத்தில் இந்திய வரலாற்றை எழுத முற்பட்ட அறிஞர்கள். அதே தவறான கண்ணோட்டத்தை தேசிய சிந்தனை இல்லாத, தற்கால சித்தாந்தங்களை ஏற்றுள்ள அறிஞர்கள் தற்போதும் தொடர்கின்றனர், .

எனவே இன்று பாரதத்தில் பொதுமக்களுக்கும், பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கும் கிடைப்பது நிவேதிதை எதிர்பார்த்த பெருமிதம் கொள்ள வைக்கும் இந்திய தேசிய வரலாறு அல்ல.

சகோதரி எழுதுகிறார்: 'இந்திய மக்களின்முன் நிற்கும் முதல் கடமைகளில் ஒன்று அவர்களின் வரலாற்றை அவர்களே எழுதுவது. இதை நிறைவேற்றுவது, தற்காலப் பாண்டித்தியத்தின் வெளிப்படையாக அறிவிக்கப்படாத விதியின்படி, தனி மனிதர்களால் அல்லாமல் பலபேரின் கூட்டமைப்பினால் செயல்படுத்தப்படவேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்வது என்றால், இந்திய அறிஞர்களின் சங்கம் ஒன்றினால் நிறைவேற்றப்பட வேண்டும்.'

சகோதரியின் விருப்பப்படியே இந்தியர்கள் பலர் இந்திய தேச வரலாற்றையும் குறிப்பாக சுதந்திரப் போராட்ட வரலாற்றையும் பாரதத்தின் பலப்பல பிரதேசங்களின் வரலாறுகளையும் எழுதி யுள்ளனர். இவற்றில் ஒரு பெரிய குறை, மேல் நாட்டு அறிஞர்கள் துவக்கி வைத்த பாணியிலேயே இவ்வரலாறுகள் எழுதப்பட்டிருப்பதுதான்.

அத்துடன் அறிஞர்களின் சங்கங்களும் நம் தேசிய வரலாற்றைத் தேசிய உணர்வுடன் எழுதும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. உதாரணமாக, கொல்கத்தா ராமகிருஷ்ண மிஷன் கலாச்சாரக் கழகம் (Ramakrishna Mission Institute of Culture, Kolkatta) பாரதத்தின் பண்பாட்டு வரலாற்றினை நான்கு தொகுதிகளாக எழுதி வெளியிட்டுள்ளது.

ராஷ்டிரீய ஸ்வயம் சேவக் சங்கத்தின் பரிவார அமைப்புக்களில் ஒன்றான இதிகாச சங்கலன சமிதி பாரத தேசிய வரலாறு குறித்த ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது.

தாமரை இலைமீது உள்ள நீரைப் போன்றும், ஊசி முனை மீது உள்ள கடுகைப் போன்றும் எவன் ஆசைகளுக்கு கட்டுப்படாதவனோ அவனே யோகி என்று அழைக்கப்படுகிறான். - தம்மபதம்

இந்திய தேசியத் தொல்லியல் துறை (Archeological Survey of India)யின் அறிஞர்களும் பிற ஆராய்ச்சியாளர் களும் பூமியில் மறைந்துவிட்ட சரஸ்வதி நதியையும் அதன் கரையில் வளர்ந்த வேதகால நாகரிகத்தின் வியத்தகு அம்சங்களையும் குறித்த பல முக்கியமான அகழ்வாராய்ச்சிகளை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளனர்.

மிக சமீபத்தில் தமிழ்நாட்டில் கீழடி என்ற இடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியில் பழந்தமிழர் நாகரிகத்தின் நகர அமைப்புகள் பற்றிக் கண்டுபிடிக்கப்பட்டவை உலகையே வியப்பில் ஆழ்த்துபவையாய் உள்ளன.

இவ்வரிய கண்டுபிடிப்புக்களின்

ஹம்பி

முடிவுகளை முறையாக ஆவணப்படுத்த வேண்டும். ஐரோப்பிய அறிஞர்கள் பரப்பியுள்ள பல தவறான கொள்கைகளை நீக்கி, நம் தேசத்தின் முன்னோர்களின் சாதனைகளைப் பற்றிய உண்மைகளை முறையாக எழுதப்பட்ட வரலாறாக இந்தியக் குடிமக்களுக்கும், குறிப்பாக மாணவர்களுக்கும், உலக நாடுகளுக்கும் அறிவிப்பதும் சர்வ தேச அளவில் மறக்கவோ, மறுக்கவோ, மறைக்கவோ முடியாத வகையில் உலகின் ஞானக் களஞ்சியத்தில் சேர்ப்பதும் நமது இன்றியமையாத கடமை.

அத்தகைய முயற்சியில் ஈடுபடுவோர் சகோதரி நிவேதிதையின் ஆசிகளைப் பெறுவார்கள் என்பதில் ஐயம் சிறிதுமில்லை. ❖

ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம்

(தலைமைச் செயலகம், பேலூர் மடம், மேற்கு வங்கத்தின் கிளை மையம்)

SRKV அஞ்சல், பெரியநாயக்கன்பாளையம், கோயம்புத்தூர் 641 020. Ph: 0422-269 2676,
Cell: 9944941427, e-mail: **ycsrkvcbe20@gmail.com**, Web: **www.srkv.org**

1, 2, 3 டிசம்பர் 2017

இளைய பாரதமே, எழுந்திரு!

இளைஞர் முகாம் - தமிழ்நாடு - 2017

18 முதல் 30 வயதுள்ளவர்கள் வரை ஆண்கள் மற்றும் பெண்கள் கலந்து கொள்ளலாம்

முகாமின் நோக்கம்: தேசிய விழிப்புணர்வு - இளைஞர்களை நாட்டுக்காக அர்ப்பணிக்கும் புனிதமான பணியில் ஈடுபடுத்தி நல்வழி காட்ட, தேசத்திற்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட சுவாமி விவேகானந்தர் போன்றோரை முன்னோடிகளாக வைத்து நடத்துவது.

விருப்பமுள்ள இளைஞர்கள் **27 நவம்பர் 2017**-க்குள் தாங்கள் சமர்ப்பிக்க விரும்பும் கட்டுரையின் நகலை (தமிழ் அல்லது ஆங்கிலம்) எங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும். 5 நிமிடத்திற்குள் படிக்கக்கூடியதாக இருக்க வேண்டும். சுயமாக எழுதப்பட்ட, தெளிவான, எடுத்துக்கொண்ட தலைப்புடன் தொடர்புடைய, நடைமுறைப்படுத்தக்கூடிய வகையில் உள்ள கட்டுரைகளுக்கு மட்டுமே வாய்ப்பு வழங்கப்படும். **தேர்வுக்குழுவின் முடிவு இறுதியானது.**

1) முழுவதும் உறைவிட முகாம், **2)** சைவ உணவு, **3)** பாதுகாப்பான எளிமையான இருபாலருக்கும் தனித்தனி தங்குமிடம், **4)** பெரும்பாலான நிகழ்வுகள் தமிழிலும் சில ஆங்கிலத்திலும் இருக்கும், **5)** பங்கேற்போர் சாதாரணமான படுக்கை போர்வையுடன், ஸ்வெட்டர், டார்ச் லைட் மற்றும் குடை போன்றவற்றையும் எடுத்துவர வேண்டும், **6)** உடைகளைப் பொறுத்தவரை கண்ணியமாக, நமது நாட்டுக்கும் பண்பாட்டுக்கும் உகந்தவையாக இருக்க வேண்டும். ஜீன்ஸ் மற்றும் மிகவும் இறுக்கமான உடைகளை முகாமில் அணியக்கூடாது. ஆண்கள்: கௌரவமான கலரில் பேண்ட், சர்ட், பெண்கள்: சேலை/சுடிதார், சல்வார் கம்மீஸ், **7)** போதைப் பொருள்களை (சிகரெட், மது, போதை பொருள்கள்) பயன்படுத்துவது கண்டறியப்பட்டாலோ அல்லது நாகரீகமற்ற முறையில் நடந்துகொண்டாலோ அவர்கள் உடனடியாக முகாமைவிட்டு வெளியேற்றப்படுவார்கள்.

முகாம் கட்டணம் : உணவு, தங்குமிடம் மற்றும் புத்தகங்கள் உட்பட ஒருவருக்கு ரூ.500/-

முகாமில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் கட்டணத்தை டி.டி. அல்லது மணி ஆர்டராக "Ramakrishna Mission Vidyalaya" என்ற பெயருக்கு எடுத்து செயலர், ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம், பெரியநாயக்கன்பாளையம், வித்யாலய அஞ்சல், கோவை - 641 020, என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். நேரில் செலுத்த விரும்புவர்கள் ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயத்தில் உள்ள **இளைஞர் முகாம் அலுவலகத்தில் காலை 9.30 முதல் 12.00 வரையிலும் மதியம் 2.00 மணி முதல் 6.00 மணி வரையிலும்** செலுத்தலாம். **Thro' NEFT/RTGS** மூலம் செலுத்த **Ramakrishna Mission Vidyalaya, Indian Overseas Bank, Periyanaickenpalayam Branch, Account No.256101000015000, Account Type: SB, IFSC Code: IOBA 0002561**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்கள் முகாம் கட்டணத்துடன் எங்களுக்கு வந்து சேரவேண்டிய கடைசி நாள்: **27-11-2017.**
அதிகபட்சமாக 1200 பேர் வரை கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர். முதலில் விண்ணப்பிப்பவர்களுக்கு மட்டுமே வாய்ப்பு.

எங்களுடைய இணையதளத்திலிருந்தும் இதற்கான பதிவுப்படிவத்தை பதிவிறக்கம் செய்து பயன்படுத்தலாம்.

'பக்தி உலா' வழங்கும் யாத்திரைகள்

13.11.17 to 26.11.17: குஜராத் - ராஜஸ்தான் - பஞ்சதுவாரகா விஜயம் அகமதாபாத் - டாக்கூர் துவாரகா - நிஷ்கலன் மகாதேவ் (கடல் கோயில்) - சோம்நாத் - பாலக் - முல்துவாரகா - போர் பந்தர் - ஜாம்பவான் குகை - பேட் துவாரகா - துவாரகா கோபிதளம் - நாகேசம் - அம்பாஜி - சோட்டாஅம்பாஜி - ஏக்லிங் - ஸ்ரீநாத் துவாரகா - காங்குரோலி துவாரகா - புஷ்கரம் - ஜெய்பூர். ரயில், உணவு - தங்குதல் உட்பட.

7.1.18 to 12.1.18: பூரி - புவனேஸ்வரர் - கோனார்க் விஜயம் சாட்சி கோபாலன் - பட்டமங்களா மங்களாம்பிகை - நரேந்திரகுளம் - பூரி ஜெகன்னாதர் - ராம் சண்டி - சந்திர பாகா பீச் - கோனார்க் - சூரியன் கோயில் - புவனேஸ்வர் - லிங்கராஜ் - கோதார் கவுரி - முக்தேஸ்வரர் 108 அனுமான் கோயில் - ராம் மந்திர் - அனந்தவாசுதேவ் மந்திர் - அலர்நாத் ஆதிஜெகன்நாத் கோயில் - ISCON மந்திர். ரயில், உணவு - தங்குதல் உட்பட.

19.2.18 to 28.2.18: காசி யாத்திரை பித்ருக்களின் ப்ரீத்திக்காக ஒரு பிரத்யேக பயணம் அலகாபாத் - காசி - கயா - (வைதீக ஏற்பாடுகளுடன்) பாரம்பரிய வழக்கபடி வைதீக ஏற்பாடுகள் செய்யப்படுகிறது. விரும்புவோர் நவம்பர் முதல் முன்பதிவு செய்து கொள்ள கேட்டு கொள்ளபடுகிறார்கள். ரயில், உணவு - தங்குதல் உட்பட.

15.3.18 to 28.3.18: நேபாள் முக்திநாத் விஜயம் அலகாபாத் - நைமிசாரண்யம் - அயோத்தி - வைத்தியநாத் (ஜோதிர்லிங்கம்) - காட்மாண்டு - பசுபதிநாத் - போக்ரா - முக்திநாத் - மனோகாமனா - வாரணாசி. ரயில், உணவு - தங்குதல் உட்பட.

ரயில் முன்பதிவு 120 நாட்கள் முன்னதாக தொடங்குகிறது

விபரங்களுக்கு: **ஆர். பட்டாபிராமன்,** உலா ஒருங்கிணைப்பாளர்
"**பக்தி உலா**" அசோக் மெடிக்கல்ஸ்
10, தண்டீஸ்வரம் மெயின் ரோடு, வேளச்சேரி, சென்னை - 42.
✆ **2243 4374, 2243 0370, செல்: 98407 53969**

ஆரோக்கியமான ஆகாரங்கள், பாதுகாப்பான தங்குதல்கள், குடும்ப பாவ உணர்வுகள்! இதுவே 'பக்தி உலா'.

Shivaa

சுவாமி நீலமாதவானந்தர்

வைஷ்ணவம்

வைஷ்ணவம் என்பதற்கு விஷ்ணு - சம்பந்தம் உடையது என்பது பொருள். விஷ்ணு என்றால் நீக்கமற எங்கும் நிறைந்த பரம்பொருள் என்பதாகும்.

ரிக்வேத காலந்தொட்டு வழிபாட்டினை நாம் அறிகிறோம். பிராமணங்கள் மகாவிஷ்ணுவை - நாராயணன் - புருஷ என்றெல்லாம் துதிக்கின்றன. விஷ்ணு வழிபாடும், ஸ்ரீகிருஷ்ண வழிபாடும் ஒன்றிணைந்து வைஷ்ணவத்தில் மாபெரும் பங்கு வகிக்கின்றன. தமிழ் இலக்கியங்கள், விஷ்ணுவை 'மாயோன்' என்று பேசுகின்றன.

சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை போன்ற தமிழ்க் காப்பியங்களில் பல குறிப்புகளைக் காணலாம்.

1. விஷ்ணுபுராணம் 2. மத்ஸ்ய புராணம் 3. கூர்ம புராணம் 4. வராக புராணம் 5. வாமன புராணம் 6. கருட புராணம் 7. பாகவத புராணம் போன்றவை வைஷ்ணவம் சார்ந்தவை.

விஷ்ணுவின் குணங்கள்: காக்கும் கடவுள், சரணடைந்த வரைக் காப்போன், பரமாத்மா, குறைகளும் பாவங்களும் அற்றவர், அளவிட முடியாத பெருமைகள் உடையவர் என்றெல்லாம் சாத்திரங்கள் வர்ணிக்கின்றன.

பகவான் விஷ்ணுவின் ஐந்து நிலைகள்

1. பரம் : பரமபதத்தில் இறைவன் தேவியரோடு இருக்கிறார். நித்திய சூரிகள் அங்கு கைங்கர்யம் (தொண்டு) செய்து கொண்டு ஆனந்தமாக உள்ளனர். **2. வியூகம்:** பரமபதத்தில் இருந்து பக்தர்களின் அன்பிற்காக இரங்கி பாற்கடலில் பக்தர்களுக்குக் காட்சி தரல். **3. விபவம் (இறங்கி வரல்) :** அவதாரங்களாக மண்ணுக்கு இறங்கி வருதல். **4. அந்தர்யாமித்வம்:** உயிர்களின் உள்ளே இருந்து இயக்குதல், **5. அர்ச்சை:** சாதாரண ஜீவர்கள் இறைவனை வழிபடவும் அவர்களை ஆட்கொள்ளும் பொருட்டும் பகவான் தம்மை எளிமையாக்கிக் கொண்டு அர்ச்சையில் (மூர்த்தி / சிலை வடிவில்) எழுந்தருளல்.

வைணவத்தைக் கடைப்பிடிக்கும் பாங்கினை ஒட்டி இரண்டாக வகுப்பர்.

1. பாஹ்யம் (வெளி வைஷ்ணவம்)

அ. ரூபம் - சங்கு சக்கரம், திருமண், துளசிமாலை போன்ற அடையாளங்களைத் தரித்தல், ஆ. இறைவனின் திருநாமத்தைத் தன் பெயராகக் கொள்ளுதல், இ. அடியேன், தேவரீர் போன்ற வைஷ்ணவ பரிபாஷையை உபயோகித்தல்

2. ஆப்யந்தரம் (உள் வைஷ்ணவம்)

ஞானம், பக்தி, வைராக்கியம் ஆகிய குணங்கள் நிறைந்தவராக இருத்தல்.

மூவகை வைணவர்கள்

அ. சத்கார யோக்கியர்: வெளிப்புறத்தில் மாத்திரம் வைஷ்ணவ அனுஷ்டானங்களோடு இருப்பர்.

ஆ. சகவாச யோக்கியர்: எல்லா சத்குணங்களோடும், ஞானபக்தி நெறிமுறையோடும் எப்போதும் வாழ்பவர்கள்.

இ. சதானுபவ யோக்கியர் : இவர்களைப் பார்த்த மாத்திரத்திலேயே இவர்கள் ஞான, பக்தி வைராக்கியத்தில் திளைத்திருப்பதை உணர முடியும்.

தசவித வைஷ்ணவம்

1. அத்வேஷி - பெருமாளின் மீதும் அடியார் மீதும் வெறுப்பற்றவர், 2. அனுகூலர் - அத்வேஷியாகவும் நட்போடும் இருப்பவர். 3. திருநாமதாரி - மேற்கண்டவற்றோடு இறைவன் திருப் பெயரைத் தம் பெயராகக் கொண்டவர்.

4. சக்ராங்கி - இறைவன் திருச்சின்னங்களைத் தன் உடலில் தாங்கியவர். 5. மந்திரபாடி - திருவெட்டெழுத்தை முறையாக ஓதுபவர். 6. வைஷ்ணவன் - மேற்கண்டவற்றோடு புலன் இன்பங்களை விட்டு, பரமபதம் அடைய வேண்டி ஞான, பக்தி கர்மங்களைக் கடைப்பிடிப்பவன்.

7. ஸ்ரீவைஷ்ணவன் - மேற்கண்டவற்றோடு பற்றற்று இறைவனிடத்தில் சிந்தையை நிலைநிறுத்தியவன். 8. பிரபன்னன் - மேற்கூறிய தகுதிகளோடு இறைவனை அடைய சரணாகதியே சிறந்தது என்பதைத் தெளிந்து அதன் மூலம் இறைவனை அடையப் பாடுபடுபவன்.

9. ஏகாங்கி - மேற்கண்டவற்றோடு சரணாகதியும் கூட ஏற்றதல்ல என்று இறைவன் ஒருவனை மாத்திரமே உபாயமாகக் கொள்பவன்.

10. பரமஏகாந்தி - சரணாகதியும், இறைவனைப் பற்றும் உபாயமும்கூட ஏற்றதல்ல என்று நாராயணனுக்கு நெருக்கமாக உள்ள ஆச்சார்யனையே பற்றிப் பிடித்துக்கொள்பவன். ❖

லட்சியம் எந்த அளவுக்கு முக்கியமோ, அதே அளவிற்கு, அதற்கான பாதையும் முக்கியம். - சுவாமி விவேகானந்தர்

கலியமூர்த்தி ஐ.பி.எஸ்.

கல்வியால் முன்னேற்றம் பெறு!

ஒரு நரேந்திரரை சுவாமி விவேகானந்தராக மாற்றியது அவரது தாய் புவனேஸ்வரி அம்மையார். ஒரு சாதாரண மோகன்தாஸை மகாத்மாவாக மாற்றியது அவரது தாய். மேதகு அப்துல் கலாம் அவர்கள் இந்தியாவின் முதல் குடிமகனாக ஆன பிறகு, ''இவ்வளவு உயரத்திற்கு வந்ததற்குக் காரணம் யார்?'' என்ற கேள்விக்கு, ''என் தாயே முழுக்காரணம்'' என்றார்.

'மூளை வளர்ச்சி இல்லாத முட்டாளாகப் பிறந்த என்னை, ''நூலகத்திற்குப் போ, நீ புத்திசாலி'' என்று கூறி, அறிவுப்பூர்வமாக மாற்றியது எனது ஏழைத்தாய்' என்று மின்சார பல்பைக் கண்டுபிடித்த தாமஸ் ஆல்வா எடிசன் எழுதுகிறார். மாமனிதர்களின் தாய்மார்கள் அனைவருமே பிள்ளைகளுக்கு ஒழுக்கத்தைப் போதித்தவர்கள்; அவர்களின் உடலையும் மனதையும் சீராக்கியவர்கள்.

கல்வியோடு ஒழுக்கம்

தாயை அடுத்து ஒருவரது வாழ்க்கையை ஒழுக்கம் பண்படுத்துகிறது. 'தீயொழுக்கத்தை அகற்றி நல்லொழுக்கத்தைத் தராத கல்வி, கல்வியே இல்லை' என்கிறார் சுவாமி விவேகானந்தர். விளைச்சலைத் தராத வயலும் ஒழுக்கத்தைத் தராத கல்வியும் வீணானது. இள வயதிலே புயல் போல வருகிற உணர்ச்சிகளை யாரொருவர் அடக்கி ஆளக் கற்றுக் கொள்கிறாரோ, அவர்தான் அமைதியையும் மகிழ்ச்சியையும் பிற்காலத்திலே ஆள முடியும்.

சமீபத்தில் ஓர் அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில் ஒபாமா உரையாற்றியபோது, 'அமெரிக்காவில் பல வருடங்களாக ஒருவருக்கு ஒரு கணிப்பொறி இருக்கிறது. இந்தியாவில் நூறு பேருக்குக்கூட ஒரு கணிப்பொறி இல்லை ஆனால் அந்தத் துறையில் மைக்ரோசாப்ட் நிறுவனத்திற்கு சத்யாநாதெல்லா, கூகுள் நிறுவனத்திற்கு சுந்தர்பிச்சை என்று 60% பேர் இந்தியர்கள், குறிப்பாகத் தமிழர்களும் பெண்களுமே நிறைந்திருக்கின்றார்களே, உங்களுக்கெல்லாம் திறமை இல்லையா?' என்று கேட்டார்.

அமெரிக்கக் குடியுரிமை பெற்ற ஓர் இந்திய ஆசிரியை, 'அமெரிக்காவில் ஆசிரியர்களும், பெற்றோர்களும் பிள்ளைகளுக்குக் கல்வியை மட்டும் சொல்லித் தருகிறீர்கள். எங்கள் இந்தியாவிலே குறிப்பாக, தமிழகத்திலே ஆசிரியர்களும் பெற்றோர்களும் பிள்ளைகளுக்குக் கல்வியோடு ஒழுக்கத்தையும் சொல்லிக் கொடுக்கிறார்கள். அதைக் கற்றுக் கொள்ளும் வரை உங்களால் எங்களை ஜெயிக்க முடியாது'' என்றார்.

உடல் வலிமை

ஒழுக்கத்தை அடுத்து வருவது உடல் வலிமை. உடல் மற்றும் மன பலத்தைப் பற்றிப் பேசி ஒரு பெரிய உந்து சக்தி அளிக்கும் பேச்சாளர் உலகில் விவேகானந்தரைப் போன்று யாரும் இல்லை.

தனது உடலுக்காகப் பயிற்சி செய்ய நேரம் ஒதுக்க முடியவில்லை என்று சொன்னால் வாழ்க்கைப் பயணம் பாதியிலேயே நின்று விடும். அதனால்தான் திருமூலர், 'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்' என்று கூறினார்.

'அரும்பு கோணினால் மலராகும், கரும்பு கோணினால் பாகாகும், இரும்பு கோணினால் யானையை வெல்லலாம், நரம்பு கோணினால் நாமதற்கு என் செய்வோம்?'

கல்வியின் சிறப்பு

'கல்வியின் மூலமாகத் தனது

அறிவை வளர்த்துக் கொள்வது மட்டுமே மனிதனின் தலையாய கடமை' என்று உறுதிபடக் கூறினார் சுவாமிஜி. படிப்பின் மூலமே ஒருவன் தன்னைப் பெரிய மனிதனாக உருவாக்கிக் கொள்ள முடியும் என்பதை அடித்துக் கூறியது மட்டுமன்றி வாழ்ந்தும் காண்பித்தார்.

கல்வியின் சிறப்பை உணர்ந்த காரணத்தினால்தான், 'படிக்காமல் இருப்பதைவிட பிறக்காமல் இருப்பதேமேல்' என்றார் பேரறிஞர் பிளேட்டோ.

'இந்த உலகையே மாற்றக்கூடிய ஓர் ஆயுதம் கல்வி' என்றார் நெல்சன் மண்டேலா. 'பெற்ற பிள்ளை கைவிட்டாலும் கற்ற கல்வி கைவிடாது' என்றார் மகாத்மா காந்தி. 'முதுமையை முன்னிட்டு, முன்னதாகச் செய்து கொள்கின்ற பாதுகாப்புப் பணிகளிலேயே மிகவும் உயர்ந்தது கல்வி' என்றார் அரிஸ்டாட்டில்.



ரஷ்யப் புரட்சிக்குப் பிறகு செஞ்சதுக்கத்தில் நின்று உரையாற்றிக் கொண்டிருந்த லெனின் மிகப் பெரிய கூட்டத்தைப் பார்த்து, ''உங்களுக்கு மூன்று கடமைகள் உள்ளன. அவற்றை நிறைவேற்றினாலேயே ரஷ்யாவை உலக அரங்கிலே நான் எடுத்துச் செல்ல முடியும்'' என்று கூறினார்.

ஒரு மாணவன் எழுந்து, ''முதல் கடமை என்ன?''என்று கேட்டான். ''படியுங்கள்'' என்று சொன்னார். ஒரு மாணவி, ''இரண்டாவது கடமை என்ன?'' என்று கேட்டாள். ''படியுங்கள்'' என்றே சொன்னார். ஒரு முதியவர், ''மூன்றாவது கடமை எங்களுக்கு என்ன?'' என்று கேட்டார். ''படியுங்கள்'' என்றே சொன்னார்.

பட்டப்படிப்பை முடித்ததும் படிப்பை முடித்ததாக நாம் எண்ணினால் நாம் எண்ணிய தூரத்தைக் கடக்க முடியாது. நினைத்ததை அடைய முடியாது. அணுகுண்டுகூட ஒருமுறைதான் ஓசையுடன் வெடிக்கும். புத்தகங்கள் திறக்கும் பொழுதெல்லாம் ஓசையில்லாமல் வெடிக்கும். அது தான் புத்தகங்களின் சிறப்பு. வாளின் கூர்மையும் நூலின் கூர்மையுமே ஒரு நாட்டை ஆள்கிறது.

இந்த உண்மைகள் தெரிந்ததினால்தான் நஞ்சு கொடுக்கும் நேரம் வரை கிரேக்க நாட்டுக் கவிதைகளைப் படித்துக் கொண்டும், கேட்டுக் கொண்டுமிருந்தார் சாக்ரடீஸ். தூக்குக் கயிற்றை முத்தமிடும் வரை படித்துக் கொண்டிருந்தார் உமர்முக்தார். தூக்கு மேடைக்கு அழைத்துச் செல்லும்வரை படித்துக் கொண்டிருந்தார் பகத்சிங்.

நம் எல்லோர் மனதிலும் இடம் பிடித்த மாமனிதர் அப்துல்கலாம் அவர்கள், 'படித்தால் மட்டுமே பாரதத்தால் பாராள முடியும்' என்று படித்துப் படித்துச் சொன்னார்.

'ஏராள செல்வத்தை ஈதலெனும் பிள்ளைக்கு சீராய்த்தரும் கல்வி சீர்' என்பது நபிமொழிக் குரல். 'அரும் பரிசு பிள்ளைக்கு ஆயிரம் ஈதலினும் பெரும் பரிசு கல்வி', 'வெள்ளத்தால் போகாது, வெந்தணலால் வேகாது, வேந்தராலும் கொள்ளத்தான் இயலாது, கொடுத்தாலும் நிறைவின்றிக் குறையாது'. 'செல்வம் கொடுக்கக் கொடுக்கக் குறையும், கல்வி கொடுக்கக் கொடுக்க நிறையும், கொடுக்கக் கொடுக்கக் குறையாமல் நிறைவது கல்வியும் அன்பும் மட்டும்தான்' என்றார்கள் பெரியோர்கள்.

கல்வி படிக்க ஆரம்பிக்கும்போது கஷ்டமாகத்தான் இருக்கும். வாழ்க்கை முழுவதும்

ராமகிருஷ்ண மிஷன் கல்லூரிகளின் சாதனை

1. கோயம்புத்தூர் ராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா கல்வியியல் கல்லூரி **NACC** யால் **4**-கிற்கு **3.82** மதிப்பெண்களுடன் **5** ஆண்டுகளுக்கான **Grade 'A++ rank'** என்ற தர நிர்ணயம் பெற்றுள்ளது.

இந்தியாவிலுள்ள கல்வியியல் கல்லூரிகளில் இதுவே அதிக மதிப்பெண் என்பது குறிப்பிடத்தக்கது.

2. NAAC - ன் அகில இந்திய அளவில் **3** சுற்று முடிவுகளுள் சென்னை, மயிலாப்பூர், ராமகிருஷ்ண மிஷன் விவேகானந்த கல்லூரி **Grade A+** என்ற தகுதியைப் பெற்றுள்ளது. இது **4** புள்ளிகளுக்கு **3.56** என்ற அளவில் **89%**க்கு ஈடானது. இத்தர நிர்ணயமும் **11.09.2022** வரையிலான **5** ஆண்டுகளுக்கானது.

MHRD -யின் தூய்மை இந்தியா திட்டத்தின் அகில இந்திய கள ஆய்வுகளின் அடிப்படையில் **3,500** பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் பங்கேற்று, **174** நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டதில் விவேகானந்த கல்லூரி **3**-ஆவது இடம் பெற்று சிறப்பிடம் வகிக்கிறது.

மத்திய அரசின் சார்பில் அமைச்சர் திரு. பிரகாஷ்ஜவடேகர் இதற்கான தரச்சான்றினை வழங்கினார்.

SRINIVASA TOUR OPERATORS

Chennai : Ayanavaram Opp. ESI Hopital, Cell : 97100 25326,
B/o. : Kalyan Nagar, West Tambaram, 98413 93686, 2645 2644
Email : srinivasatour23@gmail.com Web : www.srinivasatour.com

6 நாள் சாயி பாபா - 26.11.17 ரூ. 6,800
7.1.18, 28.1.18, 18.2.18, 4.3.18, 18.3.18
மந்திராலயம், பண்டரிபுரம், சனி சிங்கனாப்பூர், குஸ்நேஸ்வர் ஜோதிர்லிங்கம், எல்லோரா, ஷீரடி

7 நாள் கேரளா - 12.2.18 ரூ. 8,800
5.3.18, 26.3.18 – மூணாறு, ஆலப்புழா (Boat House) – கொச்சி – எர்ணாகுளம்

16 நாள் காசி - 2.3.18, 11.5.18 ரூ. 15,800
புவனேஸ்வர், பூரி, அவுரா, காசி, கயா, புத்தகயா, அயோதி, திருவேணி சங்கமம், ஹரிதுவார், ரிஷிகேஷ், அமிர்தசரஸ், வாகாபார்டர், மதுரா, பிருந்தாவனம், ஆக்ரா, டெல்லி

11 நாள் காசி - 20.2.18, 1.5.18, 28.5.18 ரூ. 9,900
அவுரா, காசி, கயா, திருவேணி சங்கமம், ஆக்ரா, மதுரா, டெல்லி

9 நாள் அந்தமான் - 20.1.18, 20.3.18 ரூ. 28,000
கப்பலில் செல்லுதல் – விமானத்தில் திரும்புதல்

7 நாள் விமான மூலம் அந்தமான்
15.2.18, 12.4.18 - ரூ. 30,000

14 நாள் நவ (9) ஜோதிர்லிங்கம் - 11.2.18 ரூ. 15,800
4.3.18 – சோம்நாத், பாவ்நகர் கடல் கோயில், பீமா சங்கர், குஷ்நேஸ்வர், திரியம்பகேஸ்வர், மகாகாளேஸ்வர், ஓம்காரேஸ்வர், ராமேஸ்வரம்

8 நாள் கோவா, மும்பை - 7.4.18, 14.4.18 ரூ. 8,800

13 நாள் ராஜஸ்தான் : 7.11.17, 20.2.18 ரூ. 13,800
ஜெய்பூர், உதய்பூர், அஜ்மீர், புஷ்கர், மவுண்ட்அபு, ஜெய் சல்மார், ஜோத்பூர், ரனக்பூர், எலி கோவில்

16 நாள் பத்ரிநாத், கேதாரிநாத், கங்கோத்ரி யமுனோத்ரி 8.5.18, 23.5.18 ரூ. 16,800

5 நாள் கோவா - 12.1.18-16.1.18 ரூ. 6,800

10 நாள் இலங்கை - 5.2.18, 1.3.18, 2.4.18 ரூ. 48,000
முன்னேஸ்வரம், அனுராதபுரம், திருகேடிஸ்வரம், யாழ்பாணம், திரிகோணமலை, மட்டக்களப்பு, தம்பூலா, கண்டி, நுவரலியா, கதிர்காமம், கொழும்பு, முல்லைத் தீவு

விமானம், ரயில், பஸ் கட்டணம், தங்கும் வசதி, உணவு
10 நபருக்கு ஒருவர் இலவசமாக வரலாம்.

Estd : 1989 திருச்சுழி ஸ்ரீ பழனியம்மாள் துணை உ சிவமயம் திருச்சுழி ஸ்ரீ மாரியம்மாள் துணை

காலை காபி, 3 வேளை சைவ உணவு, தங்கும் வசதி தினசரி 1 லிட்டர் மினரல் வாட்டர் இரண்டாம் வகுப்பு இரயில் சுற்றுலாக்கள்

❖ இரயில் பிரயாணத்தின் போது சுற்றுலா அன்பர்களுக்கு உணவு வழங்கப்படும் ❖ 10 டிக்கெட்டுக்கு ஒரு டிக்கெட் இலவசம்

07-02-2018 (மஹா சிவராத்திரி சுற்றுலா) & 08-03-2018 & 10-04-2018 & 06-05-2018 & 20-05-2018 & 04-06-2018 முதல்
பூரி–புவனேஷ்வர்– கோனார்க்–கல்கத்தா– **கயா** – புத்தகயா – **காசி** – திரிவேணி 10 நாட்கள் ரூ. 9100/-
❖ இத்துடன் **ஹரித்துவார் - ரிஷிகேஷ் - அமிர்தசரஸ்** – வாகாபார்டர் – டெல்லி – ஆக்ரா – மதுரா சேர்த்து 15 நாட்கள் ரூ. 13990/-

08-03-2018 & 10-04-2018 & 06-05-2018 & 20-05-2018 முதல் **கல்கத்தா - கயா - புத்தகயா** – காசி – வியாசகாசி – சாரணாத் – நேப்பாள் – மணக்கமனா – **போக்ரா - முக்திநாத்** (ஹெலிகாப்டர் கட்டணம் தனி) சேர்த்து 15 நாட்கள் ரூ. 14900/-

06-05-2018 & 20-05-2018 & 04-06-2018 முதல் ஆக்ரா–டெல்லி–ஹரித்துவார்– ரிஷிகேஷ்–**பத்ரிநாத்-கேதார்நாத்** 14 நாட்கள் ரூ. 11990/-
❖ மேற்கண்ட சுற்றுலாவுடன் **கங்கோத்ரி, யமுனோத்ரி** 18 நாட்கள் ரூ. 14990/-

20-11-2017 & 18-12-2017 & 25-12-2017 முதல்
மந்த்ராலயம்–பண்டரிபுரம்– சனிசிங்கனாப்பூர்–**ஷீரடி** உள்பட 5 நாட்கள் ரூ. 5490/-
❖ மேற்கண்ட சுற்றுலாவுடன் **ஷீரடியில் ஒரு நாள் கூடுதல்** 6 நாட்கள் ரூ. 5990/-

08-03-2018 & 10-04-2018 & 06-05-2018 முதல் பீமா சங்கர் – **மும்பை** – பஞ்சவடி – திரியம்பகேஸ்வரர் – **ஷீரடி** – சனிசிங்கனாப்பூர் – கிரிஸ்னேஸ்வர் – **எல்லோரா** – நாகநாதம் – வைத்திய நாதம் – **உஜ்ஜெயின்** – மகாகாளேஸ்வரர் – ஓம்காரேஸ்வர் – சோமேஷ்வர் – கல்யாண துவாரகா – ஹரசித்திமாதா – மூலதுவராகா – பேட்டி துவாராகா – நாகேஸ்வர் – அபுரோடு – ஸ்ரீநாத் துவாரகா – காங்ரோலி துவாரகா – அகமதாபாத் – டாஷவ் துவாரகா உள்பட 18 நாட்கள் ரூ. 16990/-

20-11-2017 & 25-12-2017 & 08-03-2018 & 10-04-2018 & 06-05-2018 முதல் – செயின்ட் பிரான்எலீஸ் சர்ச் – மீராமர் கடற்கரை – டோனோபால் கடற்கரை, அஞ்சுனா கடற்கரை – அழகிய கோவாவை படகு மூலம் சுற்றிப்பார்த்தல் 5 நாட்கள் ரூ. 6900/-

அந்தமான் சுற்றுலா கப்பல் & விமானம் மூலம் மாதந்தோறும் நடைபெறுகிறது. அந்தமானில் உணவு. தங்கும் வசதி. சுற்றிப்பார்க்கும் வாகன செலவு உள்பட 4 நாட்கள் (*கப்பல் மற்றும் விமானக்கட்டணம் தனி) ரூ. 7400/-

❖ 100நாட்களுக்கு முன் முழுத்தொகையையும் செலுத்துபவருக்கு கட்டணத்தில் 5% கழிவு உண்டு

சன் டிராவல்ஸ்

Prop. K. சிதம்பரம், B.Sc., B.Ed.,
செல் : 98421 56668, 99949 70179

மதுரை : 5, மேல வெளி வீதி, இரயில் நிலையம் எதிரில், கருப்பட்டி சத்திரம் உட்புறம், மதுரை - 1. Ph : 2341133, 4230408
சென்னை : 20, நடேசன் தெரு, தி.நகர், சென்னை-17. Ph : 24359194, 93645 59194
கும்பகோணம் : பிரசாத் போட்டோ ஸ்டுடியோ 13-B, கோதண்டபாணி தெரு, கும்பகோணம். Ph : 2433550, 98437 32391

இன்பத்தைக் கொடுக்கும்.

மாக்யவல்லியின் புத்தகமே ஒரு டால்ஸ்டாயை உருவாக்கியது. டால்ஸ்டாயின் ஒரு புத்தகம்தான் மகாத்மா காந்தியை உருவாக்கியது. மகாத்மா காந்தியின் சத்திய சோதனை புத்தகம்தான் மார்ட்டின் லூதர் கிங்கை உருவாக்கியது. ஒரு Eternal Velocity என்கிற புத்தகம்தான் மேதகு அப்துல்கலாம் அவர்களை அணு விஞ்ஞானியாக மாற்றியது.

வலிமையும் நம்பிக்கையும்

'நீ என்னவாக ஆக வேண்டும் என்று நினைக்கிறாயோ, அதுவாகவே ஆகிவிடுவாய்' என்கிறார் சுவாமிஜி.

'எண்ணிய எண்ணியாங்கு...' என்றார் வள்ளுவர். 'மனித மனதினுடைய வலிமை மிகப் பெரியது. அதனிலும் அந்த ஆன்மாவினுடைய வலிமை மிகப் பெரியது' என்றார் சுவாமிஜி. 'தன்னிடம் உள்ள ஆன்மாவின் வலிமையை இந்த மக்களுக்கு உணர்த்தி, அதை வெளிப்படுத்தச் செய்வதுதான் என்னுடைய லட்சியம்' என்று கூறினார்.

ஆனால் நாம் நம் மனதின் வலிமையை நினைத்துப் பார்ப்பதே இல்லை. நம்முடைய எல்லைக் கோட்டை நாமே சுருக்கிக் கொள்கிறோம், மனதினுடைய வலிமை தெரியாததனால்.

1939-இல் கையெறி குண்டு பயிற்சி செய்து கொண்டிருந்தார் ஒரு வீரர். கையிலிருந்து குண்டு எறியும்போது கையிலேயே குண்டு வெடித்து, வலது கை துண்டாகி விடுகிறது. போன கையை நினைத்து அவர் அழவில்லை. இறைவன் கொடுத்த இன்னொரு இடது கையை உபயோகிக்க முடியுமா என்று சிந்தித்தார். இரண்டாவதை எடுத்துக் கொண்டார்.

ஒலிம்பிக்கில் போட்டியிட வேண்டும் என்பது அவருடைய ஆசை. 1948-இல் கலந்து கொள்கிறார். இவரைப் பார்த்தவுடன் எல்லோரும் சிரிக்கிறார்கள். உடனே குருவிடம் சென்று கூறுகிறார். அவர் கூறுகிறார், 'நீ பெரிய முயற்சியிலே ஈடுபடும் போது இந்த உலகம் உன்னைப் பார்த்து வீண் முயற்சி என்று சொல்லும், நீ வெற்றி பெற்றவுடன் இந்த உலகம் உன்னை விடாமுயற்சி உடையவன் என்று பாராட்டும். போய் கலந்து கொள்' என்கிறார்.

1948-இல் ஒற்றைக் கையுடன், அதுவும் இடது கையுடன் ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொண்டு கார்லே என்ற அந்த ஹங்கேரிய கேப்டன் சாதித்த சாதனையை இன்று வரை யாரும் முறியடிக்கவில்லை என்பதுதான் உண்மை. அதுதான் லட்சியம். 'என்ன தடைகள் வந்தாலும் தடையை நீக்கி முன்னேறு' என்று விவேகானந்தர் சொன்னதற்குக் காரணம் அதுதான்.

நம்பிக்கையைப் பற்றி சுவாமிஜியைத் தவிர அந்த அளவுக்கு வேறு யாரும் சொன்னதில்லை. அவர் கூறுகிறார்: 'முப்பத்து முக்கோடி தேவர்களின் மீதும் நீ நம்பிக்கை வைத்திருந்தாலும் கவலையில்லை. உன்னை நீ நம்பவில்லை என்றால் உனக்கு கதிமோட்சமே கிடையாது'. தன்னையே நம்பாதவனை உலகத்தில் யாரும் மதிக்க மாட்டார்.

முயற்சி செய், முயற்சி செய்யவில்லை என்றால் அது உன்னுடைய தவறு, முயற்சிகள் தவறலாம். முயற்சி செய்யத் தவறலாமா? முயற்சி என்பது முடிந்தவரை செய்வதல்ல, முடியும் வரை செய்வது. தான் எடுத்துக் கொண்ட காரியத்தை முடிக்கும்வரை செய்வதே முயற்சி.

உலகில் எல்லாம் வெளிச்சமாகத் தான் இருக்கிறது. யாரும் கண்ணீர் விட்டுக் கதற வேண்டியதில்லை. போராடத் தெரிந்த அத்தனை பேருக்கும் வெற்றிக் கதவுகள் திறந்தே இருக்கின்றன.

எவனொருவன் வெற்றிக் கோட்டைக் குறைந்த நேரத்தில் கடக்கிறானோ, அவன் பயிற்சி மைதானத்திலே அதிகம் வியர்வை சிந்தியவனாகத்தான் இருக்க முடியும்.

நாம் சரித்திரத்தைப் படிப்பவர்களாக மட்டுமின்றி, சரித்திரத்தைப் படைப்பவர்களாகவும் மாற வேண்டும். நம்முடைய ஆன்மாவின் சக்தி மிகப் பெரியது. அதை யாராலும் வெல்ல முடியாது. அதைப் புரிந்து கொண்டு வாழ்வோமாக. ❖

மேன்மையான குணங்கள் நான்கு: சொந்த விஷயத்தில் சிந்தனையுடன் நடப்பது, பெரியவர்களிடத்தில் பணிவு, உலகத்தாருக்கு உபகாரம், சகமனிதர்களை மதிப்புடன் நடத்துவது. - கன்ஃபூஷியஸ்

ஈடுபாடு, பங்கேற்பு, பொறுப்புணர்வு ஆகிய இந்த மூன்று அம்சங்கள்தான், செயல்திட்டத்தின் தாரக மந்திரங்கள். - டாக்டர் அப்துல்கலாம்

படக்கதை :
சுனிதா வசு

சகோதரி நிவேதிதை - 6

தமிழில்:
பைரவ், மோகனா

118 நிவேதிதை தமது பள்ளியை தேசியச் சிந்தனைகளுடன் நடத்தி வந்தார்.

மற்ற நாடுகளைவிட இந்தியா, சிறந்த பெண்மணிகளைக் கொண்ட நாடு.

119 பங்கிம் சந்திரனின் 'வந்தே மாதரம்' பாடலை எவனுமே பாடக் கூடாது. அது இந்த அடிமை இந்திய ஜனங்களுக்கு சுதந்திர தாகத்தை ஏற்படுத்துகிறது.

120

குழந்தைகளே, நமது பள்ளியின் தினசரி பிரார்த்தனைப் பாடலாக பிரிட்டிஷ் அரசு தடை செய்திருக்கும் 'வந்தே மாதரம்' பாடுவோம்.

121 தாய்மார்களே! இந்திய தேசத்துப் பொருட்களையே வாங்கவும் இந்தியத் தயாரிப்புகளை ஊக்குவிக்கவும் நாம் எல்லோரும் நம் பள்ளியில் நூல் நூற்றலை ஆரம்பிப்போம்.

122 குழந்தைகளே! இதுதான் அன்னை காளி அருள் பாலிக்கும் தக்ஷிணேஸ்வர கோயில். இதைத் தொடர்ந்து பேலூர் ஸ்ரீராமகிருஷ்ண மடத்திற்கும் செல்ல உள்ளோம்.

123 இது விக்டோரியா ஹால். அவர் புகழ் பாடக் கட்டப்பட்டது. ஆனால் உங்கள் ராணி சீதா தேவிதான் என்பதை எப்போதும் மனதில் கொள்ளுங்கள். அந்நிய ராணிகளை அல்ல.

124 இது இந்தியாவின் தொன்மையான நகரங்களின் சின்னங்களில் ஒன்று.

அருங்காட்சியகம் நன்றாக இருக்கிறது அக்கா.

125 சுவாமிஜி 1902-ல் மறைந்தார். அவருக்காக ஒரு கோயில் பிற்காலத்தில் பேலூர் மடத்தில் எழுப்பப்பட்டது.

சுவாமிஜி, தாங்கள் இவ்வளவு சீக்கிரம் மகாசமாதி அடைய வேண்டுமா? இனி நான் தங்களது இந்தியப் பணியில் என்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொள்வேன்.

126 இலக்கியம் மற்றும் பள்ளிப் பணிகளுக்கிடையில் இந்திய விடுதலை இயக்கத்திற்கும் நீங்கள் ஓயாது பாடுபடுகிறீர்களே.

ஆம் அரவிந்தரே. ஏனெனில் இந்தியாவின் முன்னேற்றத்திற்கு விடுதலை மிகவும் அவசியம்.

127 இந்தியர்களே, நீங்கள் மகத்தான வீர வம்சத்துப் புத்திரர்கள். இனியும் அடிமைகளாக இருக்காதீர்கள்.

128 சுவாமிஜி விரும்பியது போலவே நாடு மீண்டும் உயிர்த்தெழ பெண்களுக்கு விழிப்புணர்வு உண்டாக்க வேண்டும்.

129 என் உயிரினும் மேலான இந்தியச் சகோதரிகளே, நீங்கள் உங்களது லட்சியங்களையும் வழக்கங்களையும் கைவிடாமல் நல்ல கல்வியைப் பெற வேண்டியது மிக அவசியம்.


130 உங்களைப் போன்ற இந்தியப் பெண்களிடம் மட்டுமே தூய்மை, நன்றியுணர்ச்சி, சுயநலமின்மை, தாயன்பு போன்றவற்றை நான் காண்கிறேன். உங்களைப் போற்றுகிறேன்.


131 இந்தியப் பெண்களின் லட்சியங்களாக சீதை, சாவித்திரி, உமா, காந்தாரி போன்றவர்களின் வரலாற்றை இந்தத் தேச மக்களின் இதயங்களில் புகுத்துவேன்.


132 சகோதரி, தான் சென்ற இடங்களிலெல்லாம் தாய்நாட்டுக்குச் சேவை செய்த அகல்யாபாய், ஜான்சிராணி லக்ஷ்மிபாய் போன்றவர்களின் வாழ்க்கையையும் போற்றி விளக்கினார்.


133 சகோதரி உங்கள் உடல் இப்படி சீர்குலைந்திருக்கிறதே.
ஆம், அபலா போஸ். இந்த டார்ஜிலிங்கில் தான் என் இறுதிமூச்சு பிரியும்.

134 1911, அக்டோபர் 13 அன்று காலையில் இமயச் சிகரங்களில் சூரிய ஒளியைத் தரிசித்தபடி வேதப் பிரார்த்தனையை ஓதியவாறு தமது இன்னுயிரை நீத்தார் சகோதரி நிவேதிதை.



135 டார்ஜிலிங்கில் நிவேதிதையின் திருவுடல் தகனம் செய்யப்பட்ட இடத்தில் ஒரு நினைவிடம் அமைக்கப்பட்டது.

'தமது அனைத்தையும் இந்தியாவிற்கு அளித்த சகோதரி நிவேதிதை இங்கே ஓய்வெடுக்கிறார்' என்று அங்கு கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது.

136 தமது வசதியான அயல்நாட்டு வாழ்க்கையைத் துறந்து இந்தியாவின் முன்னேற்றத்திற்காக எளிய, தவவாழ்க்கையை வாழ்ந்தவர் சகோதரி நிவேதிதை.

137



ஆஹா! அவர் தன் வாழ்க்கையை முழுவதுமாக இறைவனின் பாதங்களில் சமர்ப்பித்தது இந்திய ஆன்மாவிற்குப் புத்துயிர் அளித்தது.

138 நிவேதிதை என்றால் 'அர்ப்பணிக்கப்பட்டவள்' என்பது பொருள். என்னவொரு பொருத்தமான பெயர் அவருடையது!



139 நிவேதிதையின் திருநாமமே அவரைப் பற்றி முழுமையாக விளக்குகிறது.

நிறைவுற்றது.

அவன் எழுதிவிட்டான்!

மார்க்ட்வைன் ஒரு பிரபலமான எழுத்தாளர். அவருடைய சொந்த ஊரான ஹன்னிபால் என்ற இடத்திற்கு காம்ப்பெல் என்பவர் சென்றிருந்தார்.

அப்போது அங்கே இருந்த ஒரு கடைக்காரரிடம், ''மார்க் ட்வைனை உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டார்.

அந்தப் பெரியவர் சொன்னார்: ''எனக்கு அவனை மிக நன்றாகவே தெரியும். அதுமட்டுமில்லை; அவனுக்குத் தெரிந்திருந்த அவ்வளவு கதைகளும் தெரியும். என்ன வித்தியாசம் என்றால் அவற்றை அவன் எழுதிவிட்டான். நான் எழுதவில்லை, அவ்வளவுதான்.''


மார்க்ட்வைன்

★★

வைத்தியர் சொன்னார்: "அப்பா! கடவுளின் அருளால் நீ உடல் நலம் பெற்று குணமாகி விட்டாய்"

நோயாளி: நல்ல வேளை டாக்டர். நான் உங்களுக்குப் பீஸ் கொடுக்க வேண்டாமல்லவா?

★★

ஒருவர் இறக்கும் தருவாயில் இருந்தார். பாதிரியார் அவருக்கு உபதேசங்கள் செய்து வந்தார். "அப்பனே! கெட்ட ஆவியைத் தூற்றுவாயாக! அது செய்யும் கெடுதல்களைப் பற்றி அதனிடம் எடுத்துக் கூறு" என்றார்.

ஆனால் மரண வாயிலில் இருந்த மனிதன் ஒன்றும் சொல்லவில்லை. அதனால் பாதிரியார் அவனிடம், "ஏனப்பா நீ நான் சொல்வதைக் கேட்க மாட்டேன்கிறாய்!" என்று கேட்டார்.

அவன் சொன்னான், "நான் சொர்க்கத்திற்குச் செல்கிறேனா அல்லது நரகத்திற்குச் செல்கிறேனா என்று தெரிவதற்கு முன்பாக நான் ஒருவரையும் விரோதித்துக் கொள்ள விரும்பவில்லை!" -டி.எம்.எஸ்.

வாசகர் கடிதம்

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம், அக்டோபர் -17, சகோதரி நிவேதிதையின் 150-ஆம் ஆண்டு பிறந்த விழா சிறப்பிதழ். முற்றிலும் வேறுபட்ட, அருமையான பொக்கிஷமாக அமைந்துவிட்டது.

ஆன்மிகப் பேரொளியில் சுவாமி ஆசுதோஷானந்தரின் அருள் கூற்று, சகோதரி முதல் பள்ளியை நிறுவியது, அன்னையுடன் பாச உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டது போன்ற தகவல்கள் இனிமை.

இவரின் தன்னலமற்ற சேவையினை மதித்து, இங்கிலாந்து அரசு அவருக்கு 'நீலப்பட்டய' மரியாதை செய்தது, இந்திய கலாச்சார பண்பாட்டினை இந்தியர்களுக்கே ஊட்டியது.

பாரத விடுதலை வேள்வியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி வீரமுரசு கொட்டியது, தாகூர், அரவிந்தர், மார்கோனியின் முன்னோடி ஜகதீஸ் சந்திரபோஸ் ஆகியோருடனான கருத்துணர்வு மேலோங்கியது, தமது தாய் மண்ணைத் துறந்து பாரத நாட்டில் சுவாமிஜியின் புதல்வியாய் பல விதங்களில் பரிணமித்தது, அந்நிய விளையாட்டான கிரிக்கெட்டை எதிர்த்து நமது பாரம்பரிய வீர விளையாட்டுகளில் வீரர்களை விழிப்படைய வைத்தது,

சேலத்தில் நம்மைச் சாடியது, மகாகவி பாரதியாரின் மானசீக குரு.... இப்படியாக எழுதிக் கொண்டே போகலாம்.

சுவாமிஜியின் வீரப்புதல்வியாக, குருதேவரின் தவப்புதல்வியாக, பாரதத்தின் மகளாக வலம் வந்த சகோதரி நிவேதிதையின் வரலாற்றைப் பல வழிகளில் வாசகர்களுக்கும் பக்தர்களுக்கும் அருளிச் செய்த விஜயத்திற்கு கோடானுகோடி நமஸ்காரங்கள்; நன்றி.

- சமு.சந்த்ரசேகர், வில்லியனூர், புதுச்சேரி.

சகோதரி நிவேதிதையின் வாழ்வும் பணியும் அவர் பாரத நாட்டிற்கு ஆற்றிய தன்னலமற்ற தொண்டும் மிகவும் அருமையாகத் தொகுக்கப்பட்டு நறுமண மாலையாக அக்டோபர் இதழ் திகழ்கிறது.

- கே.வைத்தியநாதேஸ்வரன், தஞ்சாவூர்.

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் அக்டோபர் இதழ் கூடுதல் பக்கங்களுடன் சகோதரி நிவேதிதையின் சிறப்பிதழாக பரிணமித்தது பெருமையளிக்கிறது.

நிவேதிதையைப் பற்றி தமிழகத்தில் ஏன் இந்தியாவிலேயே அதிகம் அறியப் படவில்லை என்ற குறை ராமகிருஷ்ண விவேகானந்த பக்தர்களிடையே அதிகம் உள்ளது. அதை நீக்கி சகோதரியைப் பற்றி அருமையான விவரங்களை அழகாக வெளியிட்டுள்ள விஜயத்திற்கு நன்றி, பாராட்டுகள். - என்.ஜெயராஜ், தர்மபுரி.

சகோதரி நிவேதிதை பற்றி அறியாதவரும் அறியும் வகையில் அவரைப் பற்றிய பல்வேறு பரிமாணங்களை எடுத்துக் காட்டியது அருமை - ஜெயஸ்ரீ, சென்னை.

Srivathsam

Traditional Retirement Homes near Kumbakonam

Let your Golden Years begin at Kumbakonam...

Senior Citizen Homes at Kalyanapuram near Kumbakonam (8 KM)
on the Kallanai-Poompuhar highway

ISAC ACCREDITATION

- DTCP Approved Layout & Project
- Full Home Ownership
- Proximity to several major temples
- Proximity to river Cauvery
- Outside the compound Bus facility
- On demand Vans/Taxis

BMQR ISO 9001 CERTIFIED

Certificate No: IS09IS170896

In-house Clinic & Nurses
Regular pro-active health checkups
Dedicated Ambulance
High Class Healthy Vegetarian Food
On premise Temple & Library
Yoga / Meditation Hall
Conference Hall | Seniors Gym

Come! Enjoy the enduring happiness of your golden years in an environment steeped in ethnic tranquility

SR REALTORS
CREATIVE HOMES & PROPERITIES

SR Realtors
2108-3, Attrankarai Salai, Kodiyanthottam, Ullur, Kumbakonam, Tamilnadu.
Mobile: +91 9600200655, +91 9790700765, 0435-2412118
+91 9791110895, +91 9600983655
e.mail: srrealtorssrivathsam@gmail.com | web: srestateskumbakonam.com

Volume-97, Issue-11. Sri Ramakrishna Vijayam (Tamil Monthly) November 2017. Regd. with the Registrar of Newspapers for India under No. 1107/1957. Postal Registration Number : TN/CH(C)/221/15-17. Licenced to post without prepayment TN/PMG(CCR)/WPP-145/2015-2017. Date of Publication : 24th of every month.

ABT Industries Ltd.,
62, Dr.Nanjappa Road, Coimbatore - 641 018.